விலை: ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 30 கதிர் 271 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 7, திங்கட்கிழமை 24.08.2015

## மகிந்த அரசின் ஊழல் குறித்து 7 ஆயிரம் முறைப்பாடுகள்!

கொழும்பு, ஓக.24

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்படும் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பிலான அனைத்து முறைப்பாடுகளும் புதிய அரசின் கீழ் துரிதமாக விசாரணை செய்யப்படும் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

புதிதாக அமைக்கப்படவுள்ள தேசிய அரசு தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த விசாரணை நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாக பலர் தப்புக் கணக்கு போட்டுள்ளனர். எனினும், எந்த காரணம் கொண்டும் விசாரணைகள் இடையில் நிறுத்தப்படமாட்டாது. ஊழல்வாதிகளுக்கு எதிராக சுமார் 7 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. விசாரணைகளை

பக்கம் 24.....

# கொழும்பு வருகிறார் நிஷா பிஸ்வால்

## ஐ.நா. அறிக்கை வெளியாவதற்கு முன்னர் இலங்கை அரசுடன் பேச்சு நடத்துவதற்கு

நியூயோர்க், ஓகஸ்ட் 24

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் போர்க்குற்ற விசாரணை அறிக்கை வெளியாவதற்கு முன்னதாக இலங்கை அரச தலைவர்களுடன் பேச்சு நடத்த தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால் நாளை கொழும்புக்கு வரவுள்ளார்.

கொழும்பு வரும் நிஷா பிஸ்வால் நாளை காலையில், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்து பேச்சு நடத்துவார். நிஷா பிஸ்வாலின் பயணத்துக்கு முன்னதாக, மீண்டும் வெளிவிவகார அமைச்சராக மங்கள சமரவீர இன்று பொறுப்பேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மங்கள சமரவீரவைத் தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் நிஷா பிஸ்வால் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். அவரின் பயணம், சிலவாரங்களுக்கு

பக்கம் 24.....



## ஐ.நா. விசாரணை அறிக்கை முன் கூட்டியே வெளியாகாது

### 48 மணி நேரத்துக்கு முன்பே இலங்கை அரசுக்கு கையளிக்கப்படுமாம்

கொழும்பு, ஓக. 24

இறுதிப் போரில் இடம்பெற்ற மீறல்கள் குறித்த ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் விசாரணை அறிக்கை, பகிரங்கமாக வெளியிடப்படுவதற்கு 48 மணி நேரம் முன்னதாகவே, இலங்கை அரசுக்கு கையளிக்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகம் மற்றும் இலங்கை அரசின் உயர்மட்ட தகவல்களை மேற்கோள்காட்டி, கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல்கள் முடிவடைந்துள்ள நிலையில், ஐ.நா விசாரணை அறிக்கை பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த அறிக்கை, விடுதலைப் புலிகள் மற்றும் முன்னைய மகிந்த ராஜபக்ச அரசுக்கு எதிராகக் கடுமையான குற்றச்சாட்டுகளை கொண்டதாக இருக்கும் என்று தகவல்கள்

பக்கம் 24.....

## கூட்டமைப்பையும் சந்திக்கிறார் நிஷா

யாழ்ப்பாணம், ஓக. 24

வடக்கு – கிழக்கில் பெரு வெற்றியீட்டி, தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும், தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வாலுக்கும் இடையில் நாளை மறுதினம் புதன்கிழமை சந்திப்பு இடம்பெறவுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றியீட்டிய பின்னர் இடம்பெறவுள்ள முதலாவது இராஜதந்திரச் சந்திப்பு இதுவாகும். தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால் இலங்கைக்கு நாளை வருகை தரவுள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் மேற்கொண்ட விசாரணையின் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதற்கு முன்னதாக, இலங்கை அரசு மற்றும் தமிழர் தரப்புடன் கலந்துரை

பக்கம் 24.....

**ஒற்றுமையை வலுப்படுத்துவதே தமிழர்களின் தலையாய கடமை**

| பக். 17

**இணக்கப்பாட்டு அரசில் தமிழர் தரப்பின் பங்கு**

| பக். 16

## கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நியமனம் இன்று அறிவிக்கப்படும்

### அதன் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிப்பு

திருமலை, ஓக. 24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் உறுப்பினர்களாக நியமிக்கப்படவுள்ளவர்களின் விவரம் இன்று வெளியிடப்படும் என அக்கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் ஐந்து லட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைத்திருந்தன. நாடாளுமன்றத் தேர்தலில் தேசியப் பட்டியல் ஆசனங்களைக் கைப்பற்றிய ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியன தமது தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் விபரங்களை தேர்தல் ஆணையாளருக்கு

பக்கம் 24.....

## தேசிய அரசு இன்று உதயம்; அமைச்சரவையும் நியமனம்

கொழும்பு, ஓக. 24

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் தலைமையிலான நல்லாட்சிக்கான தேசிய அரசு இன்று திங்கட்கிழமை முதல் செயற்படவுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் இன்று நடைபெறும் வைபவத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக 30 பேரும், பிரதியமைச்சர்களாக 40 பேரும் பதவிப்பிரமாணம் செய்துகொள்வார்கள் என அரச உயர்மட்டத் தகவல்கள் தெரிவித்தன. அதன்படி அமைச்சரவையின் எண்ணிக்கை 30ஆக வரையறுக்கப்படவுள்ளது.

தேசிய அரசுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 50 பேர்

பக்கம் 24....

## மீனவரின் வலையில் சிக்கியது மனித உடல்

### கற்கோவளம் கடற்பரப்பில் சம்பவம்

நெல்லியடி, ஓக.24

வடமராட்சி கற்கோவளம் கடற்பகுதியில் கடற்றொழிலுக்குச் சென்ற மீனவரின் வலையில் சடலம் ஒன்று அகப்பட்டுள்ளது. அந்தச் சடலம் நேற்று அதிகாலை கரைவலை மீன்பிடிக்காகக் கடலுக்குச் சென்ற தங்கவேல் ஜெயசுதன் (வயது–37) என்பவருடையது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த கடற்பரப்பில் நேற்றுக் காலை மீனவர்கள் தொழிலுக்குச் சென்ற சமயம் மீனவர் ஒருவர் வீசிய வலையில் குறித்த சடலம் சிக்கியுள்ளது. அதையடுத்து சடலத்தைக் கரைக்குக் கொண்டுவந்த மீனவர்கள் அது குறித்துப்

பக்கம் 24.....

## கோத்தாவிடம் இன்று விசாரணை

கொழும்பு, ஓக. 24

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சகோதரரும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்சவிடம் இன்று இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் விசாரணை நடத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ரக்ன லங்கா, அவன்காட் ஆயு தக்களஞ்சியசாலை, மிக் விமானக் கொள்வனவு, பங்கு விற்பனை [illegible] களைத் தவறாகக் கையாண்டமை உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் விசாரணை நடத்தப்படவுள்ளது என்று கூறப்படுகிறது.

கடந்த 14ஆம் திகதி கோத்தபாயவை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைக்கு அழைத்திருந்தபோதும், தேர்தல் காலமென்பதால் தேர்தல்கள் ஆணையாளரின் பணிப்புரைக் கமைய குறித்த விசாரணை பிற்போடப்பட்டது.

[illegible]விடம் ஏற்கனவே இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு

பக்கம் 24.....

## எதிர்க் கட்சித் தலைவர் பதவி சுதந்திரக் கட்சிக்கே

### மைத்திரிபால திட்டவட்டம்

கொழும்பு, ஓக. 24

எதிர்க்கட்சித் தலைவர் பதவி சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கே வழங்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டமொன்று நேற்று நடைபெற்றது. அதில் சுதந்திரக் கட்சி தேசிய அரசுக்கு ஆதரவளிக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய அரசுக்கு ஆதரவளிக்க விரும்பாதவர்கள் சுயாதீனமாக இயங்க முடியும். எனினும், சுதந்திரக் கட்சிக்கே எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி இதன்போது தெரிவித்

பக்கம் 24.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையான அளவு மணல் நல்லூரில் பரவப்பட்டுள்ளது

## மாநகர ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.24
மணல் வீணாகிச் செல்வதைத் தடுக்கும் நோக்கில், இந்தமுறை நல்லூர் திருவிழாவில் ஆலயத்தைச் சுற்றி தேவையான அளவா ன 50 லோட் ம்ணல் மாத்திரமே டரவப்பட்டுள்ளது என்று யாழ்.மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்தார்.

முன்னைய காலங்களில் 100க்கும் மேற்பட்ட லோட் மணல் பரவப்பட்டு வந்தது. தற்போது வடமராட்சி கிழக்கில் பல இடங்கள் பெரும் பள்ளங்களாகி விட்டன.அதனால் சில மாதங்களாக மணல் பெறுவது கடும் சிரமமாக உள்ளமை தெரிந்ததே.

இந்நிலையில் வடமராட்சி கிழக்கு மக்களின், கிராமத்தின் நன்மை கருதியும் சூழல் பாதுகாப்பின் அவசியம் கருதியும் அதிகளவில் மணல் அகழ்வதனைத் தடுக்கும் நோக்கிலும் அவ்வாறு அகழப்படும் மணல் வீணாகுவதனைத் தடுக்கும் நோக்கிலும் இந்தமுறை ஆலய சூழலில் தேவையான அளவு மணல் மாத்திரம் பரவப்பட்டுள்ளது.

ஆலய சுற்றாடலில் அங்கப் பிரட்சணம் செய்பவர்கள் நலன்கருதி அதற்குத் தேவையான போதுமான மணல் மாத்திரம் பரவப்பட்டுள்ளது. மணலைப் பெறுவதற்குத் தேவையான நிதி உள்ளபோதும் மணல் வீணாவதனை தவிர்ப்பதற்கு அது வழிசமைக்கும் என்று ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ற-4)



தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை நேற்று நாடுமுழுவதும் நடைபெற்றது. (படம் – வவுனியாவில் பரீட்சை எழுதும் மாணவர்கள்.)


# ஐ.தே.க. முகவராக செயற்பட்டதே ஜே.வி.பி. தோல்விக்குக் காரணம்

## சோமவன்ச அமரசிங்க கூறுகின்றார்

கொழும்பு, ஓக.24
ஐக்கிய தேசியக் கட்சியின் முகவராக செயற்பட்டமை காரணமாகவே ஜே.வி.பிக்கு பொதுத்தேர்தலில் தோல்வி ஏற்பட்டது என்று அந்தக் கட்சியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜே.வி.பி. மாத்திரமே இலங்கையின் முன்னணி சோசலிஸக் கட்சியாக உள்ளது. எனினும் அதன் கொள்கைகளைப் பின்பற்றாமல் ஐக்கிய தேசியக் கட்சிக்காக பணிகளை மேற்கொண்டதன் காரணமாகவே ஜே.வி.பிக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.



எனவே இது ஆச்சரியமான விடயம் அல்ல. இந்ததருணத்தில் ஜே.வி.பியீன் முக்கிய நான்கு தலைவர்கள் பதவிகளில் இருந்து நீக்கப்படவேண்டும்.

இந்த நிலையில் தேசிய அரசு என்பது சாத்தியமற்றது. எனவே ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கூட்டணி ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதே சிறந்தது. – என்றார். (ற)

# ரணில், மைத்திரி அரசால் தமிழருக்கு தீர்வு கிட்டாது

## பழ.நெடுமாறன் தெரிவிப்பு

சென்னை, ஓக. 24
இலங்கையில் நடந்து முடிந்த தேர்தலில் ஆறுதலான ஒரேவிடயம்,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர் பகுதிகளில் அதிகளவில் வெற்றி பெற்றிருப்பது மட்டும்தான். சிறிசேனவோ – ரணிலோ தமிழர் பிரச்சினைகளுக்கு எந்தத் தீர்வையும் பெற்றுத் தரமாட்டார்கள். – இவ்வாறு தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய அரசினால், தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் என்று, தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவித்த கருத்துக்குப் பதில் வழங்குகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

இலங்கையில் ரணில் விக்கிரமசிங்க, சிறிசேன ஆகியோர் இணைந்து கூட்டாக அரசு அமைக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர். இருவரது முந்தைய நடவடிக்கைகளை வைத்துப் பார்த்தாலே ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு எந்தவித தீர்வும் கிடைக்காது என்பது தெளிவாகும்.

தேர்தலில் தமிழர்களுக்குக் கிடைத்த ஒரே ஆறுதலான விடயமாக, தமிழர் பகுதிகளில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அதிகளவில் வெற்றி பெற்றிருப்பது மட்டுமே. மொத்தம் 16 இடங்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிடித்துள்ளது. ஒரு சில இடங்களில் சிங்கள கட்சியினர் வெற்றி பெற்றுள்ளனர். அதுவும், போருக்குப் பின்னர் நடந்த சிங்கள குடியேற்றத்தால் கிடைத்த வெற்றியாகும்.


ராஜபக்சவின் அமைச்சரவையில் அமைச்சராக இருந்தவர் சிறிசேன. இலங்கையில் நடந்த போர்க் குற்றம் தொடர்பான விசாரணையை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என சர்வதேச அரங்கில் பகிரங்கமாக எதிர்த்தவர் சிறி சேன. இதேபோல, விடுதலைப் புலிகளுடன் ரணில் விக்கிரமசிங்க கட்சி மேற்கொண்ட ஒப்பந்தத்தை அந்தக் கட்சியினரே நாடாளுமன்றத்தில் கிழித்து எறிந்த சம்பவத்தையும் மறக்கக் கூடாது.

இந்த இருவரும் சேர்ந்து அமைக்கும் ஆட்சியில் தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம் என்பது ஏற்புடையதல்ல. தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெற்றுள்ள வெற்றியை பொது வாக்கெடுப்பாகக் கருதி இலங்கைத் தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஐ.நா. சபை முன்வர வேண்டும்.

முன்னதாக, ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு மேற்கொண்ட விசாரணை அறிக்கையை வெளியிட வேண்டும் – என்றார். (ற-5)











வரலாற்றுப் சிறப்பு மிக்க தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய வருடாந் உற்சவத்தில் மஞ்சத் திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு நடைபெற்றது. அதில் அதிக எண்ணிக்கையான அடியவர்கள் கலந்துகொண்டதுடன் தமது நேர்த்திகளையும் நிறைவேற்றினார்கள். (ற-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய உற்பத்தி ஆராய்ச்சி உதவியாளர் இன்று பதவியேற்பு

## வடக்கு ஆளுநரின் பரிந்துரையையும் மீறி

யாழ்ப்பாணம், ஓக. 24

வடக்கு மாகாண ஆளுநர் பளிகக்காரவின் அறிவுறுத்தலையும் மீறி, வடக்கில் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பதவியை இன்று பொறுப்பேற்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. தனிச் சிங்களத்தில் தந்தி மூலமாக இந்த அறிவுறுத்தல் விவசாய சேவைகள் ஆணையாளர் அலுவலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கமநல சேவைகள் அபிவிருத்தித் திணைக்களத்தால், வடக்கில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களாக 361 பேரை நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் 332 பேர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். இந்த நியமனம் தேர்தல் காலத்தில் மேற்கொள்ள முன்னெடுப்புச் செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் உடனடியாகவே வடக்கு மாகாண அவைத் தலைவரால் தேர்தல்கள் ஆணையாளருக்கு சுட்டிக்காட்டப்பட்டு, நியமனம் வழங்கல் பிற்போடப்பட்டிருந்தது.

அதேவேளை, இந்த நியமனத்துக்கு எதிராக மாவட்டச் செயலகத்துக்கு முன்பு கவனயீர்ப்புப் போராட்டமும் நடத்தப்பட்டிருந்தது. இதன் பின்னர் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. வடக்கு மாகாண ஆளுநர், இந்த நியமனத்தை மீளாய்வு செய்யுமாறு, விவசாய சேவைகள் ஆணையாளருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில், விவசாய சேவைகள் ஆணையாளர் அலுவலகத்தால், விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களாக நியமிக்கப்பட்டவர்களை அவர்களது நிலையங்களில் இன்று கடமைகளைப் பொறுப்பேற்குமாறு தந்தி மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சேவையில் உள்ளீர்க் கப்பட்ட பெரும்பான்மையினத்தவர் 332 பேரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ள போதும், அவர்களது நியமனங்கள் ரத்துச் செய்யப்படவில்லை என்பதுடன் அதற்குப் பதி லாக தமிழர்கள் உள்ளீர்க்கப்படவில்லை.

# 20 ஆயிரம் போத்தல் 'கள்' இதுவரையில் உற்பத்தி

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ். குடாநாட்டில் இதுவரைக்கும் இருபது ஆயிரம் வரையிலான போத்தல்களில் கள் அடைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய காலநிலையால் 'கள்' ஊற்று குறைவதாலும் 'கள்' தொடர்ந்தும் போத்தல்களில் அடைக்கப்பட்டு வருகின்றது என்று மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் கணேசன் தெரிவித்தார்.

தற்போதைய காலநிலை வேறுபாட்டால் 'கள்' உற்பத்தி குறை வடைந்துள்ளது. விற்பனைக்கு கூட 'கள்' போதியளவு இல்லாதுள்ள போதும் போத்தலில் கள் அடைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் போத்தல் 'கள்' கூடுதலாக மழை காலங்களில் விற்பனைக்கு விடப்படும். அதனை விட இந்தக் கள்ளை வேறு இடங்களுக்கு சந்தைப்படுத்தவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது. (ற-17)

# நியமத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்

முல்லைத்தீவு, ஓக.24

வடக்கு மாகாணத்தில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் நியமனத்தில் 92 வீதம் சிங்கள இளைஞர் யுவதிகளுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நியமனம் கிடைக்காத தமிழ் இளைஞர் யுவதிகளால் பெரும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

இன்று காலை (24ம் திகதி )காலை 9 மணிக்கு முல்லைத்தீவில் உள்ள கமநல அபிவிருத்தித் திணைகளத்துக்கு முன்பாக இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் வெற்றிடத்தை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சையில் வடக்கு மாகாணத்திலிருந்து சுமார் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் தோற்றியிருந்தபோதும் வடக்கு மாகாணத்தில் நியமிக்கப்படவுள்ள 361 பேரில் 332 பேர் சிங்கள இளைஞர் யுவதிகளாவர். அதில் 29 பேர் மட்டுமே தமிழ் இளைஞர் யுவதிகளாவர்.

மன்னார் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு சிங்கள இளைஞர், யுவதிகள் மட்டுமே நியமிக்கப்படவுள் ளனர். யாழ் மாவட்டத்தில் 187 பேர் நியமிக்கப்படவுள்ள நிலையில் 164 சிங்களவர்களும் 23 தமிழர்களும், கிளிநொச்சியில் 45 பேர் நியமிக்கப்படவுள்ள நிலையில் 41 சிங்களவர்களும் 4 தமிழர்களும், வவுனியாவில் 42 பேர் நியமிக்கப்படவுள்ள நிலையில் 40 சிங்களவர்களும் 2 தமிழர்களும் மன்னாரில் 34 சிங்களவர்களும், முல்லைத்தீவில் 53 தனிச் சிங்களவர்களும் நியமிக்கப்படவுள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நல்லாட்சி யுகத்தில் இவ்வாறான ஒரு இன ஒடுக்கலை ஏற்றுக் கொள்ள முடியாது.

இது தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து இந்த நியமனம் வழங்கலை உடன் இடைநிறுத்த வேண்டும். வடக்கு மாகாண பரீட்சார்த்திகளுக்குத் தனியான ஒரு வெட்டுப்புள்ளி வழங்கி அதன்படி நியாயபூர்வமான முறையில் நியமனம் வழங்க வேண்டும். இதனை வலியுத்தி இன்று போராட்டம் நடத்தப்படவுள்ளது. பாதிக்கப்பட்ட இளைஞர் யுவதிகள் அனைவரும் அதில் தவறாது கலந்து கொள்ள வேண்டும்.– என்றுள்ளது. (ற-102)

# கைக்குண்டு மீட்பு

கொழும்பு, ஓக.24

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள கறுவாக்கேணி எனும் பகுதியில் நேற்று முன்தினம்மாலை கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று வாழைச் சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த கிராமத்திலுள்ள ஆலய உற்சவத்தை முன்னிட்டு பொதுமக்களால் மேற்கொள்ளப்பட்ட சிரமதானப் பணியின் போது பனை மரம் ஒன்றின் அடிப்பகுதியில் இருந்து குறித்த குண்டு மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த பகுதிக்கு விரைந்த மட்டக்களப்பிலுள்ள குண்டு செயழிளக்கச் செய்யும் இராணுவப் பிரிவினர் குறித்த குண்டினை செயழிளக்க செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் குறித்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# கட்சி கோரும் சமயத்தில் பதவி விலகுவதற்கு தயார்

## ஏ.ஆர்.ஏ.ஹபீஸ் தெரிவிப்பு

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினூடாக எனக்கு வழங்கப்பட்டுள்ள தேசியப்பட்டியல் மூலமான நாடாளுமன்ற பிரதிநிதித்துவமானது ஒரு குறுகிய காலத்துக்கானது எனத் தெரிவிக்கும் மு.கா.வின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஏ.ஹபீஸ் கட்சித்தலைமை கோருகின்ற பட்சத்தில் அப்பதவியிலிருந்து விலகுவதற்கு தயாராகவுள்ளதாகவும் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் குறித்து எழுந்துள்ள சர்ச்சை தொடர்பாக அவர் கருத்துத்தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:–

முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு தேசியப்பட்டியலூடாக இரண்டு நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைத்துள்ளது. இந்நிலையில் குறுகிய காலப் பகுதிக்குள் நாடளாவிய ரீதியிலிருந்து அப்பதவிக்கு யாரைத் தேர்ந்தெடுப்பது என்பது கட்சிக்கு சிக்கல் நிலையை தோற்றுவித்தது.

காரணம் தேர்தல் செயலகம் தேசியப்பட்டியல் விவரங்களை அவசரமாக சமர்ப்பிக்குமாறு கோரியிருந்தமையாகும். இந்நிலையில் கட்சித் தலைமை நாடளாவிய ரீதியிலிருந்து அப்பதவிக்கு ஏற்ற தகுதியான ஒருவரை தேர்ந்தெடுக்கும் வரை தலைமைக்கு மிகவும் விசுவாச மான இருவரை தெரிவு செய்து தேசி யப் பட்டியலுக்கு கட்சித்தலைமையினூடாக சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அவ்விருவர்களுள் நானும் ஒருவர்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தலைமை இதற்கு முன்னர் நடந்த தேர்தல்களிலும் எனது பெயரை உள்ளடக்கியிருந்தமையை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இவ்வாறானதொரு நிலையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினூடாக எனக்கு தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இப்பதவியானது ஒரு குறுகிய காலத்துக்கானது. கட்சிக்கு விசுவாசமான மற்றும் தகுதியானவர்கள் அப்பதவிக்கு இனங்காணப்படுமிடத்து எனக்கு வழங்கப்பட்டுள்ள பதவி யிலிருந்து விலகத் தயாராகவுள்ளேன்– என்றார். (ற)

# இடசாரிகள் இணைந்து புதிய கூட்டமைப்பு

கொழும்பு, ஓக.24

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ள ஐந்து இடதுசாரிக் கட்சிகள் ஒன்றாக இணைந்து புதிய கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, தினேஷ் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணி, வாசுதேவ நாணயக்காரவின் புதிய இடதுசாரி முன்னணி, விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி என்பனவே குறித்த ஐந்து கட்சிகளுமாகும்.

எதிர்வரும் நாள்களில் இந்த ஐந்து கட்சிகளும் ஒன்றிணைந்து சோசலிச மக்கள் முன்னணி என்ற பெயரில் புதிய கட்சியொன்றை உருவாக்குவதற்கான பேச்சில் ஈடுபட்டுள்ளன.

முதற்கட்டமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து தனித்து இயங்கத் தீர்மானித்துள்ள இவர்கள், அடுத்த கட்டமாக தேசிய அரசாங்கம் தொடர்பான விடயத்தில் கலந்துரையாடல் மூலமான முடிவொன்றை எடுக்கவுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (ற)

# இரணைமடு அணைக்கட்டின் புனரமைப்பு .இன்று ஆரம்பம்

## யாழ்ப்பாணம் – கிளிநொச்சி நீர் விநியோகத் திட்டத்தின் ஒரு பகுதியாக

யாழ்ப்பாணம் – கிளிநொச்சி நீர் விநியோகத் திட்டத்தின் ஒரு பகுதியான இரணைமடுக்குளத்தின் அணைக்கட்டுப் புனரமைப்புப் பணி இன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளது. 2 ஆயிரத்து 114 மில்லியன் ரூபா செலவில் 5 கட்டங்களாக குளப் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளது என்று வடக்கு மாகாண விவசாய நீர்ப்பாசன அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் – கிளிநொச்சி நீர் விநியோகத் திட்டம் மூன்று கட்டங்களாக முன்னெடுக்கப்படவுள்ளது. இரணைமடுக் குளத்தைப் புனரமைத்தல், கடல் நீரை நன்னீராக்கல், யாழ்.நகர் கழிவு அகற்றல் முகாமைத்துவம் ஆகிய மூன்று கட்டங்களாக இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

முதல்கட்டமாக, இரணைமடுக் குளத்தின் அணைக்கட்டு புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. அதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியாலும், இலங்கை அரசாலும் 2 ஆயிரத்து 114 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இரண்டு வருடங்களுக்குள் 5 கட்டங்களாக இந்த வேலை இடம்பெறவுள்ளது.

அணைக்கட்டு புனரமைப்பின் உத்தியோகபூர்வ ஆரம்ப நிகழ்வு இன்று காலை 10.30 மணிக்கு இரணைமடுக் குளக்கட்டில் இடம்பெறவுள்ளது. (ற-5)


தெல்லிநகர் துர்க்காதேவி ஆலய
8 ஆம் திருவிழா
இன்று (24.08.2015) திங்கட்கிழமை



தாயே அபயமென்று சரணம் புகுந்துவிட்டேன்
சேய் நான் பிழை செய்தால் சிறுபிள்ளை எனப் பொறுப்பாய்
ஓயாத துயர் சூழும் ஒவ்வொரு வேளையிலும்
நீயே அருகிருந்து நிம்மதி தருவாயம்மா

காசியிலே தவம்புரிந்த கதிர்காமர் மனத்துள்ளே
ஊசல் கட்டி ஆடிவந்த ஓங்கார ரூபினியே
தேசமெலாம் காக்கும் தெய்வீகப் பேரருளே
நேசமிகும் நெஞ்சங்களில் நீயிருந்து வருவாயம்மா.

இந்து இளைஞர் சங்கம், தெல்லிப்பழை.

அனுசரணை: நடராஜா ராஜமோகன்
தெல்லிப்பழை (லண்டன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண சபைக்கு புதிய உறுப்பினர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், ஓக. 24

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் வடமாகாண சபை உறுப்பினர்கள் மூவர் நாடாளுமன்றுக்கு தெரிவாகியுள்ளனர். இவர்களின் இடத்துக்கு புதிய உறுப்பினர்கள் நாளை நடைபெறும் வடக்கு மாகாண சபை அமர்வில் பதவியேற்கவுள்ளனர்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் சித்தார்த்தன், முல்லைத்தீவு மாவட்டத் தைச் சேர்ந்த டாக்டர். சிவமோகன் மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் யாழ். மாவட்ட உறுப்பினரான அங்கஜன் இராமநாதன் ஆகியோர் நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மூவரில் தர்மலிங்கம் சித்தார்த்தன், டாக்டர் சிவமோகன் ஆகியோர் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ளதுடன் அங்கஜன் இராமநாதன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்றுக் கொண்ட தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகியுள்ளார்.


**புதிய உறுப்பினர்கள் நாளை நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபை அமர்வில் கலந்து கொண்டு பதவியேற்கவுள்ளனர்**

இந்நிலையில் வடமாகாண சபைத் தேர்தலின் போது பெற்றுக்கொண்ட விருப்பு வாக்குகளின் அடிப்படையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கரணவாய் தெற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தர்மலிங்கம், துணுக்காய் பகுதியைச் சேர்ந்த வல்லிபுரம் கமலேஸ்வரன் ஆகியோர் தெரிவாகினர்.

அத்துடன் அங்கஜன் இராமநாதனின் இடத்திற்கு வடமராட்சி ஈ.பி.டி.பி. அமைப் பாளரும் பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவருமான ஸ்ரீ ரங்கேஸ்வரன் வடக்கு மாகாண சபை உறுப்பி னராக தெரிவாகியுள்ளார்.

இதேவேளை புதிய உறுப்பினர்கள் நாளை நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபை அமர்வில் கலந்து கொண்டு பதவியேற்கவுள்ளதாக மாகாண சபையின் அவைத் சிவி.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார். (ற)

# பிரதமர் ரணில் தலதா மாளிகையில் வழிபாடு



கண்டி, ஓக. 24

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு பயணம் செய்து சமய வழிபாடுகளில் ஈடுபட்டார்.

தலதா மாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மல்வத்த பீடத்தின் மஹா நாயக்க தேரர் வண. திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கள தேரரையும் அஸ்கிரிய மகாநாயக்க தேரரையும் சந்தித்து நல்லாசிகள் பெற்றுக் கொண்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களுமான லக்ஷ்மன் கிரியெல்ல, ரவூப் ஹக்கீம் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். ரணில் விக்கிரமசிங்க பிரதமராகியமை நாட்டுக்கு கிடைத்த அதிர்ஷ்டம் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்களும் திறமையானவர்கள் என்பதால் நாட்டை கட்டியெழுப்ப முடியும் என மல்வத்த பீடத்தின் மஹா நாயக்க தேரர் இதன்போது தெரிவித்துள்ளார். (ற)

# மட்டக்களப்பில் ஆணைக்குழுவின் முன் கதறிய காணாமல் போனோரின் உறவுகள்

மட்டக்களப்பு, ஓக. 24

மேசன் வேலைக்குச் சென்ற எனது மகன் இன்றுவரை வீடு திரும்பிவரவில்லை என தாயார் ஒருவர் கண்ணீர் சிந்தியவாறு ஜனாதிபதி ஆணைக் குழுவிடம் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனோர் தொடர்பான விசாரணையை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இரண்டாம் நாள் அமர்வு, மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடிப் பிரதேசத்தில் நேற்று நடைபெற்றது.

களுவாஞ்சிக்குடி மற்றும் வெல்லாவெளி பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள காணாமல்போனோருடைய உறவினர்கள் சுமார் 200க்கு மேற்பட்டோர் இதில் சாட்சியமளிப்பதற்காக சமுகமளித்தனர்.

இந்த முறைப்பாட்டில் வடிவேல் மகேஸ்வரி என்ற தாய் சாட்சிய



மளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனது சாட்சியத்தில் –

வடிவேல் சிவகுமார் என்ற 27 வயதான எனது மகன், கடந்த 2007 நவம்பர் 09 ஆம் திகதியன்று எமது வீட்டிலிருந்து காத்தான்குடிக்கு மேசன் வேலைக்காகச் சென்றார். அவர் இன்றுவரை வீடு வந்து சேரவில்லை.

அவர் வேலைக்குச் சென்ற இடத்திலும், ஏனைய பகுதிகளிலும் தேடினோம் கிடைக்கவில்லை. அப்போது ஆரையம்பதியில் கருணா அம்மானின் [illegible]

முகாமிட்டிருந்தார்கள். அவர்கள் தான் எனது மகனைப் பிடித்துள்ளார்கள்.

கருணா அம்மான் குழுவிடம் சென்றும் விசாரித்தோம் கிடைக்கவில்லை. எனக்கு 5 பெண் பிள்ளைகள் ஒரே ஒரு ஆண்பிள்ளைதான் அவரையும் கடத்தி விட்டார்கள் தற்போது எனது பெண்பிள்ளைகளோடு பல இன்னல்களை எதிர்கொண்ட வண்ணம் வாழ்ந்து வருகின்றேன்.

எனது மகன் தொடர்பில் ஐ.சி.ஆர்.சி, பொலிசாரிடமும் முறையிட்டோம். இதுவரையில் எதுவித தொடர்பும் கிடைக்கவில்லை. எனது ஒரே ஒரு ஆண்பிள்ளையை எங்கிருந்தாலும் மீட்டுத்தாருங்கள் என கண்ணீர் மல்க அவர் முறைப்பாடு தெரிவித்தார்.

இதேவேளை பொலிஸ் சீருடையில் வந்த ஒருவரும் சாதாரண உடையில் வந்த நான்கு பேர் கொண்ட குழுவினரே வீட்டில் இருந்த எனது கணவரை விசாரணை மேற்கொள்ள வேண்டியுள்ளது என வெள்ளை வானில் அழைத்துச் சென்றனர்.

இதன்பின்னர் எனது கணவர் பற்றிய எந்தவிதமான தகவலும் கிடைக்கவில்லை. தயவு செய்து எனது கணவரைக் கண்டு பிடித்துத் தாருங்கள் என காணாமல் போன மகிழூரை சேர்ந்த ரவீந்திரனின் மனைவி சிறிதேவி ஆணைக்குழுவிடம் மன் றாட்டமாக கேட்டுக் கொண்டார்.



அவர் தொடர்ந்து ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கையில்

எனது கணவர் ஒரு அரசாங்க உத்தியோகத்தர் அவர் அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு பிரதேச செயலகத்தில் சமுர்த்தி உதவி முகாமையாளராக கடமையாற்றி வந்தவர். கடந்த 2009 ஏப்ரல் 8 ஆம் திகதியன்று எனது கணவர் வீட்டில் இருந்தார். அன்றைய தினம், காலை 9.00 மணியளவில் எமது வீட்டைச் சுற்றி விசேட அதிரடிப்படையினர் காணப்பட்டனர். அதனை நாங்கள் பெரிதுபடுத்தவில்லை. அதன் பின்னர் பிற்பகல் 1மணியளவில் வெள்ளை வானில் பொலிஸ் சீருடை அணிந்த ஒருவரும் அவருடன் சாதாரண உடை அணிந்த நான்கு பேரும் வந்தனர்.

அந்த நேரம் எனது கணவர் வீட்டிற்குள் இருந்தார். வந்தவர்கள் எனது கணவரை அழைத்து நீங்கள் ரவீந்திரனா என வினவினர். அதற்கு அவர் ஆம் என பதிலளித்தார். உங்களிடம் சிறு விசாரணை மேற்கொள்ள வேண்டியுள்ளது சேட்டை போட்டுக்கொண்டு வாருங்கள் என அழைத்துச் சென்றனர்.

அதன் பின்னர் எனது கணவரை நான் இன்னும் காணவில்லை. நான் இது சம்பந்தமாக பொலிஸ் நிலையத்திற்குச் சென்று [illegible]

ஆனால் முறைப்பாட்டு பிரதியை நான் எடுக்கவில்லை. காரணம் எனது கணவர் வீட்டில் இருந்து காணமல் போயுள்ளார் என நான் தெரிவித்தேன்.



ஆனால் அவர்கள் வெளியில் சென்ற வேளை காணாமல் போனதாக முறைப்பாட்டை பதிவு செய்திருந்தனர். இதனால் நான் முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையிட்டுள்ளேன் எனத் தெரிவித்தார்.

எனக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். எனது கணவரை கண்டு பிடித்துத் தாருங்கள் என கண்ணீர் மல்க தெரிவித்தார்.

இந்த விசாரணையில் போரதீவுப் பற்று, மண்டூர் கணேசபுரச் சேர்ந்த லட்சுமி என்ற பெண் சாட்சியமளிக்கையில்–

கடந்த 2009 மார்ச் 20 ஆம் திகதியன்று எமது வீட்டிலிருந்து புறப்பட்டு மாமியின் வீட்டுக்குச் சென்று திரும்பும் வழியில் வைத்து எனது கணவர் காணாமல் போயுள்ளார். அன்றைய தினம் எமது கிராமத்தில் பொலிசாரும், இரணுவத்தினரும் சுற்றி வளைத்திருந்தனர். எனது கணவரை இராணுவத்தினர்தான் பிடித்துள்ளார்கள்.


எமது வீட்டுக்கு அரைக் கிலோ மீற்றர் தொலைவில் இராணுவ முகாமும், 2 கிலோ மீற்றர் தொலைவில், பொலிஸ் நிலையமும் அமைந்திருந்தது. அவர்களிடம் நான் சென்று விசாரித்த போது எனது கணவரை அவர்கள் பிடிக்கவில்லை என தெரிவித்தனர்.

தற்போது நான் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். சமுர்த்தியினால் மாதாந்தம் 1500 ரூபா மாத்திரம் கிடைக்கின்றது. எனது பிள்ளையையும் படிப்பிக்க வேண்டும். எனக்கு எனது கணவர் இறந்து விட்டார் என்ற மரண சான்றிதழோ, நிவாரணங்களோ, தேவையில்லை எனக்கு எனது கணவர்தான் வேண்டும் எங்கிருந்தாலும் கண்டுபிடித்து தரவும் என அவர் மேலும் தெரிவித்தார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற்றவர்கள் நாடாளுமன்றத்துக்கு தேசியப்பட்டியல் மூலம் வேண்டாம்

## வலியுறுத்துகின்றார் சோபித தேரர்



கொழும்பு, ஓக.24
இலங்கையில் நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில், தோல்வியடைந்திருந்த வேட்பாளர்களை, தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குக் கொண்டு செல்லும் நடவடிக்கையை சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் மாதுளுவாவே சோபித தேரர் கண்டித்துள்ளார்.

அதுகுறித்து சர்வதேச ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள சோபித தேரர், தேசியப் பட்டியலில் புத்திஜீவிகளுக்கும் கல்விமான்களுக்குமே இடம் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியலமைப்பு தேர்தலில் தோல்வியடைந்த வேட்பாளர்களை தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் செல்ல அனுமதி அளிப்ப தாக உள்ளது. இது சரியானதல்ல. தேசியப் பட்டியலில் பேராசிரியர்கள், கல்விமான்கள் மற்றும் புத்திஜீவிகளுக்கே இடம் வழங்கப்பட வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

தேர்தலில் தோல்வியடைந்தோருக்கு தமது தேசியப் பட்டியலில் வாய்ப்பளிக்கப்பட மாட்டாது என ஐக்கிய தேசியக் கட்சி எடுத்திருக்கும் கொள்கை முடிவை சுட்டிக்காட்டியிருக்கும் சோபித தேரர், ஜே.வி.பி., ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகள் தோல்வியுற்றவர்களையும் தமது தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்கு அனுப்பியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலில் தோல்வியடைந்தவர்களை தேசியப் பட்டியல் ஊடாக நாடர்ளுமன்றத்துக்கு அனுப்ப முடியாத வகையில் இலங்கை அரசியல் யாப்பில் திருத்தத்தை ஏற்படுத்த வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ற)

# தேசிய அரசில் தமிழ்க் கூட்டமைப்பு இணைந்து செயற்பட வேண்டும்

## ஆனந்த சங்கரி கோரிக்கை



யாழ்ப்பாணம், ஓக. 24
தேசிய அரசில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைவதன் ஊடாக, தமிழ் மக்களது பிரச்சினைகளை ஓரளவாவது தீர்க்க முடியும். எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசிய அரசில் இணைய வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இப்போது ஓர் அமைதியான புரட்சி ஏற்பட்டு எமது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக் கூடிய அரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. சிறுபான்மையினருக்குப் பல்வேறு பிரச்சினைகள் உண்டு. ஆனால் அவற்றை எல்லாம் ஒரே நாளில் அல்லது சில நாள்களில் கூட தீர்த்துவிட முடியாது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து இரு ஆண்டுகள் நடத்த உள்ள தேசிய அரசில் நிச்சயமாகப் பலவற்றிற்கு தீர்வு காண முடியும்.

தமிழத் தேசியக் கூட்டமைப்பும் விரைவாக ஓர் முடிவை எடுத்து தேசிய அரசில் இணைய வேண்டும். அதைத்தான் தமிழ் மக்கள் விரும்புகின்றனர். அதற்காகவே அவர்கள் வாக்குகளையும் அளித்துள்ளனர். பலவிதமான கொள்கைகளைக் கொண்டுள்ள முப்பதுக்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகளும் இணைந்தே இவ்வாறான ஒரு சூழலை ஏற்படுத்தியுள்ளமையால் இந்த விடயத்தை மிகக் கவனமாகக் கையாள வேண்டிய கடமைப்பாடு உண்டு.

ஆரம்பத்தில் இருந்தே மதுளுவாவே சோபிததேரர், ஓமல்பே சோபிததேரர், அத்துரலிய ரத்ன தேரர் போன்ற சமயப் பெரியார்களும் மற்றும் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போன்ற அரசியல் பிரமுகர்களும் தாம் இனப் பிரச்சினைக்கு சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்புடைய தீர்வைப் பெற்றுத் தருவதாக மீண்டும் உத்தரவாதம் அளித்துள்ளனர்.

நீங்கள் அவர்களை நம்பவேண்டும் என்பதும் தேசிய அரசுக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்பதே இந்தச் சந்தர்ப்பத்தில் எனது ஆலோசனையாகும். எல்லாவற்றிற்கும் மேலாக அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக தீர்வு காண முடியாதிருந்த இனப்பிரச்சினைக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் தீர்வுகாணக்கூடிய ஒரு வாய்ப்பை நழுவவிட வேண்டாம்.- என்றுள்ளது. (ற-5)

# விருப்பு வாக்குகளை மீண்டும் எண்ணுமாறு ரோசி கோரிக்கை

கொழும்பு, ஓக.24
நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் தாம் பெற்றுக்கொண்ட விருப்பு வாக்குகளை மீள எண்ணுமாறு, தேர்தல்கள் ஆணையாளரிடம் முன்னாள் ராஜாங்க அமைச்சர் ரோசி சேனநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

தாம் பெற்ற விருப்பு வாக்குகள் தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளது என்று தெரிவித்துள்ள ரோசி, தமது விருப்பு வாக்குகளை எண்ணுமாறு கட்சியின்தலைவர் ரணிலிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும், அது குறித்து தேர்தல்கள் ஆணையாளரிடம் கலந்துரையாடுவதாகவும் கூறியுள்ளார்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில், கொழும்பு மேற்கில் போட்டியிட்ட ரோசிக்கு, 65 ஆயிரத்து 320 விருப்பு வாக்குகள் கிடைத்திருந்தன. நாடாளுமன்றத்திற்கு ரோசி தெரிவாகாத நிலையில், அவரை தேசியப் பட்டியல் ஊடாக கொண்டு வருவ தற்கு பல முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. எனினும் தோல்வியடைந்தவர்களுக்கு தேசிய பட்டியல் சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது என்று ஐ.தே.க. தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்ததோடு, அதனடிப்படையில் தேசிய பட்டியல் விவரத்தையும் வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில், மக்கள் வழங்கிய ஆணையை தாம் ஏற்றுக்கொள்வதாக தெரிவித்துள்ள ரோசி, எனினும் தமது விருப்பு வாக்குகள் தொடர்பில் எழுந்துள்ள சந்தேகத்தால் அதனை மீள எண்ணுமாறு கோரிக்கை விடுத்துள்ளார். (ற)

# சொத்துவிவரம் சமர்ப்பிக்காத வேட்பாளர்கள் மீது வழக்கு


கொழும்பு, ஓக.24
சொத்து விவரங்களை வெளியிடாத 2ஆயிரம் வேட்பாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளது.

தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய மற்றும் தோல்வியடைந்த வேட்பாளர்களுக்கு எதிராகவே இந்த வழக்குத் தொடரப்படவுள்ளது. தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. வேட்பாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடர முன்னர் சொத்து விவரங்கள் பற்றிய ஆவணத்தை ஒப்படைக்க இன்னும் மூன்று மாத கால அவகாசம் வழங்கப்படவுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுத் தாக்கல் செய்து தேர்தலில் வெற்றியீட்டிய மற்றும் தோல்வியடைந்த அனைத்து வேட்பாளர்களும் சொத்து விவரங்களை ஒப்படைக்க வேண்டியது அவசியமானது. அவ்வாறு சொத்து விவரங்களை ஒப்படைக்காத அனைவருக்கு எதிராகவும் வழக்குத் தொடரப்படவுள்ளது.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 6 ஆயிரத்து 151 வேட்பாளர்கள் போட்டியிட்டதுடன் இதில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் சொத்து விவரங்களை ஒப்படைக்கவில்லை.

வேட்பாளர்கள் அந்தந்த மாவட்ட தேர்தல் காரியாலயங்களில் சொத்து விவரங்கள் பற்றிய ஆவணத்தை ஒப்படைக்க முடியும் என தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ற)



## 6 ஆம் திருவிழா

# காவல் செய் கந்தப்பா

நல்லைக் கந்தன் திருவிழாவில்
நமக்கெல்லாம் கொண்டாட்டம்!
தொல்லைகளை தொலைக்கப்போய்
தொந்தரவை வாங்கலாமாம்!

இளைஞர் , யுவதி இடைநுழைந்து
இதயசுத்தியோடு கோயில்;
வளையவரும் முருக பக்தர்
வழிபாட்டில் குறுக்கிடலாம்!

கூட்டம் சேரும் இடத்தில்தானே
கூட்டத்தவரின் கேளிக்கையும்;
நாட்டம் நல்லை வேலனிலில்லை
நாரியரைப்பின் தொடரல்தானே!

முடிச்சுமாறும் மூச்சினியக்கேடுகள்
முருகபக்தர் போல் நடித்தே;
அடிச்சுப் போவர் தங்க நகைகள்
அதனால் கவனம் பக்தகோடிகளே!

திருட்டைக் காவல் துறைப் பகுதி
திருத்தலங்கள் தோறுமில்லா;
உருப்படி செய்ய ஒளிப்பதிவுக் கருவி
ஒவ்வொருவரிடமும் பூட்டியிருக்கும்!

நகையைப் போட்டு கோயில் வந்தா
நசுக்கிடாமல் திருடுகிறாரென்றே;
புகைக்கூட்டில் ஒளித்து வைத்தால்
புகுந்து வீட்டில் எடுக்கும் கும்பல்!

முருகாவுன்னைத் தொழுதெங்கள்
மிடிகளைக் கூறி அருள்பெறவும்;
தருவாய்க் காவல் வீட்டுள்ள நகை
தலவீதிகளில் தானெமைக்காக்க!

*நவாலியூர்க் கவிராயர்*




திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :
அபி பெஷன் வேல்ட்
112, காங்கேசன்துறை வீதி,
(H.S.B.C வங்கிக்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** நண்பர்களிடம் பேசுவதில் முன் யோசனையுடன் செயற்பட வேண்டும். தொழில், வியாபாரத்தில் வேலைப்பளு கூடும். பணவரவு ஓரளவுக்கு இருக்கும். சுற்றுச் சூழ்நிலைகளால் தூக்கம் கெடலாம்.

**இடபம்:** உங்களைப் பற்றிய மதிப்பீடு உயரும். பணவரவு நன்றாக இருக்கும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். குடும்பப் பிரச்சினையில் சுமூக தீர்வு கிடைக்கும்.

**மிதுனம்:** நல்லவிடயங்களைப்பேசுவதில்ஆர்வம்கொள்வீர்கள். நண்பர்களின் வழிகாட்டுதல் எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்கப் பணி புரிவீர்கள். ஆதாயப் பணவரவு வந்து சேரும்.

**கடகம்:** செயல்களில் தடங்கல் உருவாகி மனதை சஞ்சலப்படுத்தலாம். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. உறவினர் வருகையால் நன்மை பெறுவீர்கள்.

**சிங்கம்:** கவனக்குறைவால் மனதில் பதட்டம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் போட்டியாளர்களின் ஆதிக்கம் அதிகம் இருக்கும். பணவரவு சுமாராக இருக்கும். நண்பர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள்.

**கன்னி:** நண்பர்களுடன் இணைந்து, புதிய செயற்றிட்டத்தை உருவாக்குவீர்கள். கடந்த சில நாள்களாகத் திகைக்க வைத்த பணி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரம் செழிப்பாகி, இலாபம் கிடைக்கும்.

**துலாம்:** அடுத்தவர்களின் பிரச்சினையில் தலையிட்டால், அவப்பெயர் வரலாம்; கவனம். தொழில், வியாபாரத்தில் வேலைப்பளு கடுமையாக இருக்கும். சுமாரான இலாபமே வரும். பயணத் திட்டத்தில் மாறுதல் செய்ய வேண்டி வரலாம்.

**விருச்சிகம்:** உற்சாக மனதுடன் செயற்படுவீர்கள். கடந்த நாள்களில் தேங்கி நின்ற பணி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரம் செழித்து, தாராள பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** செயல்களில் முன் யோசனையுடன் நடந்து கொள்வது நல்லது. தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாரான அளவில் இருக்கும். குழந்தைகள் விடயத்தில் அதிக அக்கறை செலுத்துவீர்கள். குடும்பத்தார் கேட்ட பொருளை வாங்கிக் கொடுக்க வாய்ப்பு வரும்.

**மகரம்:** தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி கண்டு மகிழ்வீர்கள். தாராள பணவரவு இருக்கும் என்பதால் தர்மம் செய்வீர்கள். வெளியூரிலிருந்து எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும்.

**கும்பம்:** செயல்களில் உங்கள் தனித்திறமை பிரதிபலிக்கும். தொழில், வியாபாரம் வியத்தகு முன்னேற்றம் பெறும். அதிக பணவரவால் சந்தோஷம் கொள்வீர்கள். பணியாளர்களுக்கு நிர்வாகத்தின் ஆதரவால் நம்பிக்கை ஏற்படும்.

**மீனம்:** தொழில், வியாபாரம் செழிக்க, புதிய யுக்தியைப் பயன்படுத்துவீர்கள். பண வரவை விடச் செலவு அதிகரிக்கும். பாதுகாப்பு குறைவான இடங்களுக்கு செல்லக் கூடாது. இல்லறத் துணையின் அன்பு, பாசம் மனதை நெகிழ வைக்கும்.

# கிரிக்கெட் வீரர் தினேஷ் கார்த்திக்-தீபிகா திருமணம்











That நாசா விஞ்சானிக்கே சவால் விடக்கூடிய Thinking



"இனிமே அறிவுகெட்ட நாயே"ன்னு யாரையும் திட்டாதீங்கப்பா








படிக்கணும் என்று முடிவு பண்ணிட்டா எங்ககிட்ட இருந்து எந்த புத்தகமும் தப்பிக்க முடியாது!

## பேஸ் புக்கில் பிடித்தவை...





உலகிலே மிக நீளமானது.....!



## இது தான் உண்மை

சிவகார்த்திகேயனின் வளர்ச்சி தற்போது விண்ணை முட்டுகிறது. இவர் நடிப்பில் வெளிவந்த ரஜினி முருகன் படத்தை அனைவரும் போட்டி போட்டு வாங்க முன் வருகின்றனர். இந்தப் படத்தின் வியாபாரம் அண்மையில் வெளி வந்த தகவலின் படி 50 கோடியைத் தாண்டும் எனக் கூறப்படுகின்றது. இது கிட்டத்தட்ட விஜய், அஜித் படங்களுக்கு இணையானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிவகார்த்திகேயனுக்கு பின்னர் தான் பல முன்னணி நடிகர்கள் இருக்கிறார்கள் என்பது நிதர்சனமான உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பிரகீத் காணாமற்போன சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கையளிக்குக

## இராணுவத்திடம், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கோரிக்கை

கொழும்பு, ஓக. 24
'லங்கா ஈ நியூஸ்' ஊடகத்தின் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் காணாமற் போதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை ஒப்படைக்குமாறு இராணுவத்திடம், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.
சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை ஒப்படைக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர். எனினும், இதுவரையில் இந்தக் கோரிக்கைக்கு படையினர் உரிய பதிலளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.
இதேவேளை– படையினர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொறுப்புக்களிலிருந்து விலகிச் செயற்படப் போவதில்லை என இராணுவப் பேச்சாளர் ஜயனத் ஜயவீர தெரிவித்துள்ளார்.உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுக்கப்பட்டால், சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின்பேரில் விசாரணை நடத்தப்பட்ட படையினரை ஒப்படைக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.
எனினும், படையினரை ஒப்படைக்குமாறு மூன்று கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். அடுத்த கட்டமாக நீதிமன்றின் உதவியை நாட நேரிடும் என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ற–ரி)

## இரண்டாவது தடவையும் மைத்திரி போட்டியிட வேண்டும்

திருமலை, ஓக .24
மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற இரண்டாவது முறையும் போட்டியிட வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கிண்ணியா மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
கிண்ணியாவுக்கு நேற்றுமுன் தினம் ஜனாதிபதி பயணம் செய்திருந்த போதே அவர்கள் இவ்வாறு கோரியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.
தாம் எதிர்பார்த்த அபிவிருத்திகள் தமக்கு இன்னும் கிடைக்கப் பெறவில்லை என மக்கள் இதன்போது மைத்திரிபால சிறிசேனவிடம் சுட்டிக்காட்டியதோடு, கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாயம் போன்றன தொடர்பில் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் விளக்கினர்.
இது குறித்து மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் ஊடாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி இதன் ...து உறுதியளித்துள்ளார். (ற–ரி)



*நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மாவட்ட முதன்மை வேட்பாளராக போட்டியிட்டு சுமார் 54 வாக்குகளால் தோல்வியடைந்த முன்னாள் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வின் சொந்த ஊரான காத்தான்குடியில் மகிழ்ச்சி களிப்பில் ஈடுபட்டதோடு ஹிஸ்புல்லாஹ்வின் பதாதைகளை ஏந்தி ஊர்வலமாகவும் சென்றனர். (ற–10)*

## மாந்திரீகத்தில் ஈடுபட்ட நான்கு இந்தியர்கள் கைது

கல்முனை, ஓக. 24
உல்லாசப் பயணிகள் நுழைவிசையில் வந்து சட்ட விரோதமாகத் தங்கி யிருந்து விற்பனையிலும் மாந்திரீக வேலைகளிலும் ஈடுபட்ட இந்தியப் பிரஜைகள் நான்கு பேரைக் கைது செய்துள்ளதாக கல்முனைப் பொலிஸார் தெரிவித்தனர்.
கல்முனையிலுள்ள விருந்தினர் விடுதியொன்றில் தங்கியிருந்த போதே இவர்கள் நேற்றுமுன் தினமிரவு கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தியா பெங்களூரைச் சேர்ந்த மகி அக்கபாளி (வயது –30), தானிக் நவீன்குமார் (வயது –22), அக்கபாளி தேவராஜ் பிரகல்லாதன் (வயது–33), ஆயக்குட்டு சிவகுமார் (வயது– 31) ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.
இவர்களிடமிருந்து இலங்கையில் விற்பனைக்கு அனுமதி பெறப்படாத ஒரு தொகை சட்டவிரோத விற்பனைப் பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. சிகை அலங்கார எண்ணெய் வகைகள், ஷம்பூக்கள், திரவகங்கள், உருத்திராட்ச வசிய மாந்திரீக அணிகலன்கள் என்று அவர்கள் கூறும் சில பொருட்களும் கைப்பற்றப்பட்டதாகபொலிஸார்தெரிவித்தனர்.
இந்த இந்தியர்கள் இரகசியமான முறையில் வீடுவீடாகச் சென்று பொருள்களை விற்பதிலும், வசிய மாந்திரீக வைத்திய முறைகளிலும் ஈடுபடுவதாக பொது மக்களிடமிருந்து கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற–ரி)

## இளநீர் அருந்திய தந்தையும், மகளும் உயிரிழப்பு

புத்தளம், ஓக. 24
புத்தளம் – கோட்டுகச்சிய பிரதேசத்தில் இளநீர் அருந்திய தந்தையும் மகளும் உயிரிழந்துள்ளனர்.
சுகவீனம் ஒன்றுக்கு நிவாரணம் பெற அப்பகுதி புனிதத் தலம் ஒன்றுக்குச் சென்றிருந்த வேளையே அவர்கள் இளநீர் அருந்தியுள்ளனர்.
...ள் கடந்த 18ஆம் திகதி உயிரிழந்திருந்தபோதும், தந்தை சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.
இந்தச்சம்பவம்குறித்துமேலதிகவிசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற–ரி)

# தேசிய அரசு அமைப்பது குறித்த குழுவின் அறிக்கை மைத்திரியிடம்

கொழும்பு, ஓக. 24
தேசியஅரசுஅமைப்பதுகுறித்துஆராய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவின் கடந்த கூட்டத்தில் தேசிய அரசை நிறுவுவது குறித்து இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ள நிலையில், அது குறித்து ஆராய குழுவொன்று நியமிக்கப் பட்டது.
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தலைமையில் ஐவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.
மேலும் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற மற்றுமொரு சந்திப்பில் தேசிய அரசை அமைப்பது தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் கருத்தை ஆராய டப்ளியூ.டி.ஜே.செனவிரத்ன தலைமையில் மற்றுமொரு குழு நியமிக்கப்பட்டது.
இதன்படி இந்த இரண்டு குழுவினரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தமது அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளதாக,சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் செயலாளர் துமிந்த திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ற–ரி)

## நூல் வெளியீட்டு விழா

தென்மராட்சி, ஓக.24
கைதடியூர் வே.தபேந்திரன் எழுதிய 'யாழ்ப்பாண நினைவுகள் – பகுதி 1, பகுதி 11' ஆகிய இரு நூல்கள் அறிமுகவிழா கொழும்பில் எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் சங்கத் தலைவர் மு.கதிர்காமநாதன் தலைமையில் அறிமுகவிழா இடம்பெறவுள்ளது. அதில் வரவேற்புரையை பொறியியலாளர் சே.சிவாநந்தமூர்த்தியும், நூலாசிரியர் அறிமுகவுரையை தினகரன் வார இதழின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவரும் நூலின் மதிப்பீட்டுரையை கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் சி.தில்லைநடராஜாவும் நிகழ்த்துவர்.
வாழ்த்துரைகளை தினக்குரல் வார வெளியீட்டின் பிரதம ஆசிரியர் பாரதி இராஜநாயகமும், யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளைத்தலைவர் எம்.என்.அசோகனும் நிகழ்த்துவர்.
நூலின் முதற்பிரதியை ப.தினேஸ்குமார் – மதீஸ்வரி ஆகியோர் பெற்றுக்கொள்வர். (ற–9)

# பொலிஸ் நிலையத்தில் சித்திரவதை: அறிக்கையிடுமாறு நீதிமன்று உத்தரவு

மன்னார், ஓக.24
மன்னார் முருங்கன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு முருங்கன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர் என்று கூறப்படும் இரு சந்தேகநபர்களையும் சட்ட வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துமாறு மன்னார் நீதிவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.
மன்னார் நானாட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட இசைமாளத்தாழ்வு கிராமத்தைச் சேர்ந்த இரு சந்தேகநபர்கள் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்டதாகக் கூறி கடந்த வெள்ளிக்கிழமை மாலை முருங்கன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு முருங்கன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.
சம்பவதினம் இரவு 10.30 மணியளவில் முருங்கன் பொலிஸ் நிலையத்தின் கீழ் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த இரு சந்தேகநபர்களும் முருங்கன் பொலிஸ் நிலையத்தின் மேல் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் இந்த இரு சந்தேக நபர்களும் கடுமையாக பொலிஸாரால் தாக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதில் குறித்த இரு சந்தேகநபர்களில் ஒருவர் கடும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.
இந்த நிலையில் குறித்த இரு சந்தேகநபர்களும் நேற்றுமுன் தினம் மதியம் மன்னார் நீதி மன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். குறித்த இரு சந்தேகநபர்கள் சார்பாகவும் சட்டத்தரணிகளான எஸ்.பிரிமூஸ் சிறாய்வா மற்றும் எம்.சதக்கத்துள்ளா ஆகியோர் முன்னிலையாகி இருந்தனர்.
இதன் போது திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்டதாகக் கூறி முருங்கன் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த இரு சந்தேக நபர்களும் முருங்கன் பொலிஸாரால் கடுமையாக தாக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும்,குறித்த இரு சந்தேக நபர்களில் ஒருவரின் கண்,முகம் பகுதியில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளதோடு வாய் உதட்டுப் பகுதியில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதையும் சட்டத்தரணிகள் நீதவானின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.
இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் குறித்த இரு சந்தேகநபர்களையும் மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்த்து சட்ட வைத்திய அதிகாரியின் வைத்திய அறிக்கையை பெற்று மன்றில் சமர்ப்பிக்குமாறும், குறித்த சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்,மன்னார் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கு மன்னார் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
மீண்டும் இச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை இன்று திங்கட்கிழமை( மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ற–56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பிரிவுகளில் வியாபாரத்தை ஆரம்பிக்க சாவகச்சேரி சந்தை வியாபாரிகள் கோரிக்கை

தென்மராட்சி ஓக.24
மழை காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் தம்மைப் புதிய விற்பனைப் பிரிவுகளில் வியாபாரம் நடத்த அனுமதிக்க வேண்டும் என்று சாவகச்சேரி பொதுச் சந்தை வியாபாரிகள் சாவகச்சேரி நகர சபையிடம் கேட்டுள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் பொதுச் சந்தை வளாகத்தில் புதிய விற்பனைப் பிரிவுகள் அமைக்க நகர அபிவிருத்தி அதிகார சபையினர் முன்வந்துள்ளதால் தற்காலிகமாக பொது விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள கொட்டகைகளில் வியாபாரத்தை நடத்துமாறும் இரண்டு மாத காலத்தில் மீண்டும் புதிய கட்டடத்தில் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படும் எனவும் நகரசபையால் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதையடுத்து கடந்த பத்து மாதங்களாக பெரும் சிரமங்களின் மத்தியில் தற்காலிக கொட்டகைகளில் வியாபாரத்தை மேற்கொண்டுள்ளனர். இந்த நிலையிலேயே அவர்கள் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,


கடந்த பத்து மாதங்களில் பிரதேசத்தில் ஏற்பட்ட மழை மற்றும் காற்று போன்ற இயற்கை இடர்களால் இன்னல்களைச் சந்தித்துவரும் வியாபாரிகளுக்கு கட்டாக்காலி மாடுகளாலும் தொடர்ந்து பொருட்கள் அழிக்கப்படுகின்றன. இதனால் தற்காலிக கொட்டகைகளில் வியாபாரம் செய்யும் வியா பாரிகள் சொல்லொணாத துயரங்களை அனுபவித்து வரு கின்றோம். சந்தை விற்பனைப் பிரிவுக் கட்டட வேலைகள் முடிவடைந்த போதிலும் ஏனைய வேலைகளை மேற்கொள்வதில் ஏற்படும் தாமதம் காரணமாக வியர்பாரிகளும் பொதுமக்களும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

எனவே மழை காலம் ஆரம்பமாகவுள்ளதால் அதற்கு முன்னர் வேலைகளைப் பூர்த்தி செய்து புதிய விற்பனைப் பிரிவுகளில் வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும். – என்றனர்.

இது தொடர்பாக நகரசபை நிர்வாகத்தடன் தொடர்பு கொண்ட போது சந்தையின் புதிய விற்பனைப்பிரிவு வேலைகள் செய்வதற்கு நிதி கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக சிறிது காலம் வேலை செய்யப்படாமல் இருந்ததாகவும் தற்போது சில வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் விரைவில் சந்தை விற்பனைப் பிரிவுகள் திறக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் இதுவரை பொறுமை காத்த சந்தை வியாபாரிகளுக்கும்பொது மக்களுக்கும் சில வாரங்களில் சந்தை விற்பனைப் பிரிவுகள் ஆரம்பிப்பதற்கான ஏது நிலை காணப்படுகின்றது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

(ற-9)

## 10ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**பாலசுந்தரம் நித்தியானந்தன்**
(ஸ்ரீ சாயி பிறின்டேர்ஸ் உரிமையாளர்)

தோற்றம்: 25.05.1944 | மறைவு: 13.09.2005

ஆண்டுகள் பத்து ஆனபோதும்
மாறாத நினைவுதனை மனதிலே
வரைந்து கொண்டு தீராத வேதனையால்
தினம் தினம் துடிக்கின்றோம்
ஆண்டுகள் பல ஆனாலும்
ஆறாத எம் மனம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செருக்கப்புலம் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## ஈர விழிகளோடு இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சிறிகந்தநாயகி - தணிகாசலம்

தோற்றம் 15.07.1954 | மறைவு 24.08.2013

என் காதுக்கு மொழியில்லை
என் நாவுக்குச் சுவையில்லை
என் கண்களில் உறக்கமில்லை
என் மனதுக்கு அமைதியில்லை

"வேளாவை"
அளவெட்டி மத்தி, அளவெட்டி.

பிரிவால் துயருறும்
அன்புக்கணவர்
ச.தணிகாசலம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 . 10 . 1961




மறைவு 04 . 09 . 2014

ஸ்ரீபதிசர்மா
கிருஷ்ணானந்த சர்மா
(சிரேஷ்ட விரிவுரையாளர்- சமஸ்கிருத துறை
யாழ்- பல்கலைக்கழகம்.,ஆதீனகர்த்தா- சிவன் கோயில் நல்லூர்)
திதி- பூர்வபட்ச தசமி
ஆண்டொன்று போனாலும் உங்கள்
நினைவுகள் என்றும் எம்மைவிட்டு நீங்காது

துன்னாலை வடக்கு
கரவெட்டி.

உங்கள் நினைவுடன்
மனைவி,குடும்பத்தினர்.
021 226 3808

## தசாக கிருகயக்கு அறிவித்தல்



நிகழும் மன்மத வருடம் ஆடி மாதம்(15.08.2015)
சனிக்கிழமை காலைப் பொழுதில் சிவபதம் அடைந்த
அமரர் பிரம்மஸ்ரீ ஆனந்தகுமாரசாமி
சர்மா பாலகிருஷ்ண சர்மா
(அரியாலை கிழக்கு முத்து விநாயகர் தேவஸ்தான, கோப்பர்குள துரவடி பிள்ளையார் தேவஸ்தான பிரதமகுரு)
அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும்
தினங்களில் நடைபெறும்

ஆவணி 07 (24.08.2015) திங்கட்கிழமை - தசாகம் முற்பகல் 10.00 மணி
ஆவணி 08 (25.08.2015) செவ்வாய்க்கிழமை - ஏகோதிட்டம், மாசிகம்
ஆவணி 09 (26.08.2015) புதன்கிழமை - சபீண்டீகரணம்
ஆவணி 10 (27.08.2015) வியாழக்கிழமை - கிருகயக்கும்

மேற்படி ஆத்மசாந்திக் கிரியைகளிலும் 27.08.2015 வியாழக்கிழமை மதியம் 12.00 மணிக்கு இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து சிவபதம் அடைந்த பாலகிருஷ்ண சர்மாவின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்போமாக.

இந்த அறிவித்தலை தனிப்பட்ட அறிவித்தலாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அரியாலை கிழக்கு,
அரியாலை.

குடும்பத்தினர்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
அப்புக்குட்டி
துரைராசா
மலர்ந்தது
17.06.1928

மறைந்தது
18.08.2010

ஆண்டுகள் ஐந்தும் ஆனதுவோ ஆனாலும் அன்பு
முகம் மட்டும் மாறவில்லை தேடித் தேடி
பார்க்கின்றோம் சென்ற இடம் இன்றும்
தெரியவில்லையே ஓடி வந்து உறவு கொள்ள-
உங்களைப்போல் ஒருவரும் இல்லையே
மீண்டும் ஒரு பிறப்புண்டேல் எங்களுக்கு
அப்பாவாகவும் அம்மாவிற்கு நல்ல
கணவனாகவும் பிறக்க வேண்டும் என்று
நல்லூர்க் கந்தனை வேண்டி
ஈரவிழிகளுடன் காத்து இருக்கும்

அன்பு மனைவி,
அன்னலட்சுமி,
மக்கள், மருமக்கள்
,பேரக்குழந்தைகள்,
பூட்டப்பிள்ளைகள்

கொக்குவில் மேற்கு ,ஆனைக்கோட்டை றோட்,
குளப்பிட்டிச் சந்தி.
026 491 6624

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியப் பட்டியல் நியமனத்தில் மதினி நெல்சனை நியமிக்குக

## வடமாகாண பெண்கள் அமைப்பு கோரிக்கை

யாழப்பாணம், ஓக.24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதல் முறையாக யாழ். தேர்தல் தொகுதிக்கு பெண் வேட்பாளரை நியமித்தமை பெருமைக்குரியது. அதேபோன்று தேசியப் பட்டியலில் மதினி நெல்சனை நியமிக்க வேண்டும் என வடமாகாண பெண்கள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் பெண்கள் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எமது மனப்பூர்வமான வாழ்த்துக்கள். கூட்டமைப்பில் பெண்கள் பிரதிநிதித்துவம் இல்லாதது கவலையளிக்கின்றது. இதனைப் போக்க தேசியப் பட்டியலில் இளம் துடிப்புள்ள பெண் ஒருவரை நியமிக்க வேண்டும். பெண்கள் பிரச்சினை நாடாளுமன்றம் வரை பேசப்பட வேண்டும். எமக்கு நீதி கிடைப்பதற்காக பெண் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்படவேண்டும். உள்நாட்டுப் போரின் பின்னர் பெண்களின் துன்பங்கள் அளவற்றவை. இன்னமும் மீள முடியாத நிலையில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. குறிப்பாக வடக்கில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர அரசியல் பிரதிநிதித்துவம் அவசியம். இது தட்டிக்கழிக்க முடியாதது. தவிர்க்க முடியாதது.

உள்நாட்டுப் போர்க்காலத்திலிருந்து ஆண்களுக்கு நிகராக பெண்கள் தேசத்துக்காகவும் இனத்தின் விடுதலைக்காகவும் போராடி வந்துள்ளோம். பெண்களுக்கான சமூக அணிதிரட்டலை மேற்கொண்டு வருகின்றோம். இந்த நிலையில் பெண் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டால் யாழ். மாவட்டத்தை மட்டுமன்றி ஏனைய மாவட்டங்களைக் கட்டியெழுப்பவும் உறுதுணையாகவும் இருக்கும். நியமிக்கப்படும் பெண் உறுப்பினர் மகளிர் அமைப்புக்களுடன் களத்தில் நின்று பணியாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

இந்த நிலையில் திருமதி நெல்சன் மதினி எவ்வித பயனும் எதிர்பாராது சமூக சேவை ஆற்றிய பெருமைக்குரியவர். இவருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசிய பட்டியலில் இடம்கொடுப் பதன் மூலம் எமது கோரிக்கையை நிறைவேற்று மாறு கேட்டுக்கொள்கிறோம்.- என்றுள்ளது.

(ற-10)

# சந்நிதிக்கான பாதயாத்திரை ஆரம்பம்

மட்டக்களப்பு வெருகல் முருகன் ஆலயத்தில் இருந்து கடந்த 20 ஆம் திகதி வியாழக்கிழமை இந்து சமயத் தொண்டரான வேல்சாமி தலைமையில் தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்துக்குப் புறப்பட்ட பாதயாத்திரைக் குழுவினர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடிகாமம் பிள்ளையார் கோயிலை வந்தடைந்து, அங்கிருந்து மறுநாள் திங்கட்கிழமை செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தைச் சென்றடையவுள்ளனர் என்று பாதயாத்திரைக் குழுவின் தலைவரான வேல்சாமி தெரிவித்துள்ளார்.

இந்தக்குழுவில் வேல் ஏந்திய வண்ணம் 17 தொண்டர்கள் கலந்து கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்ட அவர் பாதயாத்திரைக் குழுவுடன் தொடர்பற்ற சிலர் தமது பெயரைக்கூறி நிதிசேர்ப்பதாகவும் அப்படி வருபவர்களுக்கு எந்த உதவிகளையும் வழங்க வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளார்.

(ற-7)


**பணியாளர்கள் தேவை**

பிடைவை விற்பனையில் அனுபவமுள்ள ஆண் பணியாளர்கள் தேவை.

தொடர்பு : 077 720 8454

**காணி விற்பனைக்கு**

பலாலிவீதி,தபால் பெட்டி சந்திக்கருகில் நி.பர. 2 குளி 12.37 விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :

077 977 3375, 0047 400 42067


**மாகாண இறைவரித் திணைக்களம்**
**வட மாகாண சபை அறிவித்தல்**

**வட மாகாணத்தின் முத்திரை தீர்வை அறவிடுதல்**

01. மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 27.11.2014 ஆம் திகதிய 1890/31ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் சம்பந்தமாக வட மாகாண பொது மக்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றது

02. 2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நிதி நியதிச்சட்டத்தின் 35 ஆம் பிரிவின் கீழ் இடம்பெற்றுள்ள கட்டளைகளுக்கமைய

    i. வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள அசைவற்ற ஆதனத்தின் கைமாற்றம் தொடர்பிலான சாதனம் ஒவ்வொன்றின் மீதும்

    ii. இலங்கையில் வடக்கு மாகாணத்தில் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட ஏதேனும் நீதிமன்றத்தில் தொடர்புபட்ட வழக்கு நடவடிக்கைகளில் சமர்ப்பிக்கப்படும் அல்லது கோப்பிடப்படும் ஆவணம் ஒவ்வொன்றின் மீதும்

    iii. வடக்கு மாகாணத்தில் மோட்டார் வாகனம் ஒன்றின் தொடர்பில் வலுவுடையதான கைமாற்றம் ஒவ்வொன்றின் மீதும்.

    முத்திரைத் தீர்வை விதிக்கப்படுதல் வேண்டும்.

03. மேற்குறிப்பிடப்பட்ட முத்திரைத் தீர்வை உட்பட வட மாகாணத்திற்குரிய வரியினை அறவிடுவதற்கு 08.07.2015 தொடக்கம் வட மாகாண இறைவரித் திணைக்களம் செயற்பட்டு வருவதுடன் மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதிக்கிளையிலுள்ள வட மாகாண இறைவரித் திணைக்களத்தின் 030 - 10015006413 என்ற இலக்கம் கொண்ட வங்கிக் கணக்கிற்கு வரவிடுவதற்கு,ஆதனங்களின் உரிய பெறுமதி மீது முத்திரைத் தீர்வைக்குரிய தொகையை ஏதாவது மக்கள் வங்கிக் கிளைக்கூடாக செலுத்தவேண்டும்.

04. முத்திரைத் தீர்வையினை செலுத்துதல் தொடர்பான மேலதிக விவரங்களுக்கு கீழ் குறிப்பிடப்பட்ட விலாசத்திற்கு எழுத்து மூலம் அல்லது தொலைபேசி மூலம் அல்லது நேரடியாக சமுகமளித்து விவரங்களை அறிந்துகொள்ள முடியும்.

ஆணையாளர்,
மாகாண இறைவரித் திணைக்களம்,
வடக்கு மாகாண சபை,
187, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
021 221 2416/ 021 221 2415

பா.சிவாஜி
இறைவரி ஆணையாளர்,
வட மாகாணம்.

"நீங்கள் செலுத்தும் வரி வட மாகாணத்தின் அபிவிருத்திக்கேயாகும்"

14 ஆகஸ்ட் 2015

# திறந்த வாகனத்தில் குடிதண்ணீர் விநியோகம்: ரூ.60,000 அபராதம்

வவுனியா, ஓக. 24

வவுனியாவில் திறந்த வாகனத்தில் குடி தண்ணீர் விநியோகம் செய்த விநியோகஸ்தருக்கு வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், ரூபா 60 ஆயிரம் பெறுமதியான கைப்பற்றப்பட்ட தண்ணீர் போத்தல்களை அழிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வவுனியாவிலிருந்து முல்லைத்தீவுக்கு விற்பனைக்காக திறந்த வாகனத்தில் குடிதண்ணீர் போத்தல்களை ஏற்றிச் சென்ற வேளை ஓமந்தையில் பொது சுகாதாரப் பரிசோதகரர்களால் சோதனையிடப்பட்டபோது பிரதான உணவு அதிகாரியின் அனுமதியின்றி 19லீற்றர் தண்ணீர் போத்தலில் அடைத்து விற்பனை செய்யப்பட்டது தெரியவந்ததுள்ளது. சூரிய வெப்பம் படும்படி திறந்த வாகனத்தில் விற்பனைக்கு எடுத்துச் செல்லப் பட்டதை அடுத்து அவற்றைக் கைப்பற்றி, வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் சுகாதாரப் பரிசோதகர்கள் முற்படுத்தியிருந்தனர்.(ற)

# விபத்தில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஓக. 24

மீசாலை புத்தூர் சந்தியில் வீதி ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கர வண்டி திடீரென புறப்பட்டு ஏ - 9 வீதியில் பயணிக்கும்போது அதே திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் மோட்டார் சைக்கிள் சாரதி காயமடைந்துள்ளார். மட்டூர் கிழக்கைச் சேர்ந்த கனகரத்தினம் இராசலிங்கம் (வயது - 55) என்பவரே காயமடைந்தார். அதேபோன்று சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் இடம்பெற்ற முச்சக் கர வண்டி - மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த கீரிமலை நகுலேஸ்வரா வீதியைச் சேர்ந்த கந்தையா ரஜிகரன் (வயது - 35) என்பவரும், வரணி இயற்றாலையைச் சேர்ந்த கணபதி குமாரசாமி என்ற முச்சக்கரவண்டி சாரதியும் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் இராசலிங்கம், சஜிகரன் ஆகியோர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ற-ரி3,9)

# உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணயக் குழு அறிக்கை கையளிப்பு

உள்ளூராட்சி மன்றங்கள் குறித்து எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை வர்த்தமானி பிரசுரத்துக்காக கையளிக்கப் பட்டுள்ளது என்று அரச நிர்வாக மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன் பிரகாரம், சுமார் 6 ஆயிரம் உள்ளூராட்சி மன்றப் பிரிவுகள் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்படவுள்ளன. எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் வட் டார அடிப் படையில் நடைபெறவுள்ளதாக அரச நிர்வாக மற்றும் உள்ளூ ராட்சி மன் றங்கள் அமைச் சின் செய லாளர் ஜே. தடல்லகே தெரிவித்தார்.

வர்த்தமானி பிரகடனத்தின் பின்னர் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் அது குறித்த விமர்சனங்களை முன்வைக்க முடியும் என்றும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

(ற-5)


**பதவிக்கான தேடல்**

நீங்கள் O/L தகைமை உடையவரா? எமது American நிறுவனமானது தனது புதிய கிளைகளை கிளிநொச்சி,முல்லைத்தீவு,யாழ்ப்பாணம்,வவுனியா,மன்னார் ஆகிய மாவட்டங்களில் இவ்வாண்டு ஆரம்பிக்கவுள்ளது.

- வயதெல்லை:18 - 30
- அனுபவம் அவசியமற்றது
- மேற்பார்வையாளர், விற்பனைப் பிரதிநிதிகள்
- தங்குமிடம், உணவு வசதிகள் உண்டு.

தொடர்புகளுக்கு : 077 230 2795,077 556 6224

HOUSES FROM 02 MILLION THIS HOUSE IN YOUR LAND FOR 10 MILLION

BUILD YOUR DREAM HOME WITH US



We undertake Constructions of Commercial Buildings & Houses in any part of the island

Royal Crown Homes & Constructions

0773 42 7843
0767 42 7843

நீரிழிவைக் கட்டுப்படுத்தி ஆரோக்கியமான வாழ்வை நோக்கி

*Northern Central Hospital* இல் புதியதொரு ஆரம்பம்!!!

**நீரிழிவுச் சிகிச்சை நிலையம் (Diabetic Centre)**

- முழுமையான பரிசோதனைகள் (சிறுநீரகம், ஈரல், கண்கள், இருதயம், பாதங்கள்)
- விசேட பொது வைத்திய நிபுணர்களின் ஆலோசனை

குறிப்பு:
சிறுநீர் மற்றும் இரத்தப் பரிசோதனைகளுக்கு 12 மணி நேரம் உணவருந்தாமல் இருத்தல் வேண்டும் (நீர் அருந்தலாம்).

நேரம் : ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 6.30 -7.30



Northern Central Hospital
342, Palaly Road, Thirunelveli, Jaffna
0212219988, 0212219977, 0212222263


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் மாணிக்கவாசகர் அரிமன்னகுமார்

முல்லைத்தீவு செம்மலை

[ஓய்வு பெற்ற தணைத்துறைப்பற்ற பிரதேசசபை ஊழியர்]

பிறப்பு 20.01.1958 இறப்பு 25.07.2015

கடந்த 25.07.2015 சனிக்கிழமை காலமான எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த சனிக்கிழமை கீரிமலையில் நடைபெற்றன. இன்று மதியம் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி வழியாகவும் ஆறுதல் கூறியோருக்கும் பல வழிகளில் உதவிபுரிந்தோருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

செம்மலை,
முல்லைத்தீவு.

குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

சிவனேசராசா சிவலதன் (லதன்)

தாயின் மடியில் 24.08.2000

இறைவன் அடியில் 28.07.2015



கடந்த 28.07.2015 சிவபதமடைந்த எங்கள் அன்புச் செல்வம் சிவனேசராசா சிவலதன் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி வாயிலாகவும் ஆறுதலைத்தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எதிர்வரும் [27.08.2015] வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: தனிப்பட்ட அழைப்புகள் அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம். தயவு செய்து இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

விநாயக முதலியார் வீதி,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

# தேசிய அரசு அமைக்கப்படுவது வரவேற்கப்பட வேண்டியது

## உலமா கட்சி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 24

சிறி லங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு தேசிய அரசு உருவாக்கப்பட்டுள்ளமைபெரிதும்வரவேற்கப்படவேண்டிய ஒன்று என்பதுடன் இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பெரிதும் பாராட்டுக்குரியவர் என்று தெரிவித்துள்ளார் உலமா கட்சித் தலைவர் கலாநிதி முபாறக் மௌலவி.

கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற உயர்சபை உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நடந்து முடிந்த தேர்தலில் எந்தக் கட்சியினாலும் பெரும்பான்மையை பெற முடியவில்லை என்பது உற்று நோக்கப்பட வேண்டிய ஒன்று. இந்த நிலையில் ஜனாதிபதி தலையிட்டிருக்காவிட்டால் ஐக்கிய தேசிய கட்சியினால் ஆட்சியமைக்க முடியாது போயிருக்கும். நாட்டின் எதிர்காலத்தைக் கருதி சகல கட்சிகளையும் உள்வாங்கி நல்லதொரு அரசு அமைய வேண்டுமென்ற விருப்பம் கொண்டிருந்த ஜனாதிபதி மிகவும் சாமர்த்தியமாக செயற்பட்டு பிரதான இரண்டு கட்சிகளையும் இணைத்து அரசமைத்துள்ளமை மாபெரும் வரலாற்று நிகழ்வு. இது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின்கொள்கைக்குக்கிடைத்தபெரு வெற்றி.

கடந்த பொதுத்தேர்தலில் எமது கட்சி தேசிய ரீதியில் ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும், அம்பாறை மாவட்டத்தில் யானை சின்னத்தில் போட்டியிட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் ஆதரவளித்ததன் மூலம் தேசிய அரசு அமைய நாமும் முன்னுதாரணமாக இருந்துள்ளோம்.

அந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாடு முன்னேற தேசிய அரசு பாடுபடுவதுடன், நாட்டில் இனவாதம் எந்த ரூபத்தில் வந்தாலும் அதற்கு இடம் கொடுக்காமல் சகல இன மக்களும் நிம்மதியாய், அடுத்தவர் தொந்தரவின்றி வாழ்வதற்கானசூழலை உருவாக்க வேண்டும். இனப்பிரச்சினைக்கு தீர்வாக சகல இனங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில தீர்வை முன்வைப்பதற்கும் தேசிய அரசு முனைப்புடன் செயற்பட வேண்டும். இதனை ஜனாதிபதி மைத்திரியின் ஆட்சிக்காலத்துள் செய்து முடிக்கப்படும் என நாம் நம்புகிறோம்.- என்றார். (ற-10)

## கருங்குளவி தாக்கி இருவர் பாதிப்பு

தென்மராட்சி, ஓக.24

பனை மரத்திலிருந்து வீழ்ந்த ஓலைக்குள்ளிருந்து புறப்பட்ட கருங்குளவிகள் வீதியில் நடந்து சென்ற இருவரை தாக்கின. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மீசாலை வடக்கில் நடந்துள்ளது.

குளவிகளால் தாக்கப்பட்ட இதே இடத்தைச் சேர்ந்த செல்வராசா தயாவாணி ( வயது-11 ) என்னும் மாணவியும், இரத்தினம் நடேஸ்குமார் ( வயது 48 ) என்பவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ற-9)

## வெடிபொருள் மீட்பு

நெல்லியடி, ஓக.24

பருத்தித்துறை தம்பசிட்டிப்பகுதியில் கைவிடப்பட்ட காணியில் இருந்து வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

தம்பசிட்டி வாணன்குடியிருப்பு பகுதியிலுள்ள கைவிடப்பட்ட காணியில் உள்ள பற்றை ஒன்றிலிருந்து இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டது . அப்பகுதியில் விளையாடிய சிறுவர் இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் குண்டு செயலிழக்கச் செய்யும் படைப் பிரிவின் உதவியுடன்அதனைமீட்டுசெயலிழக்கச்செய்தனர். (ற-108)

# மரண அறிவித்தல்



தோற்றம் 01 . 10 . 1930

மறைவு 21 . 08 . 2015

## தம்பிப்பிள்ளை வேலுப்பிள்ளை

(ஓய்வுபெற்ற கடற்தொழில் பரிசோதக அதிபர்)

மாதகலைப் பிறப்பிடமாகவும் யாழ். 2 ஆம் குறுக்குத்தெருவை வதிவிடமாகவும் தற்பொழுது கனடாவில் வாழ்ந்தவருமான தம்பிப்பிள்ளை வேலுப்பிள்ளை 21.08.2015 வெள்ளிக்கிழமை அமரத்துவ வாழ்வை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான, தம்பிப்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும்,பிரேம்குமார், சுரேஸ்குமார், பிரதீப்குமார், ஆஷாகுமாரி,காலஞ்சென்ற உஷாகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், காபி, விஜயா,றஜனா, சுரேந்திரா, திலகராஜா ஆகியோரின் அன்பு மாமனும், சொரூபன், அபிராமி,அரோன்,பிரணன், ரம்யா,சொன்யா, ஆர்த்திகா, அபிராம், பிறயன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், இலட்சுமி, விசாலாட்சி, சிவாபக்கியம் மற்றும் திலகவதி ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்றவர்களான செல்லர்,வன்னித்தம்பி, குமரையா,சுப்பையா, நடராஜா மகேஸ்வரி மற்றும் பாலசிங்கம், துரைசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற பத்மநாதனின் சகலனும்,லலிதாதேவி, நீலாம்பிகை ஆகியோரின் உடன்பிறவா அன்புச் சகோதரரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2015) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தொடர்பு: பிரதீப்குமார் - 416 457 9510,
ஆஷாகுமாரி - சுரேந்திரா 416 754 2926/416 558 0039,
சுரேஸ்குமார் - 514 693 0564

தகவல்
பிரதீப்குமார்

# உன் நினைவுகளுடன் ஆண்டுகள் ஆறு

மழலையாய் 07 . 01 . 1988



தெய்வமாய் 28 . 08 . 2009

## அமரர் கருணாதேவன் றஜீவன் (றஜீ)

(வணிக முதற்தேர்வு முதலாம் வருட மாணவன் யாழ் பல்கலைக்கழகம்)

திதி : பூர்வபக்ஷ நவமி - 24.08.2015

ஆறு ஆண்டுகள் உன்பிரிவு இன்றுடன்...............
நூறாண்டுகள் வாழவே நாம் கண்ட கனவுகள் - இன்று
விழியிரண்டும் வலியின் வேதனையில் துடிக்கின்றது
ஆண்டுகள் சென்றாலும் நீ செதுக்கிய - நினைவுகள்
என்றும் எம் இதய தூண்களில்.......
எம் எல்லையில்லா அன்புருவை - அன்று
வேரக்கேணி வாசலில் சதுர்த்தி தினத்தில் பறி கொடுத்த கொடிய நாள்....
ஆருயிர் றஜீ !
எம் குடும்ப வானில் சீக்கிரமே ஒளிர்வாய்
சுட்டெரிக்கும் சூரியனாய் அல்லாது வெண் நிலவாய்
ஏக்கத்தின் எல்லை தனில் - எமை
தவிக்க விட்டு சென்ற மாயமென்ன.......?
கலைந்து போகும் என்று தெரிந்தே கனவு காண்கின்றோம் தினமும்..
தென்றல் மோதி பூக்களுக்கு வலிப்பதில்லை - ஆனால்
உன் நினைவுகள் மோதி வலிக்கிறது தென்றலாய்.......
இவ்வளவு வலிகளுடன்
எம் இதயம் இன்னும்
துடித்துக் கொண்டிருப்பது
அதிசயம் தான்........ றஜீ

[illegible] தெற்கு,
சாவகச்சேரி.

என்றும் உன்நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Opera Max அப்பிளிக்கேஷன் புதிய பதிப்பு வெளியீடு

கைபேசி சாதனங்களில் இணைய இணைப்பைப் பயன் படுத்தும்போது டேட்டாவின் அளவைக் குறைவாகப் பயன்படுத்த உதவும் அப்பிளிக்கேஷனே Opera Max ஆகும். இந்த அப்பிளிக்கேஷனின் பதிப்பானது சில புதிய அம்சங்களை உள்ளடக்கியதாக வெளியிடப்பட்டுள்ளது. இதன் உதவியுடன் வீடியோ உட்பட ஏனைய நோக்கங்களுக்காக டேட்டாவைப் பயன்படுத்தும் போது 50 சதவீதத் தினால் டேட்டா பாவனையை சுருக்கக்கூடியதாக (Compressed) காணப்படுகின்றது. இவை தவிர YouTube, Netflix என்பனவற்றில் வீடியோக்களை பார்வையிடும் போது Buffering ஆவதற்கான நேரமும் குறைவாகவே உள்ளது. மேலும் இந்த அப்பிளிக்கேஷனை Mobile Date Connection மற்றும் WiFi ஆகிய இரண்டுக்கும் பயன்படுத்த முடியும்.

# சோனி அறிமுகம் செய்யும் Smart Band 2



இலத்திரனியல் சாதன உற்பத்திக்கு பெயர்பெற்ற சோனி நிறுவனம் SmartBand 2 எனும் அதி நவீன இலத்திரனியல் கைப்பட்டி ஒன்றை அறிமுகம் செய்யவுள்ளது. இதில் இதயத்துடிப்பு வீதத்தை அறிந்துகொள்ளும் விசேட சென்சார் பொருத்தப்பட்டுள்ளதுடன், குரல்வழி அழைப்புக்கள், குறுஞ்செய்திகள், மின்னஞ்சல்கள் என்பவற்றை அனுப்பும் வசதியும் தரப்பட்டுள்ளது. இவை தவிர மேலும் பல புதிய அம்சங்கள் உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டுள்ள இக் கைப்பட்டியின் விலையானது 119 பவுண்ட்ஸ் ஆக இருப்பதுடன், சுமார் 60 நாடுகளில் அடுத்த மாதம் அறிமுகம் செய்யப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அன்ரோயிட் கைபேசி சாதனங்களை Root செய்வதற்கு



அன்ரோயிட் கைபேசி சாதனங்களில் சில வகையான அப்பிளிக்கேஷன்கள் இயங்குவதற்கோ அல்லது மொபைல் ஸ்டோரேஜ்ஜில் உள்ள கோப்புக்களை மெமரி கார்ட்களுக்கு மாற்றுவதற்கோ Root செய்ய வேண்டியது அவசியம் ஆகும். இவ்வாறு Root செய்வதற்கு குறித்த சாதனம் இயங்கு நிலையில் இருக்க வேண்டியதுடன், பற்றரியானது 50 சதவீதம் வரையாவது சார்ஜ்ஜைக் கொண்டிருக்க வேண்டும். இவை தவிர இணைய இணைப்பு, USB கேபிள் என்பனவும் அவசியமாகும். தற்போது உங்கள் டெக்ஸ்டாப் கணினியில http://www.kin goapp.com/androiddroot/download.htm எனும் தர விறக்கச் சுட்டியை அழுத்தி மென்பொருளைத் தர விறக்கம் செய்து நிறுவிக்கொள்ளவும். தரவிறக்கச் சுட்டி பின்னர் குறித்த அப்பிளிக்கேஷனை ஓப்பன் செய்து கைபேசி சாதனத்தை USB கேபிள் ஊடாக கணினியுடன் இணைக்கவும். தொடர்ந்து தோன்றும் விண்டோவில் Root என்பதை தெரிவு செய்து சிறிது நேரம் காத்திருக்கவும். சிறிது நேரத்தில் Finish எனும் பொத்தான் தோன்றும். அதனை அழுத்தி வெற்றிகரமான Root இனை உறுதிப்படுத்தவும்.

## வறிய மாணவருக்கு சைக்கிள்



தென்மராட்சி, ஓக.24

மீசாலையூர் தமிழ்ப்புலவரும் ஆன்மிகச் சொற்பொழிவாளருமாகிய கு.வி.மகாலிங்கம் நினைவாக அவரது குடும்பத்தினரால் தென்மராட்சி பிரதேச வறிய மாணவர்கள் 30பேருக்கு நேற்றுமுன்தினம் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. புலம்பெயர் நாடொன்றில் வதியும் டாக்டர் மகாலிங்கம் ஞானகுமாரன் மாணவர்களுக்கு சைக்கிள்களை வழங்கினார். அமரர் கு.வி.மகாலிங்கம் நினைவாக வறிய மாணவர்களுக்கு சைக்கிள் வழங்குவது தொடர்பாக விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு விண்ணப்பித்த அனைத்து மாணவர்களுக்கும் சைக்கிள் வழங்கப்பட்டுள்ளது என்றும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 100 மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கும் சைவப் புலவர் கு.வி.மகாலிங்கம் சமூக அறக்கட்டளையின் செயற்றிட்டத்தில் மேலும் விண்ணப்பிக்கும் 70 மாணவர் களுக்கு சைக்கிள்கள் வழங் கப்பட வுள்ளது என்றும் ஏற்பாட்டாளர் தி.முருகதாஸன்தெரிவித்தார். (ற-9)



முள்ளியவளை ஸ்ரீ கல்யாணவேலவர் ஆலய எண்ணைக்காப்பு சாத்தும் நிகழ்வு எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6 மணி முதல் மறுநாள் 26ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4 மணிவரை நடைபெறவுள்ளது என்றும் மஹா கும்பாபிஷேக நிகழ்வு 27ஆம் திகதி காலை 8 மணி முதல் காலை 9.20 மணிவரையுள்ள சுப வேளையில் நடைபெறவுள்ளது என்றும் ஆலய பரிபால சபையினர் அறிவித்துள்ளனர். (ற-102)



வடமாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசாவால் வவுனியா நெளுக்குளத்தில் அமைந்திருக்கும் சிறி வீரமாகாளி அம்பாள் ஆலய கட்டட புனருத்தாரனவேலைக்காக குறித்து ஒதுக்கப்பட்ட 2015ம் ஆண்டிற்கான பிராமாண அடிப்படையிலான [illegible] நன்கொடை மூலம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (ற)



திகாமடுல்ல மாவட்டத்தில் கல்முனைத் தொகுதிக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பாக தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் வழங்கப் படவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் எம்.ஏகாம்பரம் தலைமையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய முன்பாக இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. அதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும், பொது மக்களும் கலந்து கொண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

## எதிர்வரும் சில நாள்களில் பல அரசியல்வாதிகள் கைது?

### *நிதி மோசடிப் பிரிவினரால்*

கொழும்பு, ஓக.24

நிதி மோசடி தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், எதிர்வரும் நாள்களில் பல அரசியல்வாதிகள் கைதுசெய்யப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

நிதி மோசடி தொடர்பில் மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, முன்னாள் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா உள்ளிட்ட பலர் மீது மேற் கொள்ளப்பட்ட விசாரணைகள் தற்போது நிறைவுக்கு வந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், எதிர்வரும் காலத்தில் இவர்கள் தொடர்பில் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்து கைதுசெய்யப்படலாமெனக் கூறப்படுகிறது. அத்துடன் கடந்த நாடாளுமன்ற தேர்தல் காலத்தில் விசாரணைக்கு அழைக்கப்பட்டு பின்னர் ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களது விசாரணைகளும் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளன.

அவர்களுள் விமல் வீரவன்ஸ கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

இந்த நிலையில், கடந்த காலத்தில் இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பில் சம்பந்தப்பட்டவர் களிடம் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கு யேமனில் கடும் சண்டை

## பொது மக்கள் 58 பேர் சாவு





ஏடன், ஓக.24
யேமனின் அரசு ஆதரவுப் படை யின ருக்கும், கிளர்ச்சிப் படையின ருக்கும் இடையே நடைபெற்று வரும் சண்டை யில், அப்பாவி பொது மக்கள் 58 பேர் உயிரிழந்துள்ளனனர் என மருத் துவ ஊழி யர்கள்தெரிவித்துள்ளனர்.
தெற்கு யேமனில் உள்ள நகரத்தைக் கைப்பற்றுவதற்காக சவூதி அரே பியா தலைமையிலான கூட்டுப் படை மற்றும் கிளர்ச்சி படைக்கு இடையே நடைப்பெற்ற சண்டை யின்போது 58 அப்பாவிப் பொது மக்கள் உயிரிழந்ததாகவும் 50க் கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந் துள்ளதாகவும் அங்கு பணியில் இருக்கும் மருத்துவ ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.
கடந்த மார்ச் மாதத்தில் இருந்து நடந்து வரும் உள்நாட்டுப் போரில் கிட்டத்தட்ட 4 ஆயிரத்து 300 பேருக்கும் அதிகமானோர் இது வரை உயிரிழந்துள்ளதுடன், 21 மில்லியன் மக்கள் புலம் பெயர்ந் துள்ளனர் எனவும் அங்கிருந்து தகவல்கள் வெளி யாகியுள்ளன.(ஐ)



தூத்துக்குடியில் அ.தி.மு.கவினர் இளங்கோவன் மற்றும் குஷ்பு ஆகியோரின் உருவ பொம்மை களை கல்லைக் கட்டி கடலில் இறக்கிப் போராட்டம் நடத்தியுள்ளனர். முதல்வர் ஜெயலலிதா, பிரதமர் மோடி சந்திப்பு குறித்து இளங்கோவன் அவதூறாக பேசியதாக அ.தி.மு.க.வினர் பல்வேறு வித்தியாசமான போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இளங்கோவனுக்கு எதிராக தமிழகத்தில் இன்னும் போராட்டங்கள் தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முகத்தை மறைக்காத பெண்களை கல்லால் அடித்துக் கொன்ற ஐ.எஸ்.




மொசூல்,ஓக.24
முகத்தை மறைக்கத் திரை அணி யாத பெண்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் கல்லால்அடித்துகொலைசெய்துள்ளனர்.
ஐ.எஸ். தீவிரவாதிகள் ஈராக் மற்றும் சிரியாவில் தங்களது கட்டுப்பாட் டில் உள்ள நகரங்களில் உள்ள பெண்கள் மற்றும் சிறுவர்களுக்குக் கடுமையான தண்டனைகளை நிறைவேற்றி வருகின்றனர். இந்த நிலையில் ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்களது ஆளுகைக்கு உட்பட்ட மொசூல் நகரில் உள்ள கிலானி முகாமில், பெண்கள் ஐவர் முகத்தை மறைக்கத் திரை அணியவில்லை என அறிந்துள்ளனர். இதையடுத்து, அவர்களுக்குத் தண்டனை அளிக் கும் விதமாக அந்த 5 பெண்களை யும் கல்லால் அடித்துக் கொலை செய்துள்ளனர். (ஐ)

# தற்கொலைப் படையாக மாறும் எயிட்ஸ் தீவிரவாதிகள்

தங்களது அமைப்பைச் சேர்ந்த எய்ட்ஸ் நோயால் பாதிப்புற்ற வீரர்களை ஐ.எஸ். அமைப்பினர் தற்கொலைப்படையாக மாற்றத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஈராக் மற்றும் சிரியாவின் முக்கிய பகுதிகளைக் கைப்பற்றியுள்ள ஐ.எஸ்.தீவிரவாதி கள் அதனைத் தனி இஸ்லாமிய நாடாக அறிவித்துள்ளனர். மேலும் நூற்றுக்கும் மேற்பட்ட யாஷ்தி இன பெண்களையும் கடத்திச் சென்று பாலியல் அடிமைகளாகப் பயன் படுத்தி வருகின்றனர். இந்த நிலை யில், ஐ.எஸ்.அமைப்பைச் சேர்ந்த வர்களில் 16 பேருக்கு எய்ட்ஸ்ப் பாதிப்பு இருப்பதாகத் தகவல் வெளி யாகியுள்ளது. இதனையடுத்து சிரியா வில் ஐ.எஸ். அமைப்பினர் நடத்தும் ஒரு மருத்துவமனையில் அவர்க ளுக்கு சிகிச்சை அளிக்கபட்டு வரு வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அவர்களுக்கு எய்ட்ஸ் நோயைப் பரப்பிய மொராக்கோ நாட்டைச் சேர்ந்த இரு பெண்கள் உயிருக்குப் பயந்து துருக்கி நாட்டுக்குத் தப்பி ஓடியுள்ளனர். இந்த நிலையில் இந்த நோய் மேலும் பலருக்கு பரவி விடுமோ எனப் பயந்து போய் உள்ள ஐ.எஸ். அமைப்பினர் எய்ட்ஸ் பாதிப்பு வீரர்கள் அனைவரையும் தற்கொலைப் படைத் தீவிரவாதிக ளாக மாற்றத் திட்டமிடப்பட்டு உள்ள தாகத் தகவல் வெளியாகியுள்ளது.(ஐ)

# மூட நம்பிக்கையின் உச்சக்கட்டம்

***தங்கையின் கண்களில் பேய் இருப்பதாக சகோதரி செய்த கொடுமை!***



ஆர்ஜன்ரீனா,ஓக.24
இளம்பெண் ஒருவரின் உடலில் பேய் புகுந்துள்ளதாகக் கூறி அவரைக் கூட்டு வன்புணர்வின் பின்னர் கண்களைத் தோண்டி எடுத்த உடன்பிறந்த சகோதரியின் செயல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆர்ஜன்ரீனா நாட்டில் உள்ள ஜெனரல் பினேடோ என்ற நகரில் தான் இந்தக் கொடூரச் சம்பவம் அரங்கேறியுள்ளது. அந்த நகரில் வசித்து வரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 16 வயதுச் சிறுமியை ஒரு விநோதமான நோய் தாக்கியுள்ளது. அதாவது, சிறுமியின் கண்களுக்கு மட்டும் சில விலங்குகள் நடமாடுவது போல் தெரிந்ததாகவும், அந்த விலங்குகள் மற்றவர்களுக்கு தெரியாமல் இருந்ததால், சிறுமியின் உடலில் பேய் தாக்கியுள்ளதாகவும் கூறப்பட்டது. இதனை அவரது பெற்றோர்களும் நம்பியுள்ளனர். சிறுமியின் மூத்த சகோதரி ஒருவர் தனது தங்கையின் பிரச்சினை தீர அருகில் உள்ள ஒரு தேவாலயப் பாதிரியார் ஒருவரின் உதவியை நாடியுள்ளார். சிறுமியின் நிலையை அறிந்த பாதிரியார், அவரது உடலில் பேய் புகுந்துள்ளது என்றும், அந்தச் சிறுமியின் கண்கள் வழியாகவே அந்த பேய் நடப்பவை எல்லாவற்றையும் பார்த்து வருவ தாகவும் கூறியுள்ளார். ஒரு நபரின் உடலுக்குள் பேய் புகுந்திருந்தால், அந்தப் பேய்க்கு தாங்க முடியாத வலியை ஏற்படுத்தினால், அந்த உடலை விட்டு பேய் வெளியேறிவிடும் என்றும் அவர் கூறியுள்ளார்.
எனவே, சிறுமியின் உடலுக்குள் பேய் செல்வதற்கு அவரது கண்களே காரணமாக இருப்பதால், அவற்றைத் தோண்டி எடுத்து விடுங்கள் என அறிவுரை கூறி தேவாலயத்துக்குச் சொந்தமான ஒரு கூர்மையான கத்தியையும் அந்த பாதிரியார் கொடுத்து அனுப்பியுள்ளார். வீட்டுக்குத் திரும்பி வந்த மூத்த சகோதரி தனக்கு தெரிந்த இளைஞர்கள் சிலரை தன்னுடன் அழைத்து வந்துள்ளார். பின்னர், தனது சொந்தச் சகோதரியை கூட்டு வன்புணர்வுக்கு அனுமதித்துள்ளார். மூத்த சகோதரியின் வார்த்தையை கேட்டு இளைஞர்களும், அந்த 16 வயதுச் சிறுமியை கூட்டு வன்புணர்வு புரிந்துள்ளனர். பின்னர் சகோதரியே அவரது இரண்டு கண்களையும் தோண்டி வெளியே எடுத்துள்ளார்.
இந்தக் கொடூரச் சம்பவத்தினால் வலி தாங்க முடியாமல் துடிதுடித்த அந்தச் சிறுமி மயங்கி விழுந்துள்ளார். இந்தச் சம்பவம் வெளியே கசிய, அதிர்ச்சி அடைந்த பொலிஸார் மூத்த சகோதரியை கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.
மூடநம்பிக்கையின் உச்சமான இந்தச் சம்பவத்தில் பங்கேற்றுள்ள அத்தனை நபர்களுக்கும் கடுமையான தண்டனை கிடைக்கவுள்ளது.
இருப்பினும், பல நபர்களால் கூட்டு வன்புணர்வு புரியப்பட்டு தற்போது கண்களை இழந்து தனது வாழ்நாள் முழுவதும் துன்பத்தை அனுபவிக்க வுள்ள அந்தச் சிறுமியின் நிலை தான் பரிதாபமாக இருப்பதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# நடனமாடி குழந்தை பெற்றெடுத்த பெண்

வொஷிங்டன்,ஓக.24
பெண்மணி ஒருவர் பிரசவ வலியின் வேதனையை மறப்பதற்காக துள் ளிக் குதித்து நடனமாடி குழந்தை பெற்றுள்ளமை ஆச்சரியத்தை ஏற் படுத்தியுள்ளது. பிரசவவலி என்பது பெண்களின் மறுபிறவியாகக் கரு தப்படுகிறது, ஆனால், இந்த வேத னையைச் சுலபமாக மறந்துவிட லாம் என அமெரிக்கப் பெண்மணி ஒருவர் நிரூபித்துள்ளார்.
அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் ஆசிரியராகப் பணியாற்றிவரும் யூகி நிஷிஸாவா என்பவருக்கு பிரசவ வலி ஏற்பட்டதைத் தொடர்ந்து மருத்துவ மனையில் அனு மதிக்கப்பட்டார். அங்கு, அவ ருக்குஅதிகமான வலி ஏற்பட்ட தைத் தொடர்ந்து, அதனை மறப் பதற்காக பொப் இசை பாட லைக் கேட்டபடி துள்ளிக் குதித்து நடனமாடியுள்ளார். ஒரு புறம் பாடலை இரசித்தபடியும், மறுபுறம் பிரசவ வலியின் வேத னையைச் சமாளித்துக் கொண்டும் அழகான ஆண்குழந் தையைப் பெற்றுள்ளார்.



இவரின் இந்தச் செயலை, அவரது கணவர் வீடியோ எடுத்து யூடியூபில் பதிவேற்றம் செய்துள்ளார். தற்போது இந்த வீடியோவைப் பல கோடி பேர் பார்த்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் 15 வயதுச் சிறுவனும் போட்டியாம்!

வொஷிங்டன்,ஓக.24

அமெரிக்காவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் 15 வயதுச் சிறுவன் ஒருவன் சுயேச்சையாக போட்டியிடவுள்ளார். லோவா மாகாணத்தைச் சேர்ந்த டீஷ் நட்ஸ் என்ற சிறுவன் தேர்தலில் போட்டியிடுவதற்காக கடந்த மாதம் தேர்தல் ஆணையத்தில் தனது பெயரைப் பதிவு செய்துள்ளார்.

ஜனநாயக கட்சி சார்பில் ஹிலாரி கிளிண்டன் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து குடியரசு கட்சி சார்பில் டொனால்டு டிரம்ப் என்ற கோடீஸ்வரர் களம் இறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவர்களுக்குப் போட்டியாக 15 வயதுச் சிறுவன் ஒருவனும் போட்டியிடவுள்ளார். அமெரிக்காவின் தேசிய கொள்கைப்படி பொதுமக்களிடம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் நட்சுக்கு வடக்கு கரோலினாவில் 9 சதவீதமும், மின்னெசோடாவில் 8 சதவீதமும், லோவாவில் 7 சதவீதமும் வாக்குக் கிடைத்துள்ளது.

அதன்படி கடந்த 20 வருடங்களில் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிடும் வேட்பாளர் தகுதியை இந்தச் சிறுவன் பெற்றுள்ளதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# கொரிய நாடுகளுக்கிடையில் தணிந்தது போர்ப் பதட்டம்





சியோல்,ஓக.24

கிழக்காசிய நாடுகளான வட கொரியாவுக்கும், தென் கொரியாவுக் கும் இடையே, கடந்த சில நாள்களாக நிலவிய போர்ப் பதட்டம் தற்போது தணிந்துள்ளது.

வட கொரியாவும், தென் கொரியாவும் எல்லைப் பகுதியில் பரஸ்பரம் பீரங்கி குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தி வந்தன. வட கொரியாவை கண்டித்தும் அதன் கொள்கைகளை விமர்சித்தும் இரு நாடுகளுக்கும் எல்லைப் பகுதியில், வட கொரியாவை நோக்கி, ஏராளமான ஒலிபெருக்கிகள் வைத்து தென் கொரியா பரப்புரை மேற்கொண்டது. அதனால் ஆத்திரம் அடைந்த வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உண் ஒலிபெருக்கிகளை, 48 மணி நேரத்துக்குள் அகற்ற வேண்டும்; இல்லையேல், தென் கொரியா மீது தாக்குதல் நடத்தப்படும் என அறிவித்தார். ஆனால், ஒலிபெருக்கிகளை அகற்ற, தென் கொரியா மறுத்து விட்டது. இதையடுத்து, நேற்று முன்தினம், எல்லையில் இராணுவத்தை குவித்த வட கொரியா, எந்த நேரத்திலும் போருக்கு தயாராக இருக்குமாறு படைகளுக்கு உத்தரவிட்டது. அது போன்று தென் கொரியாவும் தனது எல்லையில், இராணுவத்தை குவித்தது. பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும் வகையில், தென் கொரியாவின் நட்பு நாடான அமெரிக்கா, தென் கொரிய வீரர்களுடன் இணைந்து, போலிக் குண்டுகளை வீசி, போர் ஒத்திகையில் ஈடுபட்டது. இதனால், போர் பதட்டம் மேலும் அதிகரித்தது. இந்த நிலையில் அதிரடித் திருப்பமாக, கெடு முடிய சில மணி நேரங்கள் இருந்த நிலையில், இரு நாட்டு உயர் அதிகாரிகளும், பேச்சு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வந்தனர். அதன்படி எல்லையோர கிராமத்தில், நேற்று பேச்சு நடைபெற்றது. இதையடுத்து இரு நாடுகளிடையே கடந்த சில நாள்களாக நிலவிய போர் பதட்டம் தற்போது தணிந்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே, 1950 இல் தொடங்கிய போர், 1953 இல் முடிவடைந்தது. இரு நாடுகளும் போரைக் கைவிட்ட போதிலும், அமைதி உடன்படிக்கை செய்து கொள்ளவில்லை. இதனால், அவ்வப்போது போரில் இருநாடுகளும் இறங்குவது வாடிக்கையாகவுள்ளது. (ஐ)

# உலகில் அதிக வயதானவர் யாசுட்டாரோ கொய்டே



டோக்கியோ, ஓக.24

உலக சாதனைகளைப் பதிவு செய்யும் கின்னஸ் நிறுவனம் உலகில் வாழும் மிக அதிக வயதுள்ள ஆணாக ஜப்பனைச் சேர்ந்த 112 வயது யாசுட் டாரோ கொய்டேவை அங்கீகரித்துள்ளது.

மத்திய ஜப்பானில் உள்ள நகோயா நகரில் வாழும் கொய்டேவின் பிறப்புச்சான்றிதழில் அவரது பிறந்த திகதி 13-3-1903 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜப்பானின் தலைநகரான டோக்கியோவில் வாழ்ந்து வந்த சகாரி மோமோய்(வயது-112) என் பவர் இதுவரை உலகின் அதிக வயதான ஆணாகக் கருதப்பட்டு வந்த நிலையில், கடந்த ஜூலை மாதம் அவர் உயிரிழந்தார்.

இதையடுத்து, உலகில் வாழும் மிக அதிக வயதான ஆண் என்ற கௌரவம் யாசுட்டோரோ கொய்டேவுக்கு கிடைத்துள்ளது. (ஐ)

## இளம் கோடீஸ்வரரானார் பேஸ்புக் மார்க்

நியூயோர்க்,ஓக.24

உலகின் இளம் வயது கோடீஸ்வரர்களை பட்டியலிடும் வெல்த் எக்ஸ் நிறுவனம், இந்த வருடத்தில்; 35 வயதுக்குட்பட்ட கோடீஸ்வரர்கள் பட்டியலில் பேஸ்புக் நிறுவனர் மார்க் க்கர்பர்க்குக்கு முதல் இடம் அளித்துள்ளது.



41.6 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் இந்தப் பட்டியலில் முதலிடத்தை பிடித்துள்ள மார்க் க்கர்பர்க்-குக்கு அடுத்தபடியாக, அதே பேஸ்புக்கின் இணை நிறுவனரான டஸ்ட்டின் மாஸ்கோவிட்ஸ் 9.3 பில்லியன் டொலர் மதிப்புள்ள சொத்துகளுடன் இரண்டாம் இடத்திலும், மற்றொரு இணை நிறுவனரான எடுவார்டோ சாவரின் 5.3 பில்லியன்டொலர்மதிப்புள்ள சொத்துகளுடன் நான்காம் இடத்திலும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்.

20 பிரபலங்களின் பெயரை கொண்ட பட்டியலில் 6 பெண்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளனர். (ஐ)

## கணவன் மீது அன்பில்லாதவருக்கு விசா வழங்க மறுத்த பிரிட்டன்

ரொறான்ரோ,ஓக.24

கனடா நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர் பிரிட்டன் நாட்டுக் குடிமகனைத் திருமணம் செய்திருந்த நிலையிலும் அவர்களின் உறவில் சந்தேகம் இருப்பதாகக் கூறி பிரிட்டன் அரசு நுழைவிசைவு வழங்க மறுத்துள்ளது. கனடா நாட்டு குடிமகளான மரியா சம்மர்ஸ், பிரிட்டனைச் சேர்ந்த டேவிட் என்பவரை பல வருடங்களுக்கு முன்னர் திருமணம் செய்துள்ளார். தற்போது இங்கிலாந்தில் வசித்து வரும் அவர்கள் அந்த நாட்டிலேயே நிரந்தரமாக குடியேற விரும்பியுள்ளனர். இதனால், தன்னுடைய நுழைவிசைவுக் காலத்தை நீடித்து தருமாறு பிரிட்டன் அரசுக்கு மரியா விண்ணப்பம் வழங்கியுள்ளார். மரியாவின் விண்ணப்பத்தை நிராகரித்த பிரிட்டன் புலம்பெயர்வு துறையைச் சேர்ந்த அதிகாரிகள், தம்பதியினரின் உறவில் சந்தேகம் இருப்பதாக தெரிவித்துள்ளனர். பிரிட்டன் குடிமகனைத் திருமணம் செய்துள்ள மரியா, அவருடைய கணவரிடம் அன்பாக நடந்துக்கொள்கிறாரா? என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது.

எனவே, மரியாவுக்கு நுழைவிசைவு வழங்க முடியாது என்றும் அவர் உடனடியாக தாய்நாடான கனடாவுக்குத் திரும்ப வேண்டும் எனவும் வலியுறுத்திருந்தனர். தற்போது மரியாவுக்கு நுழைவிசைவு வழங்க மறுப்பதற்கு வேறு காரணம் கூறப்படுகிறது. மேலும் மரியா பிரிட்டன்நாட்டை விட்டுகனடா செல்லவேண்டும் என்றும் அவர்கள் உத்தரவிட்டுள்ளனர். ஆனால், தன்னுடைய நிலையை விளக்கமாகக் கூறியும் அதிகாரிகள் ஏற்றுக்கொள்ளாததால், இந்த விவகாரத்தில் தீர்வு கிடைக்க கனடா அரசு மற்றும் அந்த நாட்டின் ஊடகங்களின் உதவியை மரியா நாடியுள்ளார். (ஐ)

# பெரு நாட்டு அரசின் புதிய உத்தரவு


சர்வதேச அளவில் கொக்கைன் எனப்படும் போதைப்பொருள் சந்தையாக பெரு நாடு மாறிவருவதைத் தடுக்கும் வகையில் போதைப் பொருள் கடத்தப்படுவதாகச் சந்தேகிக்கும் விமானங்களைக் கண்டவுடன் சுட்டுத்தள்ளும் முடிவுக்கு அந்த நாட்டின் நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. கொக்கைன் உற்பத்தியில் உலகின் முன்னணி நாடாகத் திகழ்ந்துவரும் பெருவில் இருந்து தான் சர்வதேச கள்ளச்சந்தைகளுக்கு கொக்கைன் எனப்படும் போதைப் பொருள் விமானம் வழியாக கடத்தப்பட்டு வருகிறது. அங்கிருந்து கடத்தப்படும் கொக்கைன் அருகாமையில் உள்ள கொலம்பியா, பிரேஸில், வெனிசுலா, பொலிவியா உள்ளிட்ட நாடுகளைச் சென்றடைகின்றன. அதில் பொலிவியாவுக்கு மட்டும் தினம்தோறும் ஆயிரம் கிலோ கொக்கைன் கடத்தப்படுவதாகத் தெரியவந்துள்ளது.



அண்மைக்காலமாக பெருகிவரும் இந்தக் கடத்தலைத் தடுக்கும் வகையில் சந்தேகத்துக்குரிய விமானங்களைத் தரை இறங்கும்படி கட்டுப்பாட்டு அறை அதிகாரிகள் உத்தரவிடும் வேளையில், அதற்குக் கட்டுப்படாமல் செல்லும் விமானங்களைச் சுட்டுத்தள்ள முடிவு செய்த பெரு அரசு, இது தொடர்பாக நேற்று நாடாளுமன்றில் வாக்கெடுப்பு நடத்தியது. இது தொடர்பாக, அந்த நாட்டின் நாடாளுமன்றில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து மொத்தம் உள்ள 89 உறுப்பினர்களும் வாக்களித்துள்ளனர். இதனால் அந்தத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியதாக அறிவிக்கப்படுள்ளது. இதற்கு முன்னர், பெருவில் போதைப்பொருள் கடத்தப்படுவதாக சந்தேகிக்கும் விமானங்களைக் கண்டவுடன் சுட்டுத்தள்ளும் வழக்கம் நடைமுறையில் இருந்து வந்தது. கடந்த 2001 ஆம் ஆண்டு இதுபோன்ற சந்தேகத்தில் பெரு நாட்டு விமானப்படை வீரர்கள் ஒரு விமானத்தை சுட்டு வீழ்த்தினர். அந்தத் தாக்குதலில் அமெரிக்காவைச் சேர்ந்த சமூகச் சேவகரான வெரோனிக்கா போவர்ஸ் மற்றும் அவரது பெண் குழந்தை ஆகியோர் உயிரிழந்துள்ளனர். அவர்கள் சென்ற விமானத்தில் போதைப்பொருள் எதுவும் கடத்தப்படவில்லை என பின்நாளில் நடைபெற்ற விசாரணையில் தெரியவந்தது. இந்தச் சம்பவத்துக்கு அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்ததையடுத்து, இந்த நடைமுறையை பெரு அரசு கைவிட்டது. இந்த நிலையில், தற்போது போதைப் பொருள் கடத்தும் விமானங்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போவதால் பழைய சட்டத்தை மீண்டும் கையில் எடுக்க முடிவு செய்த அரசு இது தொடர்பாக நாடாளுமன்றில் முன்வைத்த தீர்மானம் வெற்றியடைந்துள்ளது. பெரு நாட்டின் ஜனாதிபதி ஒள்ளான்ட்டா ஹமாலா கையொப்பமிட்டதும் இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலையும் உள்ளத்தையும் சாந்தப்படுத்தி உறுதியென வைக்கும் யோகாசனப் பயிற்சிகள்



**வைத்தியர் திருமதி**
**ய. எட்ணா மரியவிண்ணேற்றொன**
(ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்)

"பார் காணும் கடல் சிறுதுளி என்றால்
அறிவு இயல் பெரும் கடல் அன்றோ?
கார்அற்று கடல் வற்றிப் போயினும்
மனித அறிவினில் ஓர்துளி வற்றுமோ?"

இந்த நவீன அறிவியல் உலகில் ஆராய்ச்சிகளுக்கும் அப்பாற்பட்டு விளங்குவது யோகாசனப் பயிற்சியும் அதன் நன்மைகளும்.

மொழிகளினுள்ளே மூத்தமொழியான தமிழ் மொழியின் தமிழர் வைத்தியம் சித்த வைத்தியம். முன்னைய காலங்களில் ரிஷிகளினாலும், சித்தர்களினாலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த பழம் பெரும் மருத்துவமாக சித்த மருத்துவமும் அதன் தத்துவங்களும் காணப்படுகின்றன.

யோகம் என்பதுசிதறும் மனச்சக்தியைக் கூட்டல், ஒருங்குதல், இணைதல், சேர்தல், ஒருமுகப்படுத்தல் எனப் பல பொருள்படும். ஒன்று சேரும் இந்த ஆற்றலை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றிய கற்றலே யோகாசனப் பயிற்சி நெறியாகும்.

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திறம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

அதாவது உடம்பு அழிந்தால் உயிரும் அழியும். உறுதியான மெஞ்ஞானத்தை அடைய முடியாது. உடம்பை வளர்த்தேன். உடம்பை யோகாப் பயிற்சிகளால் வளர்த்தேன். அதனால் உயிரையும் வளர்த்துக் கொண்டேன்.

ஆரோக்கியம் என்பது ஒருவனுடைய உடல், உள, சமூக, ஆன்மிகம் நன்நிலையில் இருத்தல் என்பதே. இவ்வுலகில் பிறந்த நாம் அனைவரும், எமது சிந்தனை, சொல், செயல், எண்ணப்பரிமாற்றம், நடத்தை, பண்பு என்பவற்றை நன்நிலையில் தொடர்ந்து பேணுவதன் மூலம், சிறந்த உடலும் நல்ல மனமும் பெற்று நிறைவான ஆரோக்கிய வாழ்வு வாழ யோகாசனம் வழிவகுக்கின்றது.

அதாவது ஒரு மனிதன் ஆரோக்கிய வாழ்வு வாழ அவனுடைய தேவைக்கும் கிடைக்கும் வளங்களுக்கும் இடையே ஒரு சமநிலை பேணப்படவேண்டியது அவசியமாகின்றது.

**தேவை வளம்**

இந்தச்சமநிலைக் குழப்பமே அவனது உடல் உளதாக்கங்களுக்கு அடிப்படையாக அமைகின்றது. இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் அதுவும் யாழ். குடாநாட்டில் நிலவிவரும் உடல், உளத்தாக்கங்களுக்கு தக்கதீர்வாக இந்த யோகாசனம் அமைகிறது. போருக்குப் பின்னான சமூகப்பிரச்சினைகளை எடுத்து நோக்குவோமாயின் உயிரிழப்பு, சொத்து இழப்பு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, தேவையதிகரிப்பு போன்ற பொருளாதார நெருக்கடிகள், பணம், பொருள், காணி மோசடிகள், ஏமாற்றம், குறைவான முதியோர் பராமரிப்பு குறிப்பாக வன்முறைகளாய், பாலியல் பிரச்சினைகள், பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர் துஷ்பிரயோகம், மது, போதைவஸ்து பாவனை மிக அதிகரித்தே காணப்படுகின்றன.

இவற்றுக்குரிய சிகிச்சை முறையை எடுத்து நோக்குவோமாயின், நீண்டநாள் பயன்தரக்கூடிய, பக்கவிளைவற்ற, உடனடியாக ஆரம்பிக்கக்கூடிய, இயற்கையுடனான இணையற்ற பிணைப்பை உருவாக்கக்கூடிய சிகிச்சை முறையாக யோகாசனம் திகழ்கின்றது. யோகாசனம் பயில வயதுவரம்பு, ஆண்பெண் வித்தியாசம், பழகுவதற்கு தனியிடம், பயிற்சி உபகரணங்கள் போன்றவை அவசிய மில்லை.

"அசைகின்ற காற்றே சக்தி பெற்ற புயல்"

"அர்ஜுனா தபசிகளைக் காட்டிலும் ஞானிகளைக் காட்டிலும் இயம நியமங்களுடன் கூடிய யோகாப்பியாசம் செய்யக்கூடிய யோகியே சகல விடயங்களிலும் உயர்ந்தவனாகத் திகழ்கின்றான்"

மனத்தையும், மனதில் எழும் எண்ணங்களையும் நன்கு கட்டுப்படுத்துவதே யோகம். இந்த யோகப் பயிற்சியில் ஒருவன் முழுமைபெறும் போது தூய்மையும் பிரகாசமும் பொருந்திய நிலையில் நிறுத்தப்படுகின்றான் என பதஞ்சலி யோக சூத்திரம் கூறுகின்றது.

மருத்துவத்தில் யோகசிகிச்சை முறையை அறிமுகப்படுத்திவர்கள் சித்தர்கள். சித்தர் பரம்பரையில் வழிவந்த திருமூலர் தனது திருமந்திரத்தில் 3ஆம் தந்திரத்தில் யோக நிலையை 8படிகளாக வகுத்துக் கூறியுள்ளார். இதனை ராஜயோகம் என்றும், அட்டாங்க யோகம் என்றும் கூறுவர்.

"இயம நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிராணாயாமம் பிரத்தியாகாரம்
சயமிகு தாரணை தியானஞ்ச் சமாதி
அயமுறு அட்டாங்கமாவது யோகதே"
(திரு.மந். 552
)என்று செப்பும்

இளைஞர்கள், முதியவர்கள், பலசாலிகள், பலவீனர்கள் அனைவருமே தொடர்ந்து அதன் முறைப்படி யோகாசனம் செய்து வந்தால் ஆரோக்கியத்துடன் நீண்ட ஆயுளையும் பெறமுடியும். நாம் தினமும் ஆசனங்களைச் செய்தால் நல்ல வஜ்ஜிரம் போன்ற உடல் அமைப்பையும் பிரகாசமான முக அழகையும் தெளிவான குரல் வளத்தையும் நோயில்லா நல்ல உடலையும் ஒளிபொருந்திய கண்களையும் பெற்றுக் கொள்ளலாம். எமது உடலில் ஓடும் நாடிகளும் சுத்தமடைகின்றன. பதஞ்சலி முனிவர் மனதையும் உடலையும் வலுப்படுத்தக்கூடிய அப்பியாசங்களை வகைப்படுத்தியுள்ளார். இவரது யோக சூத்திரங்களே யோகக் கலையின் முதல் நூலாகும். சஞ்சீவியான யோகப்பயிற்சிகள் உடம்பென்ற ஆலயத்தை தூய்மைப்படுத்தவும் நோய்நொடிகள் வராமல் பாதுகாக்கவும் உதவுகின்றன.

சரியான யோகப்பயிற்சியுடன் பிரணாயாமம், தியானம் போன்ற பயிற்சி மூலம் பலவித நோய்களை நீக்கலாம். (நேருவின் கூற்று) பாரத நாட்டு பிரதமராய் இருந்த பண்டிதர் ஜவஹர்லால் நேரு யோகாசனப் பயிற்சியால் ஏற்படும் நன்மைபற்றி பின்வருமாறு கூறியுள்ளார்.

யோகாசனங்களை தக்க முறைப்படி பழகினால் உடலும் உள்ளமும் ஓய்வும் மகிழ்ச்சியும் அடைகிறது. இந்தப் பழமையான கலை உடலையும் உள்ளத்தையும் மிக வியக்கத்தக்க முறையில் பாதுகாக்கின்றது. சாதாரண உயற்பயிற்சிகள் ஓடுதல், குதித்தல், தாண்டுதல் ஆகிவற்றால் ஏற்படும் மூச்சுத்திணறல், உடல் தளர்ச்சி, களைப்பு ஆகிய தொந்தரவுகள் இந்தப் பயிற்சியால் ஏற்படுவதில்லை. எமது சக்தியை வீணாக்காமல் உடலையும் உள்ளத்தையும் சாந்தப்படுத்தி உறுதிபெறச் செய்கின்றது. அனேக வருடங்களாக நான் சில ஆசனங்களைப் பழகி வருகின்றேன். அதனால் பெரும் நன்மை அடைந்திருக்கின்றேன். உலகத்தவரின் உள்ளத்திலே என்றும் மறக்காது இடம்பிடித்த பெரியார்கள் அனைவரும் யோகாசனப் பயிற்சி செய்து வந்துள்ளார்கள். நாம் குருவின் ஆலோசனைப்படி இந்தப் பயிற்சியைச் செய்துவரல் வேண்டும்.

அறிவியல் ஆராய்ச்சிகளுக்கு உட்படுத்தப்பட்ட பலாபலன்கள் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும்

1. ஆசனம் உடலில் ஏற்படும் நோய்களை இல்லாமற் செய்கிறது.
2. நோய்களினால் ஏற்படும் உபாதைகளைக் குறைக்க முடியும்.
3. ஊனச்சதைகள் பற்றாமல் தடுப்பதால் அழகான உறுதியான உடல் அமைப்பை பெறமுடியும்.
4. தசை, தோல் ஆகியவை பயிற்சிகளால் நீளும் தன்மை பெறுவதால் சுருக்கங்கள், உணர்ச்சியற்ற நிலை அடைவதில்லை இளமையாக இருக்க வழிவகுக்கின்றது.
5. மூட்டு வாத நோய்கள் வராமல் தடுக்கலாம்.
6. இரத்த ஓட்டத்தை என்றும் சீராக வைப்பதால் நரம்பு மண்டல நோய்கள் வராமல் தடுக்கலாம்.
அகச்சுரப்பிகளின் செயற்பாட்டையும், நரம்பு மண்டல செயற்பாட்டையும் சீராக்குகின்றது.
7. குறிப்பாக தைரொய்ட் சுரப்பி சிறப்பாக வாழ் நாள் முழுவதும் தனது கடமையை ஆற்றும்.
8. தவறாமல் செய்யும் யோகாசனப் பயிற்சியால் நமது மனநிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியும்.
செய்யும் வேலையை முழுக்கவனத்துடன் செய்ய உதவும்.
9. சளைக்காது வேலை செய்ய சக்தியை தருகின்றது.
10. ஞாபகசக்தியை அதிகரிக்கச் செய்கின்றது.
11. மது, போதைவஸ்து போன்றவற்றை விடவும் மறக்கவும் செய்கிறது.
12. அமைதி, ஓய்வு, புத்துணர்வு பெற்று சுகமாகவும் நலமாகவும் சந்தோஷமாகவும் நீண்ட ஆயுளுடன் பெருவாழ்வு வாழ வழி வகுக்கின்றது.

எனவே மனதைக்கட்டுப்படுத்தி ஒருநிலைப்படுத்தி எமது அறிவு, ஆற்றல், உழைப்பு, அர்ப்பணிப்பு மூலம் அனுகூலமான நம்பிக்கையை எமது வாழ்வில் ஏற்றி, வெற்றிச்சுடர் தாங்கும் தீபங்களாக மாறி அனைவரையும் ஒளிர்விக்க யோகாசனத்தை ஒவ்வொருவரும் கற்போம். கிராமங்கள், நகரங்கள் எங்கும் யோகாசனப் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்க தூண்களாக அமைவோம்.

# பல விருதுகளை தமதாக்கிய JAT ஹோல்டிங்ஸ்




SLIM NASCO விருதுகள் 2015 இல், இரு தங்கம், ஒரு வெள்ளி மற்றும் ஒரு வெண்கல விருதை JAT ஹோல்டிங்ஸ் தனதாக்கியிருந்தது. சிறந்த பிராந்திய முகாமையாளர் (தொழிற்துறை பிரிவு) தங்க விருதை JAT ஹோல் டிங்ஸ் முகாமையாளர் தேவிகா கால்லகே வென்றிருந்தார். சிறந்த முன்னிலையாளருக்கான (தொழிற்துறைபிரிவு) தங்கவிருதைநிஷாந்த பிரியதர்ஷன வென்றார். இதே வேளை – அதே பிரிவில், சிறந்த முன்னிலையாளருக்கான வெள்ளி விருது ரங்கன பெர்னாண்டோவுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், வெண்கல விருது சஞ்ஜய ஜயவீரவுக்கு வழங்கப்பட்டிருந்தது. இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகத்தினால் முன்னெடுக்கப்படும் தேசிய விற்பனை காங்கிரஸ் (NASCO) விருது, இலங்கையில் விற்பனைத் துறையில் பணியாற்றும் ஊழியர்களின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளைக் கௌரவிக்கும் வகையில் அமைந்துள்ளதுடன், இந்தத் துறையைச் சேர்ந்தவர்களை தேசிய மட்டத்தில் கௌரவிக்கும் ஒரே விருதுகள்வழங்கும் நிகழ்வாகவும் அமைந் துள்ளது. இலங்கைச் சந்தையை மேம்படுத்தும் வகையில் தனது செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் JAT ஹோல்டிங்ஸ், கடந்த 10 வருட காலத்தில் சர்வதேச மட்டத்தில் தமது வியாபார செயற்பாடுகளை விஸ்தரித்திருந்தமைக்காக ஃபிரான்ட்ஸ் ஃபினான்ஸ் லங்கா அமைப்பின் மூலமாக உறுதியான பன்முகப்படுத்தப்பட்ட வர்த்தக நாமம் எனும் அந்தஸ்த்தைப் பெற்றுள்ளது. இந்தியா, பங்களாதேஷ், மாலைதீவுகள் மற்றும் சீஷெல்ஸ் ஆகிய நாடுகளில் தனது வர்த்தக பிரசன்னத்தை JAT ஹோல்டிங்ஸ் கொண்டுள்ளது. இந்த வெளி நாட்டுச் சந்தைகளில் வளர்ச்சி என்பது மிகவும் சவாலான விடயமாக அமைந்திருந்த போதிலும், JAT ஹோல்டிங்ஸ் செயலணி தமது அயராத அர்ப்பணிப்புடனான செயற்பாட்டின் மூலமாக சவால்களை வென்று, தமது வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்க பங்களிப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. JAT வர்த்தக நாமத்தை மேலும் வளர்ச்சியடையச் செய்வதற்கு மேலதிக திட்டங்கள் காணப்படும் நிலையில், வெளிநாடுகளில் தனது பிரசன்னத்தை மேலும் மேம்படுத்தவும் திட்டமிட்டுள்ளது. நிறுவனத்தின் பெருமளவான வாடிக்கையாளர்கள் தமது நன்றிகளையும், பாராட்டுக்களையும் JAT ஹோல்டிங்ஸ் நிறுவனத்துக்கு தெரிவித்துள்ளதுடன், சிறந்த தளபாட மற்றும் முடிவு தெரிவை எய்தியிருந்தமை இதற்குக் காரணமாக அமைந்துள்ளது. JAT ஹோல் டிங்ஸ், புகழ் பெற்ற தனது தெரிவுகளில், இத்தாலியின் SAYERL ACK மரப்பூச்சு வகைகள், அமெரிக்கா வின் ஹேர்மன் மில்லர் அலுவலக தீர்வுகள், பிரிட்டனின் க்ர வுண் மற்றும் பேர்மோகிளேஸ் அலங்கார உள்ளக மற்றும் வெளிப்புற சுவர்ப் பூச்சுகள், இத்தாலியின் Borma Wachs பராமரிப்பு தீர்வுகள் பிரான்ஸ் நாட்டின் Norton Abr asives (Saint Gobain) மற்றும் பிரஷ் வகைகள் போன்றன உள்ளடங்கியுள்ளன. சூழுநிலைச் செயற்பாடு மற்றும் கூட்டாண்மை குடியுரிமை ஆகியவற்றில் நிறுவனம் அதிகளவு நம்பிக்கைகொண்டுள்ளது. இதற்கு அமைய தனது அர்ப்பணிப்பான செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதுடன், தனது தொழில் நுட்பவியலாளர்களுக்கு சர்வதேச பயிற்சிகளை பெற்றுக் கொடுப்பதற்கான முதலீடுகளையும் மேற்கொண்டு வருகிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயிலுக்குச் செல்லும்போது நகைகள் அணிவது அவசியமா?

நல்லூர்க் கந்தனின் கொடியேற்றத் தினத்தன்று சுமார் 40 பவுண் பெறுமதியான நகைகள் திருட்டுப் போயுள்ளதாகப் பத்திரிகையில் செய்தி வெளிவந்திருந்தது. நகையைப் பறிகொடுத்தவர்களின் அலட்சியப் போக்கே நகை திருடப்பட்டமைக்கான முக்கிய காரணம் என்பதை எவருமே ஏற்றுக்கொள்வார்கள்.

ஆலயங்களுக்கு மக்கள் செல்லும்போது தங்க நகைகளை அணிய வேண்டாம் எனப் பொலிஸாரும், ஆலய நிர்வாகத்தினரும் மீண்டும் மீண்டும் கோரிக்கை விடுத்து வரும் நிலையில் மக்கள் அதனைக் காதில் போட்டுக்கொள்வதாகவே தெரியவில்லை. திருடர்களால் ஆபத்துக் காத்திருக்கின்றது என்று தெரிந்தபோதிலும் நகைகள் அணிந்து கொண்டு ஆலயங்களுக்குச் செல்வது தொடரத்தான் செய்கின்றது.

அதிலும் சிறுகுழந்தைகளுக்கும் நகைகளை அணிவித்து ஆலயங்களுக்குக் கூட்டிச் செல்லும்போது திருடர்களுக்கு மிகவும் வாய்ப்பாக அமைந்து விடுகின்றது. இதனால் சிலவேளைகளில் குழந்தைகளின் உயிருக்கே ஆபத்தாகவும் முடிந்து விடுகின்றது. ஏனைய மதத்தவர்களுடன் ஒப்பிடும்போது இந்து மதத்தைச் சார்ந்த பெண்கள் அதிகளவில் நகைகளை அணிந்து கொண்டு ஆலயத்துக்குச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. இதனால் ஆபத்தையும் அதிகளவில் அவர்கள் தாமாகத் தேடிக் கொள்கின்றனர். மேலும் வேற்றுமதத்தவர் ஒன்று கூடுகின்ற வழிபாட்டுத் தலங்களில் நகைகள் திருடப்படுவதான செய்திகள் வெளிவருவதைக் காணமுடிவதில்லை.

ஆலயங்களுக்குச் செல்வது இறைவனை வணங்குவதற்கே என்பதை அனைவரும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். ஆடம்பரமான ஆடைகளை அணிந்து செல்வதையோ நகைகளைச் சூட்டிக்கொண்டு செல்வதையோ அந்த இறைவன் கூட விரும்பமாட்டான். இந்த நிலையில் ஆலயங் களில் பெறுமதி மிக்க நகைகளை இழந்து கவலையில் மூழ்குவது தேவைதானா? இவர்கள் ஏனோ இதனைச் சிந்திக்க மறந்து விடுகிறார்கள்.

தற்போது நல்லூர்க்கந்தன், தெல்லிப்பழை துர்க்கை அம்மன், சந்நிதிவேலன் ஆகிய தெய்வங்கள் உறைகின்ற மூன்று ஆலயங்களிலும் ஒரே வேளையில் வருடாந்த உற்சவங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. பெருந்திரளான பக்தர்கள் இந்த மூன்று ஆலயங்களுக்குச் சென்று வருகின்றனர். இதனை சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளுகின்ற திருடர்கள் தமது கைவரிசையை நன்றாகவே காட்டி வருகின்றனர். இதில் உள்ளூர்த் திருடர்கள் மட்டுமல்லாது வெளியூர்களிலிருந்தும் இருந்து வருகை தருபவர்களும் ஈடுபடுகின்றனர். பெண்கள் நகைகளை அணிந்து செல்வதை எவருமே குறை கூற மாட்டார்கள். ஆனால் ஆலயங்களுக்கு அவற்றை அணிந்து செல்வது தவறே.

இனியாவது ஆலயங்களுக்குச் செல்லும்போது நகைகளை அணிந்து கொண்டு செல்வதைத் தவிர்த்தால் பொருள் இழப்பை மட்டுமல்லாது மனக் கஷ்டத்தையும் தவிர்த்துக் கொள்ள முடியும்.




**பா. மாதவராசா,**
**கொக்குவில்.**

## அர்த்தமுள்ள உதயன்

19 ஆம் திகதி உங்கள் வாசகர் திருமுகத்தில் அந்த நாள் ஞாபகம் பழையதை நினைவு கூருவோம் என்ற அம்சம் திறமையான ஒரு கட்டுரை. பழையதை நினைவு கூருவது ஒரு சந்தோஷம் தான். ஆனால் பி.எச். அப்துல்ஹமிட் என்ற அறிவிப்பாளர் யாழ்ப்பாணத்தில் பிறந்ததாக எழுதி இருந்தார் ஒரு வாசகர். ஆனால் அவர் பிறந்தது வேறு இடத்தில். சினிமாவில் நடிகர் கமலுக்கு யாழ்ப்பாண மொழியைக் கற்றுக் கொடுத்தவர் அவர்தான். அந்தச் சினிமாவில் நடிகர் கமல்ஹாசன் யாழ்ப்பாண இளைஞர்போல் நடிப்பார். அது மட்டுமல்ல பி.எச்.அப்துல் ஹமித்துக்கு யாழ்ப்பாண நண்பர்கள் அதிகம். அதற்காக யாழ்ப்பாணத்தில் பிறந்தது என்று அர்த்தமல்ல.

குறிப்பு – இலங்கைக் கலைஞர்களைப் பற்றி அதிகம் உதயன் பத்திரிகையில் வந்தால் நல்லது. கலை என்பது இலங்கையில் உள்ள எல்லாத் தமிழருக்கும் உரியது.

**விஜயன்,**
**கொடிகாமம்.**

## கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

## பாடாய்ப்படுத்தும் பரீட்சை

பெற்றோர்கள் முகத்தில் ஒரே பதட்டம். புரியாத குழப்பம். அனைவரும் பாடசாலைக்கு வெளியில் காத்துக் கொண் டிருக்கின்றனர். காரணம், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதுகிறார்கள் மாணவர்கள் பாடசாலைக் குள்ளே.

இலங்கையை குறிப்பாக யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரை புலமைப் பரிசில் பரீட்சை என்பது பெற்றோர்களின் கௌரவப் பிரச்சினை ஆகவே உள்ளது. பிள்ளை பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுவிட்டால் பெற்றோர்களை கையில் பிடிக்க முடியாது. அவர்கள் சந்தோஷத்துக்கு அளவே கிடையாது. ஆனால் பிள்ளைகளுக்கு அவ்வளவு மகிழ்ச்சி இருக்குமா என்று தெரியவில்லை. அவர்களைப் பொறுத்தவரை இது கௌரவப் பிரச்சினை இல்லை.

இந்தப் பரீட்சையில் சித்தியடையும் வறுமையிலுள்ள மாணவர்களுக்கு புலமைப் பரிசில் என்ற சிறு உதவித் தொகை வழங்கப்படுவதுதான் இந்தப் பரீட்சையின் சிறப்பு. அது பின்னர் தன்னிலையில் இருந்து மாறி சமூக அந்தஸ்துக்காக எப்படியாவது பிள்ளைகளைச் சித்தியடைச் செய்து விடவேண்டும் என்பதே நோக்கமாகியது. வறுமைப்பட்ட மாணவர்கள் எத்தனை பேருக்கு இந்த புலமைப் பரிசில் கொடுப்பனவு கிடைக்கின்றது? பரீட்சை கொண்டுவரப்பட்ட நோக்கமே மாற்றமடைந்துவிட்டது. ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா.. என்றுபாடிய பாரதி காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு. மாலை முழுவதும் விளையாட்டு - என்று வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா என்றும் கூறிச்சென்றார். பத்து வயதைத் தாண்டாத இந்த மாணவர்களை விளையாட விடுகிறோமா? உயர்தரப் பரீட்சை, சாதாரண தரப் பரீட்சையை எதிர் கொள்ளும் பெற்றோர்கள் முகத்தில் இல்லாத திண் டாட்டம் புலமைப் பரிசில் மாணவர்களின் பெற்றோர் முகத்தில்.

ஓடித் திரிந்து விளையாடவேண்டிய வயதில் கல்விச் சுமையை அவர்கள் முதுகில் திணித்தால் கல்வி மீது வெறுப்பு வரவும் வாய்ப்பு உள்ளது. புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாத எத்தனையோ மாணவர்கள் சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் விசேட சித்திகளைப் பெற்றிருக்கின்றனர். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களும் பாட சாலைக் கல்வி முடிந்தவுடன் பெரும் பதவிகளுடன் தொழில்வாய்ப்பை பெற்றிருக்கின்றனர். பார்க்கப் போனால் இந்தப் பரீட்சை மாணவர்களுக்கானதன்றி பெற்றோர்களுக்கானதோ என்ற சந்தேகத்தைத் தருகிறது.

மாலை நேரங்களில் மாலை 5.-5.30 மணிவரை புலமைப் பரீட்சை வகுப்புக்கள் நடைபெறும் இடங்களைப் பார்க்க வேண்டும். பெற்றோர்களால் நிறைந்து குறித்த வீதிகளே போக்குவரத்து நெரிசலை எதிர்கொள்ளும். எங்கள் சமூகமும் சும்மா இருப்பதில்லை. புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் வெளியாகியவுடன் தமக்குத் தெரிந்த பரீட் சார்த்திகள் வீடுகளுக்கு போன் போட்டு பிள்ளைக்கு என்ன றிசல்ட்? பாஸ் பண்ணியாச்சோ? என்பார்கள். சித்தியடைந்து விட்டால் பரவாயில்லை அவர்களிடமிருந்து தப்பிவிடலாம். சித்தியடையாதவர்களின் பெற்றோர்களின் நிலை கவலைக்கிடம் தான். இவற்றையெல்லாம் சிந்தித்துத் தான் பெற்றோர்கள் பிள்ளைகளை திணிக்கிறார்கள். பிள்ளைகள், பெற்றோர்கள் பாடுதான் இப்படி என்றால் அவர்களை தயார்படுத்தும் ஆசிரியர்களின் நிலை? எந்த ஆசிரியரிடம் கல்வி கற்ற மாணவர்கள் அதிகம் சித்தியடைகிறார்கள் என்பதை சமூகம் உற்று நோக்கி அவருக்கு "நல்லாசிரியர் விருதும்" வழங்கிவிடும்.

2013ஆம் ஆண்டு உலக சிறுவர் தினத்தன்று தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சை முடிவுகள் வெளியாகியிருந்தது. அதுவரை காலமும் இடைவேளையின்றி படித்த மாணவர்களுக்கு உலக சிறுவர் தினத்தன்றாவது கொஞ்சம் ஆறுதலாக இருக்க வழியில்லை. சித்தியடைந்த மாணவர்கள் பிழைத்துவிடுவார்கள். தவறியவர்களில் சிலர் சிறுவர் தினத்தன்று வீட்டைவிட்டு வெளியில் விரட்டப்பட்டமை, சூடு வைக்கப்பட்டமை, திட்டப்பட்டமை, மனம் நோகடிக்கப்பட்டமை போன்ற பல சம்பவங்கள் நாடு முழுவதும் இடம்பெற்றன. இவை ஆரோக்கியமான கல்விக்கு எவ்வாறு வழிவகுக்கும்? வீட்டை விட்டு துரத்தப்பட்ட மாணவர்கள் உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகக்கூடிய மாணவர்களாகவும் இருந்திருக்கலாம், இல்லையா?

கற்பிக்கத்தான் வேண்டும். அதற்காக சிறுபிராயத்தில் மாணவர்கள் மேல் கல்வியை திணிக்கக் கூடாது. வெளிநாடுகள் போல் 4 வயதாகியவுடன் பாலர் பாடசாலையில் சேர்த்து விடுகின்றனர். சர்வதேச பாலர் பாடசாலை என்று தேடிச் சென்று சேர்க்கின்றனர். அங்கு இன்னும் பயிற்சிகள் அதிகமாகும். அதைப்பற்றியெல்லாம் பெற்றோருக்கு கவலைகள் இல்லை. பிள்ளை இன்ரர் நஷனல் முன்பள்ளியில் படிச்சாப் போதும்.

அது ஒரு தனி கௌரவம். மாணவர்களை படிக்குமாறு அழுத்தி அமிழ்த்தி அறிவுரை மட்டும் கூறலாமே..!

**பத்தி எழுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தேர்தல் முறையின் பல ஓட்டைகள் அடைக்கப்படுவது எப்போது......?

**ஒரு** மனிதர் தாம் ஒரு கட்சியின் அல்லது குழுவின் சார்பில் ஒரு மாவட்டத்தில் போட்டியிட, முறையாக வேட்புமனு தாக்கல் செய்கிறார் என்று வைத்துக்கொள்வோம். பின்னர் பரப்புரை மேடைகளிலும், வேறு முறைகளிலும் மக்களைச் சந்தித்து தாம் போட்டியிடும் கட்சியின் கொள்கைகள், அக் கொள்கைகளை முன்னெடுக்க தாம் மேற்கொள்ள இருக்கும் செயற்பாடுகளை மட்டுமன்றி, தாம் அவ்வாறு தெரிவுசெய்யப்பட வேண்டியதற்கான தகுதிகள், திறமைகள் போன்ற எல்லாவற்றையும் வெளிப்படுத்துகிறார். மக்களும் அவை அனைத்தையும் கேட்டு, தமக்குள் ஆராய்ந்து முடிவெடுத்து வாக்களிக்கிறார்கள்.

அவ்வாறு வாக்களிக்கப்படும் வேளை, தோல்வியுறும் ஒருவர் என்னதான் திறமைசாலியாகவும், பேச்சாளராகவும் வாதாடும் திறமை பெற்றவராகவும் கூட இருந்தாலும், தோல்வி தோல்விதான். மக்கள் தீர்ப்பு இதுதான் என்று ஏற்றுக்கொண்டு அதற்கு மதிப்பளித்து ஒதுங்கிவிட வேண்டும் என்றாலும், தாம் உண்மையாகவே மக்களுக்கும், கட்சிக்கும், நாட்டுக்கும் பணிபுரியும் எண்ணம் கொண்டவராக இருப்பின் அவ்வாறான பணிகளில் சோர்வின்றி ஈடுபட்டு மக்களின் மனங் களை வென்றெடுக்க முயற்சிசெய்ய வேண்டும். அது அவருக்குப் பிற்காலத்தில் பயனளிப்பதாக இருக்கும்.

அதைவிடுத்து தேசியப்பட்டியல் மூலம் இடம் பிடித்து நாடாளுமன்றத்துக்குச் செல்ல எத்தனிப்பது என்பது நியாயமும் இல்லை. மதிப்பார்ந்த செயலாகவும் கருதப்படமாட்டாது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இதுதான் நிகழ்ந்தது. நாடாளுமன்ற உறுப்பினராக, அமைச்சராக, பிரதமராக மட்டுமல்ல இரண்டு தடவைகள் நாட்டின் அதிஉயர் அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதியாகவும் இருந்துவிட்டு, மூன்றாவது தடவையும் போட்டியிட்டு தோற்றதன் பின் ஒதுங்கிவிடவில்லை. அதிகாரங்கள் குறைக்கப்பட்ட பிரதமர் பதவிக்காக அடம்பிடித்துப் போட்டியிட்டு, அதுவும் கிடைக்காமல் இப்போது ஒரு சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராகத் திருப்தி அடையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் அவர்.

அரசியலில் பதவி ஆசை என்பது வரையறையுடன் இருக்க வேண்டும். மக்கள் அவர்களைக் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களின் ஒவ்வொரு சொல்லும், செயலும், நேர்மைத் தன்மையும் மக்கள் மனங்களில் பதியப்படுகின்றன -கண்காணிக்கப்படுகின்றன. இன்றைய வாக்காளர்கள் நிறைய விஷயம் தெரிந்தவர்கள். அவர்களை இலகுவில் தடம்புரட்டிவிட முடியாது.

தேர்தலில் தோற்கடிக்கப்பட்டவர்களுக்கு தேசியப் பட்டியல் மூலம் இப்போதும் கூட புதிய அரசில் மக்களால் இடம் ஒதுக்கப்பட்டிருப்பது குறித்து வண.மாதுளுவாவே சோபித தேரர் போன்ற சிவில் அமைப்புக்களின் பிரமுகர்கள் குறைகூறுகிறார்கள்.

கட்சியால் முன்கூட்டியே பட்டியல் இடப்படும் உறுப்பினர்கள் மூதறிஞர்களாகவும் கட்சியில் நெடுங்காலம் பணியாற்றி அதன் கொள்கை மற்றும் விடயங்களில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் இருப்பவர்களுக்கு இடம் கொடுப்பதே நியாயம் என்பது அவர்கள் கருத்து. நாடாளுமன்றில் அவர்கள் தங்கள் கட்சிக்கு வழிகாட்டும் நிலையிலும் இருப்பார்கள்.

தேர்தலில் தோற்கடிக்கப்படுபவர்களை தேசியல் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்கு இட்டுச் செல்லும் நடைமுறை ஒழிக்கப்பட வேண்டும் என்று சோபித தேரர் யோசனை கூறுகின்றார். புதிய அரசு கொண்டுவர இருக்கும் அரசமைப்புத் திருத்தத்தில், இது இடம்பெற வேண்டும் என்பது அவர் கருத்து.

மைத்திரி - ரணில் இணைப்பு அரசினால் கொண்டுவரப்பட இருந்த அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தம் நிறைவேறாமல் போய்விட்டது. தேர்தலின் பின் அமைக்கப்படுகின்ற புதிய நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய அரசு, புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டுவர இருப்பதாக வாக்குறுதி அளித்துள்ளது.

அந்த வகையில், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் பலவற்றுக்கும் புதிய அரசமைப்பின் மூலம் தீர்வுகாணச் செயற்பட வேண்டும். தேர்தல் முறையில் காணப்படும் பல ஓட்டைகள் அடைக்கப்பட வேண்டும். குறிப்பாக தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப் பினரான பின்னர் ஒரு கட்சியின் வேட்பாளராகி வெற்றி ஈட்டிய பின்னர் கட்சி மாறுவது போன்ற குறைபாடுகளுக்கும் நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும்.

# இணக்கப்பாட்டு அரசில் தமிழர் தரப்பின் பங்கு

சேரலாதன்




**நா**ட்டில் நிலவுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு இணக்கப்பாட்டு அரசு ஒன்று அமைக்கப்படவுள்ளதாகவும், அதில் அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்து கொள்ள வேண்டும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளமை ஏற்கனவே தெரிந்த விடயம்தான்.

இந்த நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழு, தேசிய அரசு ஒன்றை அமைப்பதற்கான இணக்கப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது. தேசிய அரசை அமைக்கும் போது, எவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் பொருட்டு சந்திரிகா தலைமையில் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான நாடாளு மன்ற உறுப்பினர்கள் தேசிய அரசு அமைவதை விரும்பவில்லையென மஹிந்தவின் தீவிர ஆதரவாளரான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். இந்த அறிவிப்பின் மூலமாக தேசிய அரசொன்று அமைக்கப்பட்டாலும் அதற்கு நெருக்கடிகள் காத்திருப்பது தெளிவாகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்று அடிவாங்கிய தழும்புகள் மறைவதற்கு முன்னரே பிரதம ராகும் கனவுடன் பொதுத் தேர்தலில் களமிறங்கிய மஹிந்த ராஜபக்ஷ மீண்டும்

> தமிழர் தரப்பும், கூட்டமைப்பின் முயற்சிகளுக்குத் தமது முழு ஆதரவையும் நல்க வேண்டும். ஏனென்றால் பிளவுபட்டிருக்கும் காலம் இதுவல்ல. தேர்தலின் போது, பிரிந்து நின்று வசை பாடியதை மறந்து, ஓட்டு மொத்தத் தமிழர்களின் நலன்களை முன் நிறுத்திச் செயற்படுவதே விவேகமானவை.



மொரு தோல்வியைத் தழுவியுள்ளார். இருந்தபோதிலும் அரசியலில் நீடிக்க வேண்டுமென்றே அவரது வெறி அடங்கியதாகத் தெரிய வில்லை. நாடாளுமன்றத்தின் ஊடாக மக்களுக்குச் சேவையாற்றப் போவதாகவும் அவர் அறிவித்துள்ளார். அவர் ஜனாதிபதியாக இருந்தபோது இந்த நாட்டில் என்ன நடந்தது என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பொறுப்பில் இல்லாதிருந்தால் தேர்தல் முடிவுகள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணிக்கு மோசமானதாகவே அமைந்திருக்கும். அவரது தயவால் படுதோல்வியிலிருந்து மீண்டெழுந்துள்ளது.

இதேவேளை தொடர் தோல்விகளையே சந்தித்து வந்த ஐக்கிய தேசியக்கட்சி எழுச்சியைக் காண ஆரம்பித்துவிட்டது. அதன் தலைவரான ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியிலும் அமர்ந்துவிட்டார். தற்போது தேசிய அரசை அமைக்கவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் நாட்டு சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து இந்த நாட்டை மாறி மாறி ஆட்சி செய்து வந்துள்ளன. ஆனால் இந்த இரண்டு கட்சிகளும் தமிழர்களின் இனப்பிரச்சினை தொடர்பாகச் சிறிதளவேனும் அக்கறை செலுத்தவில்லை. மாறாக அவர்களை அடக்கி ஒடுக்குவதிலேயே குறியாக இருந்துள்ளன. பண்டாரநாயக்க காலத்தில் ஆரம்பித்த இன அழிப்பு நடவடிக்கைகள் மஹிந்த காலம் வரை நீடித்தது. இன்று வரை தமிழர்களின் பிரச்சினைகள் தீரவில்லை.

பெரும்பான்மை இனத்தவர்களின் மனங்களில் மாற்றங்கள் ஏற்படும் வரை இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டாத கனியாகவே இருக்கப் போகின்றது. அவர்களில் ஒரு சாரார் தமிழர்களுக்கு எதையாவது வழங்க வேண்டும் என நினைக்கும் போது, மறு சாரார் அதை முற்றாக நிராகரித்துப் போராட்டங்களை நடத்தி அதனை முறியடிப்பதுதான் இந்த நாட்டின் வரலாறாக உள்ளது. இதனால் தேசிய அரசு, இணக்கப்பாட்டு அரசு என்பதெல்லாம் வெறும் கானல் நீரே தவிர வேறொன்றும் இல்லை.

இந்த நிலையில்தான் நாடாளு மன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம்பெறப் போகின்றது. புதிய அரசுக்குக் கூட்டமைப்பு ஆதரவு வழங்குவதற்கான அறிகுறிகளும் தென்படுகின்றன. தேர்தல் முடிவுகள் வெளியானபோது, கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் மாவை சேனாதிராசா தெரிவித்த கருத்துக்கள் இதை உறுதி செய்வதாக உள்ளன. எதிர்ப்பு அரசியலை விடுத்து இணக்க அரசியலையும் பார்த்துவிடுவோம் என்ற சிந்தனை கூட்டமைப்பின் தலைவர்களிடம் சிலவேளை எழுந்திருக்கலாம். இதனால் தமிழ் மக்களுக்கு நிச்சயம் நன்மை கிடைக்குமென்றால் ஆதரிப்பதில் தவறொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் கடந்த காலங்களில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களையும் கூட்டமைப்பினர் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். ஏனென்றால் அமையப்போகும் இணக்கப்பாட்டு அரசில் தமிழர் விரோத சக்திகளும் இடம்பிடிக்கப் போகின்றன. மேலும் அரசின் நடவடிக்கைகளைக் குழப்புவதற்கென்றே காத்திருக்கும் மஹிந்த தரப்பினர் தமிழர்களுக்கு எதையும் வழங்குவதற்கு உடன்படமாட்டார்கள். அத்துடன் அதை வைத்தே தமது இனவாதப் பரப்புரைகளையும் ஆரம்பித்து விடுவார்கள்.

மஹிந்த பிரதமர் பதவிக்கு வர முடியவில்லை என்பதற்காக அவர் தமது செல்வாக்கு முழுவதையும் இழந்துவிட்டாரென எவருமே கருதிவிட முடியாது. நான்கு லட்சத்துக்கும் மேற்பட்ட விருப்பு வாக்குகள் அவருக்குக் கிடைத்துத்தான் இருக்கின்றன. அத்துடன் கணிசமான அளவு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவும் அவருக்கு உள்ளது. அதனை மறுத்துக் கூற முடியாது. அவர் இப்போதும் ஒரு பலம் மிக்க சக்தியாகவே உள்ளார் என்பதை நாம் கவனத்தில் கொண்டேயாக வேண்டும்.

ஆகவே தமிழர் தரப்பு மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டிய தருணம் இதுதான். இதில் ஏதாவது சிறிய தவறு நேர்ந்து விட்டால், நிலைமை மோசமானதாக மாறிவிடும் என்பதை நாம் கவனத்தில் கொண்டேயாக வேண்டும்.

இதேவேளை ஏனைய தமிழர் தரப்பும், கூட்டமைப்பின் முயற்சிகளுக்குத் தமது முழு ஆதரவையும் நல்க வேண்டும். ஏனென்றால் பிளவு பட்டிருக்கும்காலம்இதுவல்ல. தேர்தலின் போது, பிரிந்துநின்று வசைபாடியதை மறந்து ஓட்டு மொத்தத் தமிழர்களின் நலன்களை முன் நிறுத்திச் செயற்படுவதே விவேகமானது.

இது மறக்கப்படுமாயின் தமிழ் இனத்தின் மீட்சி என்பது கானல் நீராகவே மாறிவிடுமென்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையை வலுப்படுத்துவதே தமிழர்களின் தலையாய கடமை

மு.தமிழ்மணி

1970 ஆம் ஆண்டுக்கு முன்னர் இடதுசாரிக் கட்சித் தலைவர் ஒருவரால் வெளிப்படையாகக் கூறப்பட்ட ஆழமானதும் உறுதியானதுமான கருத்துக்களை இன்று நினைவு கூருதல் பொருத்தமானது. தேர்தல் காலமாகையினால் வடமராட்சியில் தேர்தல் பரப்புரைகள் களைகட்டியிருந்த நேரம். இடதுசாரிக் கட்சியான கொம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளரை ஆதரித்து பரப்புரை செய்வதற்கு அதன் தலைவரான பீற்றர்கெனமன் கூட்டத்துக்கு வந்திருந்தார். மைதானம் முழுவதும் மக்கள் திரண்டிருந்தனர். கூட்டத்தின்போது ஆற்றிய உரைகளை செவிமடுத்த மக்களின் கைதட்டல்களும், விசிலடியும் ஓங்கி ஒலித்தன. கூட்டம் முடிந்த பின்னர் நெருக்கமானவர்களிடம் வடமராட்சியில் தங்களுக்கு ஓர் ஆசனம் கிடைக்குமென நம்பிக்கையோடு கெனமன் கூறியிருந்தார். ஆனால் தேர்தல் முடிவுகள் வேறுவிதமாக அமைந்திருந்தன. பீற்றர் கெனமனின் சார்பு வேட்பாளர் தோல்வியடைந்துவிட்டார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி மீது ஈழத் தமிழர்கள் கொண்டிருந்த அபார நம்பிக்கையை ஒவ்வொரு தேர்தல் காலப்பகுதிகளிலும் நிரூபித்து வருகின்றனர் என்பதை உணர்ந்து கொண்ட பீற்றர் கெனமன் தனது மனதிலிருந்த உண்மையான கருத்தைத் தெளிவுபடக் கூறியிருந்தார்.

தமிழர்கள் எம்மை நன்கு உபசரித்து விருந்தோம்புவார்கள். தேர்தல் கூட்டங்களில் பெருந்தொகையாகக் கலந்து கொண்டு நாம் கூறுவதை ஆர்வத்துடன் கேட்பார்கள், விசிலடித்து, கைதட்டி உற்சாகமூட்டுவார்கள். ஆனால் வாக்களிப்பு என்று வரும்போது தமிழரசுக் கட்சிக்குத் தான் வாக்களிப்பார்கள். பீற்றர் கெனமன் காலத்திலேயே தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்டது. கெனமன் காலத்திலிருந்து இன்று வரையிலும் தமிழ் மக்களின் வாக்களிப்பு பாரம்பரியத்தின் பெரும் போக்கு எனப்படுவது இதுவாகும்.

தமிழ் மக்களுக்கு பாடசாலைகள், வைத்திய சாலைகள் என பல கட்டடங்களைக் கட்டிக் கொடுத்தோம், படித்த இளைஞர்கள் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கினோம், வீதிகள் அமைத்தோம், ரயில்களை ஓடவிட்டோம் என அரசுகளினால் முன்வைக்கப்படுகின்ற பரப்புரை யுக்திகளும் சரி, தங்களால்தான் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான அபிவிருத்தித் திட்டங்களையும் தமிழ்ப் பிரதேசங்களில் முன்னெடுப்பதற்கு அதிகாரங்களும், ஆளுமைகளுமுண்டு என்று முன்வைக்கப்படுகின்ற நியாயங்களும் சரி எல்லாவற்றையும் கேட்பார்கள். சாதி பார்ப்பார்கள், சமயம் பார்ப்பார்கள். பிரதேச வாதம் கதைப்பார்கள். ஆனால் பொது நிலைப்பாட்டுக்கு தமிழ் மக்கள் வருகின்ற போதுதான் எங்களுக்கு எந்தக் கட்சிக்கும், கொள்கைக்கும் வாக்களிப்பது என்ற அந்த உணர்வை ஒருமித்த முடிவாக எடுத்துக் கொள்வார்கள். அபிவிருத்தித் திட்டங்களையோ, சாதி, இனசனம், மதம், பிரதேச வாதங்களையோ இறுதி நேரத்தில் கணக்கெடுக்கவே மாட்டார்கள். இவையெல்லாம் இரண்டாம் பட்சத் தெரிவுகளாகவே இருக்கும். இவற்றையெல்லாம் சிங்களத் தலைவரான பீற்றர் கெனமன் அனுபவபூர்வமாக உணர்ந்து கொண்ட வராவார்.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்துக்கு முன்னரும் இதுதான் நிலை. ஆயுதப் போராட்டத்துக்குப் பின்னரும் இதுதான் நிலை. இதில் காலத்துக்கேற்றவாறு பெரும் போக்கான வாக்களிப்பின் விகிதம் கூடலாம், குறைவடையலாம்.

தமிழ் ஈழக்கோரிக்கையை முன்வைத்துப் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இதே பெரும் போக்கையே தமிழ் மக்கள் வாக்களிப்பதில் கொண்டிருந்தனர். தமிழ் மக்கள் கட்சிகளுக்கும், வேட்பாளர்களுக்கும் வாக்களிப்பதற்குப் பதிலாக கொள்கைகளுக்கே வாக்களிப்பார்கள். இந்த விதமான உண்மைகளை இலகுவாக விளங்கிக் கொள்ளலாம்.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் தொடங்கி மருதனார்மடம் தீர்மானம் வரை ஈழத் தமிழர்கள் விடுதலையுணர்வு கொண்டதோர் சமூகமாகவே நீண்டு செல்கின்றது. தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன இன அடையாள வாக்களிப்பு பாரம்பரியம் குறைவடையாமல் தொடர்ச்சியானதொரு அலைவீசிக் கொண்டேயிருக்கின்றது. 2009 ஆம் ஆண்டு முள்ளி வாய்க்காலில் நடைபெற்று முடிந்த இனப்படுகொலைக்குப் பின்னர் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வீசிய அலைவேகம் காணாமல் இருந்தது. 2011 இல் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கூடிக்காணப்பட்டது. 2013 இல் நடைபெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வீசிய அலை சாதாரணமாக இருக்கவில்லை. மேலும் பலமடைந்து காணப்பட்டது.

ஒகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் சம அளவிலான ஆதரவு தமிழ்த் தேசியக் கூட்டமைபுக்கு காணப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைக்கின்ற சமஷ்டிக் கொள்கையுட்பட தேர்தல் விஞ்ஞாபனத்தைவிட தமிழ் மக்கள் ஆத்மார்த்தமாக தனித்தேசம், சுயாட்சி என்னும் இரண்டுமே ஈழத்தமிழர்களினது இதயக் கொள் கையாகவிருந்தது.

பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எதிர்த்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, மூத்த ஊடகவியலாளர் வித்தியாதரன் தலைமையிலான ஜனநாயகப் போராளிகள் அமைப்பு போட்டியிட்டிருந்தது. அடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணியும் போட்டியிட்டிருந்தது. தமிழ் மக்கள் மூன்று கட்சிகளையும் இவ்வளவு வேகமாகத் தூக்கியெறிந்து விடுவார்கள் என அந்தக் கட்சிகளால் நம்பவே முடியவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழ்த் தேசியத்தை இறுகப்பற்றிப் பிடித்திருந்தாலும் தமிழ் மக்கள் மத்தியில் அவர்கள் மீது தவறான கணிப்பு 2010 இல் நடைபெற்ற தேர்தலிலிருந்து நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தல் வரையில் இருந்தது உண்மையே. வடக்கு மாகாண சபைத் தேர்தலிலும், உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போட்டியிடாது ஒதுங்கியிருந்தது. ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என கோரிக்கையையும் விடுத்திருந்தது.



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு வெறுமனாக 15,000 வாக்குகளை மட்டுமே பெற முடிந்தது. மூன்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடவே போட்டியிட்டிருந்தாலும் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளனர். கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தந்தையரான குமார் பொன்னம்பலம் தமிழினத்துக்குச் செய்த சேவையை, நெருக்கடியான காலகட்டத்துக்குள் வாழ்ந்த தமிழர்களால் மறக்க முடியாது. தமிழகத்தின் விடுதலைக் குரலாக ஓங்கி ஒலித்தவர் அஞ்சா நெஞ்சம் கொண்ட மனிதரான குமார் பொன்னம்பலம் கொழும்புத் தலைநகரில் அப்போதைய அரசுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய மாமனிதராவார். குமார் பொன்னம்பலத்தின் தந்தையரான ஜீ.ஜீ.பொன்னம்பலம் தந்தை செல்வாவுடன் தமிழின ஒற்றுமைக்காக கைகோர்த்து நின்றவர். தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கவும், தமிழீழக் கொள்கைக்கும் உறுதியாக நின்றவர். அப்படிப்பட்ட பெரும் தலைவரான ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் பேரனான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும்.

ஜீ.ஜீ.பொன்னம்பலம் வழி வந்த கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொதுத் தேர்தலில் தோற்ற பின்னர் ஒன்றுபட வேண்டிய தேவை கருதி ஆழ்ந்து சிந்தித்து செயற்பட வேண்டிய தருணம் வந்துவிட்டது. இதுவரை காலமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அடுத்தபடியாக தமிழ்த் தேசிய அரசியலில் தமிழரின் உரிமைக்குரலை ஓங்கி ஒலிக்கச் செய்வதில் கணிசமான அளவு வெற்றி பெற்றிருந்தனர். தமிழினத்தின் சார்பான போராட்டங்களை முன்னின்றும் நடத்தியிருந்தது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சேர்ந்து கலந்து கொண்டிருந்தது. ஜெனிவாவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் பங்கு பற்றி தமிழினத்துக்கு எதிரான இனஅழிப்பு நடவடிக்கைகளை வெளிக் கொணர்ந்து இருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களோடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரையும் கடந்தகால அரசு விசாரணை என்ற பெயரில் அச்சுறுத்தல்களை விடுத்திருந்தது. தமிழ்த் தேசிய முன்னணியினர் அடிமட்டத் தமிழ் மக்கள் மத்தியில் தமது அரசியல் பரப்புரைகளைச் செய்யத் தவறிவிட்டனர். அடிப்படைப் பிரச்சினைகள் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் பிரச்சினையாக இருந்து வருகின்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கடந்த ஐந்து ஆண்டுகளில் மக்களை சந்திப்பது, கிளைகளை அமைத்து செயற்படுவது, கருத்துப் பகிர்வுகள் என்பதெல்லாம் உரியமுறையில் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்களுமுண்டு.

தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியையும், மூத்த தலைவராக இருந்து வருபவரான ஆனந்த சங்கரியையும் படுவேகமாகத் தூக்கி எறிந்துள்ளனர். வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து செயற்பட்டிருந்தாலும்தமிழ் மக்கள்தமிழர் விடுதலைக் கூட்டணியை நிராகரித்திருந்தனர். கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராக போட்டியிட்டிருந்த ஆனந்த சங்கரி மிகப்பின்தங்கிய நிலைக்குள்ளானார். பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ஆனந்தசங்கரி ஆயிரம் வாக்குகளைப் பெற முடியாமல் போய்விட்டது. யாழ் மாவட்டத் தமிழ் வாக்குகளை நம்பி போட்டியிட்ட ஆனந்த சங்கரி கட்டுப்பணத்தையும் இழந்திருந்தார்.

போராளிகள் பலரை இணைத்துக்கொண்டு மூத்த ஊடகவியலாளரான வித்தியாதரன் தலைமையில் ஜனநாயகப் போராளிகள் அமைப்பை ஆரம்பித்து பொதுத்தேர்தலில் போட்டியிட்டிருந்தனர். ஓர் இலட்சியத்துக்காக போராடிய போராளிகள் வித்தியாதரனின் மாயவலைக்குள் அகப்பட்டுக் கொண்டது போராளிகளின் அறியாமையாகும்? வித்தியாதரன் முள்ளிவாய்க்கால் வரை நடைபெற்ற போரில் தனது பங்களிப்பை நேரடியாக வழங்கிய ஒருவரா? விடுதலைப்புலிகளின் தலைவரான வே.பிரபாகரன் மற்றும் விடுதலைப் புலிகளின் ஆலோசகரான அன்ரன் பாலசிங்கம் ஆகியோருடன் சேர்ந்தெடுத்துக்கொண்ட புகைப்படங்களுடன் விளம்பரங்கள் அரசியல் ஆதாயங்கள், வாக்குகள், வித்தியாதரனுக்கு பலம் சேர்க்கவில்லை. வித்தியாதரன் தமிழ்மக்கள் முன்னெடுத்திருந்த சமகாலப் போராட்டங்களில் நேரடியாகப் பங்கு பற்றியிருந்தாரா என்ற கேள்விக்கு பதில் பூச்சியமாகும்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய மூன்று கட்சிகளும் தமிழ் மக்களிட மிருந்து நல்லதோர் பாடத்தை கற்றுக் கொண்டு விட்டன. தமிழின விடுதலைக்காகவே தமிழ்க் கட்சிகள் நிறுவப்பட்டன. இனத்துக்காக, உரிமைகளுக்காக, குரல் கொடுக்க வேண்டும். உழைக்க வேண்டும் என்றவாறு புறப்பட்டால் பதவி ஆசை, சுயநலம், போட்டிகள் கலைந்து விடுதலை வேள்வியும், இலட்சிய வேட்கையும் கொள்கை குறிக்கோள் எனக் கொண்டு செயலாற்ற வேண்டும். தனிப்பட்ட கருத்து மோதல்களால் தமிழர்களின் மீதான ஒற்றுமையை சிதறடிப்பதா?



தலைவிதி மாறு வதை எந்தவொரு தமிழனும் ஏற்றுக்கொள் வானா?

போராளிக்குழு, தமிழ்த் தேசியக் குழு எனப் பிரிந்து செயற்படுவதை விடுத்து, பழைய பகைமைகளை அடியுடன் மறந்து உளச் சுத்தியோடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் கூட்டமைப்புடன் இணைய வேண்டும். அப்போதுதான் தமிழர் ஒற்றுமை பலப்படும். இதனை தமிழ்த் தேசிய முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி முன்னரே யோசித்து நடந்திருந்தால் வடக்கு மாகாணத்தில் பன்னிரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் தமிழர் தரப்பிலிருந்து பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்திருக்கும். பிரிந்து நின்று செயற்பட்டதன் விளைவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வடக்கில் ஒன்பது ஆசனங்கள் மட்டுமே கிடைக்கக்கூடிய சந்தர்ப்பம் உருவாகிருந்தது.

தமிழ் மக்களின் துன்ப, துயரங்களை அடிப்படைப் பிரச்சினைகளை என்றைக்குமே எடுத்துக் கூறுவதற்கும் அரசுடன் பேரம் பேசுவதற்கும், விடுதலைப்புலிகள் இல்லாத நிலையில் தமிழ்த் தேசியக் கட்சியைத் தவிர வேறு எந்தக் கட்சி உள்ளது?

மாவை சேனாதிராசா தலைமையிலான தமிழரசுக் கட்சி, செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான தமிழீழ விடுதலை இயக்கம், சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையிலான தமிழீழ விடுதலைக் கழகம் என்பன ஒன்று சேர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தமிழின விடிவுக்காக ஜனநாயகப் போரை தொடர்ந்து தமிழர்கள் முன்னெடுக்க வேண்டு மானால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய முன்னணி, ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஒன்று சேருவதைத் தவிர வேறு வழியில்லை, காலத்தின் கட்டாய மாகும். தமிழ்க் கட்சித் தலைமைகள் பிரிந்து நின்று சாதிக்கப் போவது என்ன?

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுவோமென அறிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமஷ்டிக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக சுயநிர்ணய உரிமையுடன் நியாய பூர்வமாக நடக்கும் பட்சத்தில் அவர்களுடன் இணைந்து செயற்பட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தயாராக இருக்கின்றது என்றும் 19ஆம் திகதி அறிவித்துள்ளார்.

ஒற்றுமையே தமிழர்களினது பலமாகும். தமிழர்களினது பலமே சிங்கள அரசுக்கு சவால் விடுக்கக் கூடியதாக இருக்கும். 2015 ஒகஸ்ட் 17 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தையும், ஒற்றுமையையும் போட்டியிட்ட அத்தனை கட்சிகளும் சிதறடித்து ஆசனங்களின் எண்ணிக்கையை வீழ்ச்சியடைய சகல முயற்சிகளையும் செய்திருந்தன. தமிழ் மக்கள் பெரிதாக இடம் கொடுக்கவில்லை. அதற்கு கட்சிகளே ஆசனங்களின் வீழ்ச்சிக்கு இடம் கொடுத்திருந்தன என்ற கசப்பான உண்மையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியன ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். இனிமேலும் இந்தப் பெரிய தவறுகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, நீக்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கைகோர்த்துப் பயணிக்க வேண்டும். தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு அதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | 6 | | 8 | 2 | | |
| | | | | | 5 | | 7 | 4 |
| | | 5 | | | | | 6 | |
| | | 3 | | 4 | | | | |
| | | | | 3 | | 6 | | 1 |
| | | 2 | | | 6 | 3 | | |
| | | | 4 | | 9 | | 2 | |
| 1 | | | | | | | | 8 |
| | 9 | | | 7 | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 2 | 6 | 5 | 7 | 3 | 4 | 8 |
| 8 | 3 | 6 | 4 | 9 | 2 | 5 | 7 | 1 |
| 7 | 5 | 4 | 3 | 1 | 8 | 9 | 2 | 6 |
| 6 | 1 | 5 | 8 | 4 | 9 | 7 | 3 | 2 |
| 2 | 4 | 3 | 7 | 6 | 5 | 1 | 8 | 9 |
| 9 | 7 | 8 | 2 | 3 | 1 | 4 | 6 | 5 |
| 5 | 6 | 7 | 9 | 8 | 4 | 2 | 1 | 3 |
| 4 | 8 | 1 | 5 | 2 | 3 | 6 | 9 | 7 |
| 3 | 2 | 9 | 1 | 7 | 6 | 8 | 5 | 4 |

**சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண் டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க் கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.**

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### சிந்தித்து செயலாற்றவும்

உண்மை, தூய்மை, சுயநலமின்மை இது மூன்றும் யாரிடமெல்லாம் இருக்கிறதோ அவர்களை நசுக்கக் கூடிய சக்தி விண்ணுலகு, மண்ணுலகு என எந்த உலகிலும் இல்லை. ஏன் பிரபஞ்சமே எதிர்த்து நின்றாலும் கூட அவர்களை வெல்ல முடியாது.

உங்கள் வாழ்க்கை சிறந்ததாகவும், தூய்மை உள்ளதாகவும் இருந்தால் மட்டுமே நீங்கள் வாழும் சமுதாயம் தூய்மை உடையதாக இருக்கும். ஆகவே முதலில் உங்களை நீங்கள் எண்ணத்தாலும் செயலாலும் தூய்மைப்படுத்திக் கொள்வது அவசியம்.

சிந்தித்துச் செயலாற்றத் தெரிந்தவன் அதன் வழிச் செல்கிறான். மற்றவன் விதியைக் குறை சொல்கிறான். நமது விதியை நாமே தான் வகுத்துக் கொள்கிறோம். ஆகவே அதற்குப் பிறரைத் தூற்றுவதில் பயனில்லை.

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 500 | 650 | 800 | 600 | 650 | 550 |
| நண்டு | 250 | 400 | 400 | 300 | 200 | 400 |
| கணவாய் | 500 | 600 | 700 | 600 | 600 | - |
| பாரை | 500 | 500 | 600 | 500 | - | 400 |
| சுறா | 500 | 600 | 500 | 600 | - | 450 |
| சீலா | 250 | 500 | 400 | 350 | 300 | - |
| விளை | 550 | 400 | 450 | 400 | 400 | 350 |
| மூரல் | 250 | 400 | 300 | 300 | - | 350 |
| கும்பிளா | 350 | 400 | 400 | 400 | - | - |
| கிழாக்கன் | 450 | 800 | 700 | 400 | - | - |
| ஓரா | 300 | 400 | 300 | 400 | - | 300 |
| திரளி | 200 | 300 | 200 | 250 | - | 250 |
| நகரை | 150 | 300 | 300 | 300 | - | - |
| சூடை | 100 | 200 | 130 | 120 | 150 | 80 |
| ஒட்டி | 200 | 150 | 300 | 300 | - | 250 |
| திருக்கை | 100 | 350 | 200 | 250 | 200 | 120 |
| பாலை | 300 | 300 | 400 | 400 | 300 | 300 |
| வாளை | 100 | 200 | - | 300 | - | - |
| கொய் | 80 | 200 | 150 | 100 | 50 | - |
| மதனம் | 100 | 300 | 200 | 250 | 100 | 200 |

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | – | 40 | 60 | 80 | 60 | 60 | 30 |
| கத்தரி | 120 | 80 | 80 | 80 | 100–120 | 60 | 80 | 40 |
| கரட் | 160 | 160 | 100 | 100 | 100–180 | 160 | 140 | 150 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 40 | 60 | 40 | 60 | 40 |
| பயிற்றை | 140 | 40 | 60 | 100 | 60 | 40 | 140 | 50 |
| பாகல் | 120 | 100 | 100 | 100 | 80 | 120 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 100 | 120 | 80 | 80 | 120 | 70 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 120 | 100 | 90 | 120 | 120 | 90 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 100 | 80 | 80 | 80 | 80 | 50–60 |
| பூசணி | 40 | 30 | 50 | 30 | 30–35 | 40 | 60 | 40 |
| தக்காளி | 100 | 120 | 100 | 80 | 80 | 120 | 100 | 70–80 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 80 | 40 | 40 | 60 | 30 |
| கீரை | 15 | 30 | 30 | 10 | 20 | 30 | 35 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 20 | 20 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 160 | 170 | 250 | 160 | 160 | 400 | 120 | 150 |
| புடோல் | 40 | 30 | 50 | 40 | 60 | 40 | 80 | 50 |
| கோவா | 90 | 100 | 80 | 80 | 60 | 80 | 100 | 60 |
| வெண்டி | 40 | 30 | 50 | 40 | 80 | 80 | 80 | 70 |
| போஞ்சி | 160 | – | 180 | 180 | 140 | 160 | 180 | 160 |
| லீக்ஸ் | 80 | 100 | 160 | 100 | 80–100 | 80 | 120 | 130 |
| தேங்காய் | 40 | 45 | 50 | 50–60 | 60 | 40–60 | 50 | 35 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 90 | 80–90 | 90 | 100 | 80 |
| தேசிக்காய் | 80 | 60 | 80 | 160 | 60 | 60 | 150 | 100–110 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 20 | 20 | 08–10 |
| [illegible] | 120 | 100 | 140 | 80 | 160 | 160 | 160 | 80 |
| [illegible] | 120 | 100 | 160 | 160 | 140 | 120 | 180 | 90 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 60 | 40 | 100 | 90 | 120 | 65–70 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை

**ஆவணி-08**
**செவ்வாய்க்கிழமை**
**25.08.2015**

திதி: தசமி மு.ப.09.11 வரை
நட்சத்திரம்: மூலம் மு.இ.08.16 வரை
சுபநேரம்: 10.35-12.05 வரை
இராகுகாலம்: 03.05-04.35 வரை
*ஆவணி மூலம்*
*குங்கிலியக்கலயர் குருபூஜை*

# ஜீரண பிரச்சினைகளுக்கு சிறந்த வீட்டு வைத்தியங்கள்

**♥வாழைப்பழம் :**

வாழைப்பழத்தில் அதிகளவு பொட்டாசியம் இருப்பதால், இதில் அமிலகார சமநிலையை உருவாக்கும் கனிமங்கள் அதிகளவில் உள்ளன. இதனால் வாழைப்பழம் ஜீரணத்துக்கு ஒரு வலிமையான மாற்று மருந்தாகும். மேலும் இரைப்பையின் அக உறையில் சீதத்தன்மையை ஏற்படுத்தும் கூறுகளும் இதில் அடங்கியுள்ளன. இந்தச் சீதத்தன்மை, வயிற்றில் ஜீரணம் மூலம் ஏற்படும் பாதிப்பைக் குறைக்கிறது. இதில் நார்ச்சத்து அதிகம் இருப்பதால், செரிமானத்தை விரைவுபடுத்தி ஜீரணத்தைக் குறைக்க உதவும். ஜீரணம் ஏற்படும் சமயத்தில், அதிகளவு பழுத்த வாழைப் பழத்தைச் சாப்பிட்டால், விரைவான தீர்வைப் பெறலாம். மேலும் இதில் அதிகளவு பொட்டாசியம் அடங்கியிருப்பதால், ஜீரணத்துக்கு நல்ல பயன் கிடைக்கும்.

**♥துளசி :**

துளசியில் இருக்கும் கூறுகள் செரிமானத்துக்குப் பயனுள்ளவையாகும். இது வயிற்றினுள் சீதத்தன்மையை ஊக்குவிப்பதால், புண்கள் ஏற்படாமல் தடுக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. இது வயிற்று அமிலங்களின் சக்தி



யைக் குறைத்து புண்களைத் தடுக்க உதவுகிறது. இவை வாயு உருவாக்கத்தையும் குறைக்கும். உடனடி நிவாரணத்துக்கு, உணவு சாப்பிட்ட பின்னர் ஐந்து அல்லது ஆறு துளசி இலைகளை உண்ணுங்கள்.

**♥குளிர்ச்சியான பால் :**

பாலில் அதிகளவு கல்சியம் அடங்கியிருப்பதால், அமிலத்தைக் கட்டுப்படுத்தும் தன்மை வாய்ந்தது. ஒரு ரம்ளர்; குளிர்ச்சியான பால், ஜீரண அறிகுறிகளைக் குறைக்கிறது. எப்படியெனில், இதில் உள்ள குளிர்ந்த தன்மை, ஜீரணத்தின்போது ஏற்படும் எரிச்சலைக் கட்டுப்படுத்துகிறது. அதிலும் குளிர்ந்த பாலை, சர்க்கரை சேர்க்காமல் குடிக்க வேண்டும். குறிப்பாக அதில் ஒரு கரண்டி நெய் சேர்த்துக் குடித்தால் சிறந்த நிவாரணம் பெறலாம்.

**♥சோம்பு :**

இது பெருஞ்சீரகம் எனவும் அழைக்கப்படும். மலச்சிக் கலைக் நீக்கி, செரிமானத்துக்கு உதவுதல் இதன் ஒரு பண்பாகும். இதில் பிளேவோனாய்டுகள், பிளாமிடிக் அமிலம் மற்றும் வேறுபல கூறுகள் இருப்பதால், புண்கள் ஏற்படாமல் தடுக்கும் சக்தி வாய்ந்தது. இதைத் தவிர, இது வயிற்றின் உட்பகுதியை குளிராக்குவதால், விரைவாகக் குணமடைய உதவுகிறது. ஒரு வேளை உங்களுக்கு திடீரென வறிற்றுக் கோளாறு ஏற்பட்டால், கொஞ்சம் சோம்பைத் தண்ணீரில் கொதிக்க வைத்து, அதை இரவு முழுவதும் ஊறவிட்டு, அந்த நீரைக் குடித்தால் அதற்கு நிவாரணம் கிடைக்கும்.

(தொடரும்)

# ஆவணி மாத இராசி பலன்கள்

## துலாம்



உடுத்தும் உடையையும், உள்ளிருக்கும் மனதையும் வெள்ளையாக வைத்துக் கொள்ளும் நீங்கள் யாருக்கும் தீங்கு நினைக்க மாட்டீர்கள். கடந்த ஒருமாதமாக 10 இல் நின்று உத்தியோகத்தில் பிரச்சினைகளைத் தந்த சூரியன் இப்போது இலாப வீட்டில் வந்தமர்ந்திருப்பதால் பணம் வரும். மூத்த சகோதர வகையில் நன்மை உண்டு. பாகப் பிரிவினை நல்ல விதத்தில் முடியும். அரச காரியங்கள் விரைந்து முடியும். வழக்குகள் சாதகமாகும். தைரியமாக சில பெரிய முடிவுகள் எடுப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். புதன் வலுவாக இருப்பதால் பணப்புழக்கம் குறையாது. எதிர்பார்த்து ஏமாந்த தொகையும் கைக்கு வரும். நண்பர்களின் சந்திப்பால் உற்சாகமடைவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். தந்தை வழியில் மதிப்பு, மரியாதை கூடும். வீட்டை அழகுபடுத்துவீர்கள். இராசிக்குள் வக்ரசனி நிற்பதால் அவ்வப்போது தலைச்சுற்றல், தூக்கமின்மை, வாந்தி வருவது போல் ஒரு நிலை ஏற்படும். மறதியால் விலை உயர்ந்தப் பொருள்களை இழக்க வேண்டாம். குருபகவான் இலாப வீட்டில் நீடிப்பதால் செல்வாக்கு கூடும். சிலருக்கு பெரிய பதவிகளும், பொறுப்புக்களும் தேடி வரும். வீடு வாங்குவீர்கள். அரசியல்வாதிகள் கட்சியின் மூத்த நிர்வாகிகளைச் சந்தித்துப் பேசுவீர்கள். கன்னிப் பெண்களுக்குக் காதல் கனியும். உயர்கல்வியிலும் வெற்றி கிட்டும். பெற்றோரின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். மாணவர்கள் கடைசி நேரத்தில் படிக்கும் பழக்கத்தை கைவிடுங்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். பொது விழாக்கள், கல்யாண, கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளில் முதல் மரியாதை கிடைக்கும். சொந்த ஊரில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். விலை உயர்ந்த ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள். அநாவசியச் செலவுகளைக் கட்டுப்படுத்துவீர்கள். வியாபாரத்தில் சில தந்திரங்களைக் கற்றுக் கொள்வீர்கள். வேலையாள்களின் ஒத்துழைப்பால் கணிசமாக இலாபம் உயரும். உத்தியோகத்தில் பதவி உயர்வு, சம்பள உயர்வு உண்டு. நீங்கள் எதிர்பார்த்த இடத்துக்கே மாற்றம் கிடைக்கும். சக ஊழியர்கள் மத்தியில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும்.

கலைத்துறையினர்களுக்கு படைப்புத் திறன் வளரும்.

விவசாயிகளின் வாய்க்கால், வரப்புச் சண்டைகளுக்கெல்லாம் சுமுகமான தீர்வு கிடைக்கும். அடகு வைத்திருந்த பத்திரத்தை மீட்பீர்கள். பணப் புழக்கமும் கௌரவமும் கூடும் மாதமிது.



உங்கள் இராசிக்கு 2, 7, 8, 9, 10, 11, 12 என்று பரவலாக கிரக சேர்க்கை இருப்பதால் இனம் புரியாத கவலை ஏற்பட்டு விலகும். வாக்குவாதம், வாக்குறுதி தவிர்க்கவும். குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போகவும். பெண்கள் சமையல் செய்யும்போது கவனமாக இருப்பது அவசியம். வசதி படைத்த நண்பரின் உதவி கிடைக்கும். மருமகளின் பிரசவம் சம்பந்தமாக நல்ல தகவல் உண்டு. தந்தை மூலம் நல்ல தகவல் வரும். வீடு, கடையில் பராமரிப்புச் செலவு ஏற்படும். புதிய வேலைக்கு முயற் சித்தவர்களுக்கு நல்ல செய்தி உண்டு. குலதெய்வ பூசைகள் நிறைவேறும். உத்தியோகத்தில் மன உளைச்சல் நீங்கும். வெளியூரில் வேலை செய்பவர்களுக்கு சொந்த ஊருக்கு மாற்றல் கிடைக்கும். தொழிலில் தொய்வு நீங்கும்.

**பரிகாரம்:** தினமும் ஹரி கிருஷ்ணா என்று தியானிக்கலாம். பிரதோஷ விரதம் இருந்து சிவனைத் தரிசிக்கலாம். ஆதரவற்றோர் இல்லங்களுக்கு உதவலாம்.

## விருச்சிகம்



கால ஓட்டத்தை உணர்ந்து அதற்கேற்ப காய்களை நகர்த்தும் வல்லமை கொண்ட நீங்கள், எப்போதும் எளிமையை விரும்புவீர்கள். சூரியன் கடந்த ஒரு மாதமாக பகை வீட்டில் அமர்ந்து உங்களுக்கும் தந்தையாருக்கும் சில பிரச்சினைகளை ஏற்படுத்தினார். செலவினங்களும் இருந்தது. எதிர்பார்த்த தொகையும் வராமல் போனது. இப்போது சூரியன் 10 ஆவது வீட்டில் ஆட்சி பெற்று நுழைந்திருப்பதால் எதிலும் சாதித்துக் காட்டுவீர்கள். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் வெற்றிகரமாக முடித்துக் காட்டுவீர்கள். தந்தையுடனான மனக்கசப்பு நீங்கும். அவரின் உடல் நலம் சீராகும். புது வேலை கிடைக்கும். அரசால் நன்மை உண்டு. வழக்கு சாதகமாகும். புதனும் சாதகமாக இருப்பதால் நட்பு வட்டம் விரியும். பழைய நண்பர்கள் தேடிவந்து பேசுவார்கள். பொது அறிவுத்திறன் வளரும். பதவிகள் தேடி வரும். பெரிய பதவியில் இருப்பவர்கள் ஆதரவாக இருப்பார்கள். செவ்வாய் 9 ஆம் வீட்டில் நிற்பதால் சேமிப்புகள் கரையும். தந்தைக்கு மருத்துவச் செலவுகள், அவருடன் மனத் தாங்கல் வந்து செல்லும். ஒரு சொத்தை விற்று மறு சொத்து வாங்குவீர்கள். அக்கம்பக்கம் வீட்டாருடன் அளவாக பழகுங்கள். சகோதர வகையில் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. குரு 10 இல் நீடிப்பதால் சிலர் உங்களைத் தவறாகப் புரிந்து கொள்வார்கள். சிலர் உங்களுக்கு தலைக்கனம் என்றும், முன்புபோல் நீங்கள் இல்லையென்றும் பிரித்துப் பேசுவார்கள்.

அரசியல்வாதிகள், பொதுக் கூட்டம், போராட்டங்களில் முன்னிலை வகிப்பீர்கள். கன்னிப் பெண்கள் கெட்ட நண்பர்களிடமிருந்து விடுபடுவீர்கள். விடுபட்ட பாடத்தை மீண்டும் எழுதி தேர்ச்சி பெறுவீர்கள். மாணவர்களுக்கு ஆசிரியரின் ஆதரவு கிட்டும். உங்களுடன் போட்டி, பொறாமையுடன் பழகிய சில மாணவர்கள் திருந்துவார்கள். வியாபாரத்தில் அதிரடி இலாபம் உண்டு. வேலையாள்களைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். பிற இடங்களில் மதிக்கப்படுவீர் கள். இடவசதியின்றி தவித்துக் கொண்டிருந்த கடையை வேறு இடத்துக்கு மாற்றுவீர்கள். புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள் பங்குதாரர்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலை பார்க்க வேண்டி வரும். மேலதிகாரியை அனுசரித்துப் போவது நல்லது. சக ஊழியர்களை நம்பி முக்கிய பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டாம். கலைத்துறையினர்கள்; பெரிய நிறுவனங்களின் அழைப்பு உங்களை தேடி வரும். விவசாயிகள்; உங்கள் கடன் தள்ளுபடியாகும். ஊரில் மதிப்பும் மரியாதையும் கூடும். வீட்டில் நல்லது நடக்கும். பொறுமையால் பெருமையடையும் மாதமிது. ஏற்ற இறக்கம், இலாப நஷ்டம் கலந்த மாதம். ராகு, கேதுவால் மன உளைச்சல் ஏற்பட்டு நீங்கும். சொந்த வேலைகளுடன், உறவினர் வேலைகளையும் பார்க்க வேண்டி வரும். கல்வி சம்பந்தமான செலவுகள் உண்டு. மகள் பிரசவ சம்பந்தமாக அலைச்சல், செலவு இருக்கும். கன்னிப் பெண்களின் எண்ணங்கள் நிறைவேறும். வழக்கு சம்பந்தமாக சாதகமான செய்தி வரும். பெண்கள் ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழ்வார்கள். பணம் விடயமாக நண்பர்களிடையே மனவருத்தங்கள் வரலாம். தந்தை உடல்நலத்தில் அக்கறை காட்டுவது அவசியம். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். உயர் அதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும். வியாபாரம் செழிப்படையும். பழைய கடன் கிடைக்கும். புதிய வாய்ப்பு உங்களைத் தேடி வரும்.

**பரிகாரம்:** ஓம் நமோ நாராயணாய என்று தினமும் சொல்லலாம். முருகன் கோயிலுக்கு விளக்கேற்ற எண்ணெய் வாங்கித் தரலாம். பார்வையற்றோருக்கு உதவலாம்.

# குடும்பத்தில் குதூகலம்

இல்லறத்தில் கணவன் மனைவிக்கிடையே ஆயிரம் விடயங்கள் பேசுவதற்கு இருக்கும். அதேபோன்று கணவரிடம் நடந்து கொள்வதற்கும் சில வழிமுறைகள் உண்டு. இவற்றைக் கடைபிடித்தால் குடும்பப் பயணம் சிக்கலின்றி இருக்கும். இப்போது ஆண்களுக்கு எது எது பிடிக்காது என்பதைப் பார்க்கலாம். அவற்றைப் பின்பற்றிப் பாருங்கள்.

காதல் திருமணமோ, நிச்சயிக்கப்பட்ட திருமணமோ கணவன் மனைவிக்கு இடையேயான அன்புக்குத் ஒரு அளவு உண்டு. அடிக்கடி போன் செய்து நச்சரித்தால் வேலை கெடும். அந்த எரிச்சலில் கணவர் ஏதாவது கத்துவார் பின்னர் பிரச்சினை பெரிதாகும். எனவே அன்பாயிருக்கிறேன் என்று போன் பண்ணி குழப்புவது பிடிக்காத விடயமாகும்.

சொல்ல வந்த விடயத்தை நேரடியாக சொல்லுங்கள். எதையாவது சொல்ல வந்து பின்னர் அதை விடுங்க என்று பொடி வைத்து பேசுவது கணவரை எரிச்சல் படுத்துமாம்.

எந்த விடயமென்றாலும் தனியாகச் சமாளித்து நடக்கப் பழகுங்கள். சின்னச் சின்ன விடயத்துக்கெல் லாம் கணவரைத் துணைக்கு அழைப்பது கூடாது. ஏனெனில் அவருக்கும் நிறைய வேலை இருக்கும் இல்லையா?



சம்பளப் பணத்தைப் பற்றி எதற்கெடுத்தாலும் கணக்கு கேட்காதீர்கள். பெரும்பாலான கணவர்களுக்கு மனைவி மேல் வெறுப்பு வர அதுதான் காரணமாகவுள்ளது.

வேலை விடயமாக வெளியே அலைந்து விட்டு கணவன் வீட்டுக்குத் திரும்பும்போது முகத்தை உம்மென்று வைத்துக்கொண்டு பேசுவது கணவனுக்குப் பிடிக்காது. முக்கியமாக ஏன் இவ்வளவு நேரம்? எங்கே ஊர் சுத்திட்டு வாறீங்க என்று கேட்பதும் பிடிக்காது.

எதையும் அழுது சாதிக்கலாம் என்று நினைக்கும் மனைவியைக் கணவருக்கு அறவே பிடிக்காதாம். அழுது வடியும் அழுமூஞ்சிப் பெண்களைக் கண்டாலே தூரம் ஓடிவிடுவார்களாம்.

கணவருக்கு என்று சில கொள்கைகள் இருக்கலாம். ஆனால் தனக்குப் பிடித்த மாதிரிதான் இருக்க வேண்டும் என்று கணவரை மாற்ற முயற்சி செய்வது கூடாதாம். அது சிக்கலில் கொண்டு போய் விடும் என்கின்றனர் அனுபவசாலிகள்.

அதேபோன்று சாப்பிடும் நேரத்தில் சந்தோஷமாக சாப்பிடாமல் குடும்ப பிரச்சினைகளைகள் கிளறுவது சுத்தமாக பிடிக்காத விடயமாம். கணவருக்காக காத்திருக்கிறேன் என்று இரவில் சாபிடாமல் காத்து கொண்டிருப்பது பிடிக்காத விடயமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஞ்சனா !



கொரட்டூர் என்ற சிற்றூரில் வசித்து வந்த தாயம்மாள் என்ற மூதாட்டி வாத்துக்களை வளர்த்து வந்தாள். அவள் பேர்த்தி அமுதா இருக்கும் வரை அவள் வாத்துக்களை பராமரித்து வந்தாள். பின்னர் அவளது பேத்தி நோய் வாய்ப் பட்டு இறந்து போகவே, தாயம்மாளே வாத்துக்களைப் பராமரித்து வந்தாள். வயதான காலத்தில் அது அவளுக்கு மிகவும் சிரமமாக இருந்தது. ஒரு நாள் வாத்துக்களை குளத்தில் நீந்த விட்டு விட்டு அவள் கரையில் அமர்ந்திருந்தாள். அப்போது மரத்தடி ஒன்றின் கீழ் கவலையுடன் காஞ்சனா என்ற சிறுமி யோசித்தவாறு அமர்ந்திருந்தாள். தாயம்மாள் அவளைநோக்கிப்போனாள். யார் நீ? இங்கே ஏன் வந்தாய்? என்று கேட்டாள் தாயம்மாள். எங்கு போவது என்றே எனக்குத் தெரியவில்லை. சாப்பிட்டு இரண்டு நாளாகிவிட்டது! என்றாள் அவள். ஐயோ பாவமே! எனக் கூறி விட்டு, தனக்குக் கொண்டு வந்திருந்த கஞ்சியையும், துவையலையும் அவளிடம் கொடுத்தாள் தாயம்மாள். இந்தா நீ சாப்பிடு! என்றாள். உங்களுக்கு?. நீதானே இரண்டு நாள்கள் சாப்பிடவில்லை. சாப்பிடு.. என்றாள் மறுபடியும். அவள் கஞ்சி குடித்துக் கொண்டிருக்கும் பொழுதே தாயம்மாள் காஞ் சனாவின் கதையைக் கேட்டறிந்தாள். எனக்கு உன்னை மாதிரி பேர்த்தி இருந்தாள். அவள் இறந்து விட்டாள். அவள் தான் அதோ அந்தக் குளத்தில் நீந்தும் வாத்துக்களை வளர்த்தாள். இவைகளை மேய்க்க வயதான காலத்தில் எனக்குச் சிரமமாக இருக்கிறது. நீ என்னோடு வந்து விடு. எனது பேத்தி போல் உன்னை நான் வளர்க்கிறேன் என்றாள் தாயம்மாள். அதற்குச் சம்மதித்தாள் காஞ்சனா. வாத்துக்களை மேய்த்து விட்டு காஞ்சனாவைத் தனது வீட்டுக்கு அழைத்து வந்தாள் தாயம்மாள். வாத்துக்களை எப்படி வளர்க்க வேண்டும் எனக் காஞ்சனாவுக்குக் கற்றுக் கொடுத்தாள். எந்த ஜீவராசிகள் மீதும் நாம் அன்பு செலுத்தினால் அவை நம்மீது அன்பு செலுத்தும். அதனுடன் நெருங்கிப் பழகினால் அவைகளின் செய்கை மூலம் அவை நம்முடன் பேசும்! என்றாள் தாயம்மாள். அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டுப் போனாள் காஞ்சானா.

வாத்துக்களை வளர்க்க ஆரம்பித்தாள் காஞ்சனா. அவைகள் தான், நில் என்றால் நிற்பதும், போ என்றால் போவதும் அவளுக்கு ஆச்சரியத்தை அளித்தது. தனது குரல் கேட்டால் எவ்வளவு தூரத்திலிருந்தும் அவைகள் ஓடிவருவதைப் பார்த்து அவள் பூரித்துப் போனாள். வாத்துக்கள் சேர்ந்து கத்துவது அவளுக்கு அவை இசையை மீட்டுவதுபோல் இருக்கும். வாத்துக்களுக்கு இவ்வளவு அறிவு இருக்கிறது. இவைகளுக்கு நாம் பலவும் கற்றுக் கொடுக்க முடியும். அவை கற்றுக் கொள்ளும் என நினைத்தாள். அவை வட்டத்துக்குள் பாயவும், கோலைத் தாண்டவும் கற்று கொடுத்தாள். அதைப் பார்த்து அந்த ஊர் மக்கள் ஆச்சரியப்பட்டனர். வாத்துக்களை கூட்டி விட்டு காஞ்சனா தன்னை மறந்து பாடுவாள். அவள் இனிமையான குரலில் பாடுவது கேட்டு, அந்த வழியாக காரில் வந்த சிவகுமார் காரை நிறுத்தி விட்டு அதை இரசித்துக் கொண்டிருந்தார். அவள் பாடி முடித்த பின்னர் தனது காரைஓட்டிக் கொண்டு போனார். மறுநாள் காலையில் சிவகுமார், காஞ்சனாவிடம், நீதானே நேற்று குளக்கரையில் வாத்துக்களை மேய்த்துக் கொண்டு பாட்டுப் பாடிக் கொண்டிருந்தாய்? என்றார். ஆமாம்! உனது பெயர்? காஞ் சனா. வெளியில் வரும் போது சுத்தமான உடையில் வரக்கூடாதா? என்றார். இருப்பதே இது ஒன்றுதான். துவைத்துப் போட வேறு மாற்று உடை இல்லை! என்றாள் அவள். நாளைக்கு இதே நேரம் இங்கு வா! என்றார். மறுநாள் அவளுக்கு உடுப்பு ஒன்று கொண்டு வந்து கொடுத்தார். அவள் முதலில் வாங்க மறுத்தாள். அவளைத் தேற்றி அதை வாங்க வைத்தார். மறுநாள் காஞ்சனா, தான் வாங்கிக் கொடுத்த உடையை அணியாமல் பழைய உடையிலே வந்தது ஆச்சரியத்தை அளித்தது. காஞ் சனா! நான் வாங்கிக் கொடுத்த உடுப்பை ஏன் அணியவில்லை! மன்னித்துக் கொள்ளுங்கள் ஐயா! நேற்று இரவு குளிரினால் ஒரு ஏழைப் பெண் நடுநடுங்கிக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்து மனம் இளகியது. அந்தப் பெண்ணிடமே கொடுத்து விட்டேன்! என்றாள். பிறருக்கு நீ உதவ நினைக்கும் எண்ணத்தை நான் பாராட்டுகிறேன். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் உன்னைப் போல எல்லாச் சிறுவர்களுக்கும், சிறுமியர்களுக்கும் பிறக்க வேண்டும். காஞ்சனா நீ வாத்துக்களைத் தானே பராமரிக்கிறாய்? அதை விட்டு விட்டு என்னோடு வந்துவிடு. நான் உன்னை எனது பிள்ளை போலப் பார்க்கிறேன் என்றார். ஐயா! நீங்கள் என்னை அழைத்தற்கு நன்றி. நான் உங்களோடு வரும் நிலையில் இல்லை! என்றாள்.

ஏன்? என்றார் சிவகுமார். நான் கஷ்டப்படும் போது தாயம்மாள் என்ற அம்மாதான் என்னை ஆதரித்தாள். அவர்களுக்கு இப் போது சரியாகக் கண் தெரியாது. எனக்கு நல்ல வாழ்வு கிடைக்கும் என்பதற்காக, அவர்களை விட்டுவிட்டு நான் வரத் தயாராக இல்லை! என்றாள் காஞ்சனா. உனது நல்ல எண்ணத்தை நான் பாராட்டுகிறேன். இவ்வளவு நல்ல பெண்ணாக இருப்பதால் உனக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் நான் செய்கிறேன். தாயம்மாவுக்கு உதவியாக நீ அவர்களுடனே இரு. நான் செய்யும் உதவிகளைப் பெற நீ மறுக்கக் கூடாது! என்றார். ஐயா! எனக்காவது சாப்பிட உணவு அன்றாடம் கிடைக்கிறது. இது கூட இல்லாமல் எத்தனையோ பேர் வாழ்க்கையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அப்படிப் பட்டவர்களுக்கு நீங்கள் உதவுங்கள். உங்களுக்குக் கோடிப் புண்ணியம் கிடைக்கும்! என்றாள் காஞ்சனா. நிச்சயமாகச் செய்வேன். இந்த ஊரிலே உள்ள ஏழை எளியவர்களுக்கு என்னால் இயன்ற உதவியைச் செய்வேன்! என்றார் சிவகுமார். சொன்னது போல் செய்யவும் செய்தார். வாத்துக்களைப் பராமரிக்கும் பெண் காஞ்சனா தயவால், நமக்கெல்லாம் தினம் சாப்பாடு கிடைக்கிறது என அந்த ஊர் ஏழை மக்கள் காஞ்சனாவை மனமாரப் பாராட்டினர். காஞ்சனா போல் சிறுவர், சிறுமியர் நாட்டிலே பெருக வேண்டும் என நினைத்துக் கொண்டார் சிவகுமார்.




# வெற்றி என்பது ஒரு அடையாளமா?



*(கடந்த சனிக்கிழமை வெளிவந்த பகுதியின் தொடர்ச்சி)*

காரணம், ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கக்கூடிய திறமை, அறிவு என்பது வேறுவேறு. கொஞ்ச விகிதத்தில் மாறி மாறி இருக்கும். அதை உன்னிப்பாகக் கவனிக்காமல், சிறந்த ஓவியம் வரையக் கூடிய மாணவன் சரியாகப் பாடவில்லையே என்று நினைப்பதும், நன்றாக பாடக் கூடிய மாணவி நன்றாக ஆடவில்லையே என்று நினைப்பதும் பல்வேறு மன உளைச்சல்களைத் தான் உருவாக்கும். ஒரு மயில், சிங்கத்தைப் போல கர்ஜனை செய்ய முடிய வில்லையே என்று நினைக்கவே நினைக்காது. அதே போல், ஒரு சிங்கம் மயிலைப் போல ஆட முடிய வில்லையே என்று நினைக்காது. அவை கள், தங்களின் இயல்புக்கேற்ப முழுமையாக இருக்கின்றன. ஆனால், சிங்கத்தையும், மயிலையும் கூண்டில் அடைக்கத் தெரிந்த மனிதர்களாகிய நாம்–புலம்பல் என்ற ஒரு பெரிய கூண்டை உரு வாக்கி அதில் நாமே மாட்டிக் கொண்டிருக்கிறோம். சரி இந்த கூண்டிலிருந்து எப்படி வெளியேறுவது? கூண்டிலிருந்து வெளியேற வேண்டுமென்றால் முதலில் நாம் கூண்டுக்குள் தான் அடைபட்டுக் கிடக்கிறோம் என்ற விழிப்பு ணர்வு முக்கியம்.

அடைபட்டுக் கிடப்பது என்பது ஒருவிதமான மனநோய், அதன் அறிகுறியைத் தெரிந்து கொள்ள வேண்டும். அடுத்தவரைப் பார்த்து இப்படி ஆகி விட வேண்டும், அப்படி வாழ வேண்டும் என்ற நினைப்பு தான் அது. ஆனால் வெற்றி பெற்றவர்களைப் பார்த்து அதேபோல் ஆக வேண்டும் என்று நினைப்பது ஒரு ஆரோக்கியமான சிந்தனை தானே, அது எப்படி மனநோயாக இருக்க முடியும் என கேட்கலாம். எந்த ஒரு விடயமும் சுயமாக ஆராய்ந்து, முடிவு எடுக்காமல், பிறரைப் பார்த்து எடுப்பது என்பது நிச்சயம். ஒரு சமயத்தில் குழப்பத்தை தந்து காலை வாரிவிட்டு விடும். இன்னொரு பக்கம், உங்களுக்கே உரித்தான, நீங்கள் மட்டுமே செய்யக்கூடிய காரியத்தையும், நீங்கள் மட்டுமே அடையக் கூடிய அந்த அனுபவத்தையும் நிச்சயமாகத் தவறவிடுவீர்கள். இந்த வெற்றி, தோல்வி கண்ணோட்டம் பாடசாலைப் பருவத்தில் உருவாகி, ஓய்வு பெறும் வயது வரை உங்களை பாடாய்ப்படுத்துகிறது என்பதைத் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். எது எது சந்தோஷம் தருகின்றதோ, அவைகளுக்கு வெற்றி என்று பெயர் சூட்டியும், எது எது துக்கம் தருகின்றதோ, அவை களுக்கு தோல்வி என்று பெயர் சூட்டியும் பழகி விட்டோம். ஆக எவருமே சாதாரண நபர்களில்லை, ஒரே மாதிரி நபர்களுமில்லை... ஒரு மனிதனுடைய கட்டை விரல் ரேகை மாதிரி, இன்னொரு மனிதனுக்கு இருக்காது. 700 கோடி கட்டை விரல் ரேகைகளும் வேறு தான்... இயற்கையே இவ்வளவு சிம்பிள் ஆக சொல்லிவிட்ட பிறகும் கூட நாம் தான் முதல் இடம், இரண்டாம் இடம் என்று அடித்துக் கொண்டிருக்கிறோம். சிந்தனையை ஒரு முகமாக்கி எடுத்துக் கொண்ட செயல்களில் முழுமையாக நம்மை ஒப்படைக்கும்போது நாம் முயற்சிக்கும் எந்தவொரு செயலுக்கும் எப்படியும் வெற்றி வந்தே தீரும். அதனால் முதல் இடமே இலட்சியம் என்ற சிந்தனையை தோளில் தூக்கி சுமந்து திரி யாமல் காரியமாற்றினால் அப் போது அதுவாகவே தேடி வரும். அந்த நேரத்தில் அந்த வெற்றி உங்களுக்குச் சாதாரணமாகவே படும் என்பதுதான் ஆச்சரியம். பக்குவப்பட்ட வெற்றி எப் போதுமே அகந்தை தராது என் பது இதில் உணர வேண்டிய உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற்றோருக்கு தேசியப்பட்டியல்; நாகரிகமற்ற செயல் என கபே சாடல்

கொழும்பு, ஓக.24

தேர்தலில் போட்டியிட்டு பொதுமக்களால் நிராகரிக்கப்பட்டவர்களுக்கு தேசியப் பட்டியல் ஊடாக வாய்ப்பளிப்பது நாகரிகமற்ற செயல் என்று கபே அமைப்பு சாடியுள்ளது.

கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் இது தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தேர்தலில் பொதுமக்களால் நிராகரிக்கப்பட்டவர்களை தேசியப் பட்டியல் மூலம் மீண்டும் நாடாளுமன்றத்திற்கு அனுப்புவது பின்கதவால் உள்ளே வருவதற்கு ஒப்பானது.

தேர்தல்கள் தொடர்பான அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம் இது சட்டரீதியான ஒன்றுதான் என்ற போதிலும் அரசியல் நா[illegible]கமற்ற ஒரு விடயமாகவே கருதப்பட வேண்டும்.

இவ்வாறான நாகரிகமற்ற அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் பொதுமக்கள் தங்கள் தீவிர எதிர்ப்பைப் பதிவு செய்ய வேண்டும். அதன் மூலம் தேர்தல்கள் தொடர்பான சட்டமூலங்கள் திருத்தம் செய்யப்பட்டு எதிர்வரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறுவதை தடுக்கக் கூடியதாக இருக்கும்.- என்றுள்ளது. (ற)

# ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மீண்டும் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஓக. 24

தேர்தல் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மீண்டும் இன்று ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் இரண்டாம் கட்ட பரீட்சைகள் இன்று ஆரம்பமாகி செப்டம்பர் 8 ஆம் திகதி வரை நடைபெறும் எனவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.


பரீட்சைகளில் முறைகேடு இடம்பெற்றால் 1911 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறியத்தருமாறு பரீட்சைகள் ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனைவிட பரீட்சைகள் திணைக்களத்தின் தெலைபேசி இலக்கங்களான 0112 78 42 08 அல்லது 0112 78 45 37 என்ற இலக்கங்களுக்கு அழைப்பினை ஏற்படுத்தி முறைப்பாட்டினை பதிவுசெய்து கொள்ள முடியும். இவ்வாறு பதிவுசெய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம்.என்.ஜே. புஸ்பகுமார சுட்டிக்காட்டினார்.

இதேவேளை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நேற்று நாடு பூராகவும் சுமூகமாக நடந்து முடிந்தது. (ற)

## மரண அறிவித்தல்கள்

### ஜெயராசா அனுர்ஷன்



மானிப்பாய் மெமோரியல் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயராசா அனுர்ஷன் கடந்த (22.08.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஜெயராசா - கெங்காதேவி தம்பதியரின் அன்பு மகனும் அஜுந்தன், அகிலன், அனுசியன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2015) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மெமோரியல் வீதி,<br>மானிப்பாய்.

தகவல் :<br>குடும்பத்தினர்.

### திருமதி வாசுகி நவரட்ணம்



பிராம்பற்றை, வடகோப்பாயை பிறப்பிடமாகவும் வவுனியா இறம்பைக்குளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வாசுகி நவரட்ணம் நேற்று (23.08.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராஜா (தபால் அதிபர்), இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சண்முகம் மற்றும் முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், நவரட்ணம் (வருகைதரு விரிவுரையாளர் வவுனியா, தொழில்நுட்பக்கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், வரதராஜன் (கிராமசேவையாளர்- சிறுப் பிட்டி), ஜோகராஜன் (கனடா), செம்மனச்செல்வி (ஆசிரியை, வ/பெரிய கோமரசன் குளம் மகாவித்தியாலயம்), இராஜராஜன் (பிரான்ஸ்), சிவசக்தி (ஆங்கில விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை) ஆகியோரின் பாசமுள்ள சகோதரியும், சாந்தினி (ஜேர்மனி), இராஜாம்பிகை, மாலதி (கனடா), தேசிகன், சுசீலா (பிரான்ஸ்), ஜெயறாஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும், இராஜகீர்த்திகன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), இராஜமித்திரன் (யா/ இந்துக்கல்லூரி), சித்திராங்கி (யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), சாய்மீரா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், கேசவன் (வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), சாருகேசி (யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2015) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் வட கோப்பாய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கோப்பாய் இந்து மயானத்துக்குஎடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"பூம்பொழில்"<br>கோப்பாய் வடக்கு,<br>கோப்பாய்.

தகவல் :-<br>ச. நவரட்ணம் (கணவர்),<br>எஸ்.ரி. வரதராஜா (சகோதரர்)

### திருமதி கமலாசனதேவி பாலசுப்பிரமணியம் (தேவி அக்கா)



சுழிபுரம் வடக்கு செட்டி குறிச்சியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாசனதேவி பாலசுப்பிரமணியம் 23.08.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - இராசமணி தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சிதம்பரேஸ்வரி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற ஸ்ரீரங்கநாதன் மற்றும் மீனாட்சி, ரஞ்சினி, மோகனதாஸ், நாகேந்திரன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வ நாயகம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), குணசேகரம், பிருந்தா (சிங்கப்பூர்) ஆகியோரின் மாமியாரும் சிவகௌரி (ஆசிரியை - கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), சிவபாலசுந்தர் (ஆசிரியர் - யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி), சிவசங்கர் (P.H.F.O), சிவகணேஸ், நாயகபாலன், சிவபாலன் (சிங்கப்பூர்), கீர்த்தீசன் (சிங்கப்பூர்) ஆகியோரின் பேர்த்தியும் அஞ்சனா, லதுஷிகா ஆகியோரின் பூட்டியும் செல்வநாயகி, வசந்தா, சாந்தகுமார், இராமச்சந்திரன், காலஞ்சென்ற நவனீதகிருஸ்ணன் மற்றும் குருபாதராசா, ஜெகதீஸ்வரி, ரங்கநாதன் (அதிபர் - இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்) ஆகியோரின் சகோதரியும் நடராசா, சச்சிதானந்தம், கமலேஸ்வரி கௌரி, சோதி லிங்கம் (உடுப்பிட்டி MPCS), புனிதவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் செட்டிகுறிச்சி பண்டத்தரிப்பு இல்லத்தில் இன்று (24.08.2015) திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பில்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பு.

தகவல் :<br>குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### முத்துக்குமார் செல்லப்பா

யாழ் புன்னாலைக் கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் கருகம்பனையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமார் செல்லப்பா நேற்று (23.08.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமார்-ஆச்சிமுத்து தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான மகாலட்சுமி,பரமேஸ்வரராஜா,சிறீஸ்கந்தராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மகேந்திரராணியின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(24.08.2015) திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் கருகம்பனை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 076 619 9328<br>கருகம்பனை ,காங்கேசன்துறை

தகவல்:<br>மனைவி

### திருமதி எட்னா நவமணி பேரின்பநாயகம் (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் - ஏழாலை புனித இசிதோர் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை)



திருமதி எட்னா நவமணி பேரின்பநாயகம் (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் - ஏழாலை புனித இசிதோர் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை) நேற்று (23.08.2015) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அம்புறோஸ் பெனடிற் பேரின்பநாயகம் (இளைப்பாறிய ஆசிரியர் யா/சம் பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி போல் பொன்னுத்துரை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி அம்புறோஸ் பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் மரியநாயகம், கருணைநாயகம், இன்பநாயகம், நேசநாயகம், மதுரநாயகம் காலஞ் சென்றவர்களான தயாளநாயகம், அருமைநாயகம் மற்றும் சாந்தகுமாரி, காலஞ்சென்ற றூபநாயகம் மற்றும் வசந்தநாயகம், பாலநாயகம் ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரா, ஜெயசீலி, மேரிஜெயசீலி, யோகராணி, விஜயா, திலகவதி, பமீலா, நிரஞ்சன்குமார், டெய்சி, றூபி, நொயலீன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.47, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணத்திலிருந்து 26.08.2015 புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு ஏழாலை, புனித இசிதோர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றக் கொள்ளவும்.

இல. 47,மாட்டீன் ஒழுங்கை,<br>யாழ்ப்பாணம்.<br>0212229785

தகவல் :<br>பிள்ளைகள், மருமக்கள்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 10 1951



மறைவு 19 08 2015

### விசாகசுந்தரம் செல்வானந்தம்

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், கம்போடியாவை வசிப்பிடமாகவும் கொண்ட விசாகசுந்தரம் செல்வானந்தம் 19.08.2015 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசாகசுந்தரம்-திரிபுரசுந்தரி தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா-புவனேஸ்வரி தம்பதியரின் மருமகனும், நளாயினியின் (இந்தியா) அன்புக் கணவரும், சஞ்சீவ் (USA), Dr.நிஷாந்தினி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாநிதி நித்தியானந்தம் (நியூசிலாந்து), காலஞ்சென்ற Dr.குணானந்தம், சுதந்திராதேவி (அவுஸ்திரேலியா), சரோஜினிதேவி, அருளானந்தம் (மாவட்ட முகாமையாளர் - RDB), வசந்தாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், Dr.கௌரி (நியூசிலாந்து), செல்வராணி (UK), பாலேந்திரன் (இந்தியா), S.R.கனகநாயகம் (ஓய்வுநிலை பொறியியலாளர்), துஷ்யந்தி (NSB - 2ஆம் கிளை, யாழ்ப்பாணம்), V.K.L.சுகுமார் (பிராந்திய முகாமையாளர் - சனச அபிவிருத்தி வங்கி), சிவயோகராஜா (சங்கீத ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 21.08.2015 அன்று கம்போடியாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :<br>சஞ்சீவ் (மகன்) - 0012182518046 (USA)<br>அருளானந்தம் (சகோதரன்) - 0779146149

## கண்ணீர் அஞ்சலி

புன்னாலைக் கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய
கொடியேற்ற கொடியிறக்க உபயகாரர்

### முத்துக்குமார் செல்லப்பா

அவர்கள் சிவபதப்பேறடைந்தமை குறித்து ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆலய மகோற்சவ உபயகாரர்கள் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் பரம்பரை பரம்பரையாக மகோற்சவ உபயகாரராக இறைபணியில் ஈடுபட்ட அன்னாரின் ஆத்மா ஆயாக்கடவை சித்திவிநாயகர் கழலடியில் பேரின்பம் பெற பிரார்த்திக்கின்றோம்.

ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய மகோற்சவ
உபயகாரர்கள்,
புன்னாலைக்கட்டுவன்.

# திருப்தி தரும் வகையில் நடந்துள்ளது தேர்தல்

***ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவிப்பு***

கொழும்பு, ஓக.24

இலங்கையில் நடந்து முடிந்திருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் நியாயமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும், சம்பந்தப்பட்ட அனைவருக்கும் திருப்தியேற்படுத்தும் விதத்திலும் நடந்துமுடிந்திருப்பதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்களின் அறிக்கை தெரிவித்துள்ளது.

தேர்தல் பிரசாரத்திற்குக் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதாகக் கண்காணிப்பாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களுக்கு இந்தத் தேர்தலைப் பார்வையிட இலங்கைத் தேர்தல் ஆணையர் அழைப்பு விடுத்திருந்தார். இதன்பேரில் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 85 உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று இலங்கைக்குச் சென்று இந்தத் தேர்தலைக் கண்காணித்தது.

இந்தத் தேர்தல் தொடர்பாக ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்பாளர்கள் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், தேர்தல் பிரசாரத்தில் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்ததைச் சுட்டிக்காட்டியிருக்கிறது. வீட்டுக்கு வீடு சென்று பிரசாரம் செய்வதற்கும் துண்டுப் பிரசுரம் கொடுப்பதற்கும் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கிறது.

ஆனால், நிதி தொடர்பாக போதுமான கட்டுப்பாடுகள் இல்லையென்றும் சில வேட்பாளர்கள் 5 இலட்சம் யூரோக்கள் வரை செலவழித்தனர் என்றும் இந்த அறிக்கை கூறுகிறது.

*பெண்கள் பங்களிப்பு குறைவு*

இந்தத் தேர்தலில் போட்டியிட்டவர்களில் 9 சதவீதம் பேர் மட்டுமே பெண்கள் என்பதை அறிக்கை சுட்டிக் காட்டியிருக்கிறது. பெண்கள் மிகக் குறைவான எண்ணிக்கையில் – அதாவது, வெறும் 9 சதவீதம் அளவுக்கே இந்தத் தேர்தலில் போட்டியிட்டதை இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

கலாசாரக் காரணங்கள், சமூக பொருளாதாரக் காரணங்கள், முந்தைய தேர்தல்களில் நடைபெற்ற வன்முறை, பிரசாரத்திற்கான செலவை வேட்பாளரே செய்ய வேண்டியிருப்பது போன்ற காரணங்களால் பெண்கள் அதிகளவில் போட்டியிட முடியவில்லையென இந்த அறிக்கை கூறுகிறது.

*தேர்தல் வன்முறை*

தேர்தல் பிரசாரத்தில் மன்னார் மாவட்டத்தில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவாளர்கள் தம்முடைய போட்டியாளர்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டதாக இந்த அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கிறது.இலங்கைத் தேர்தல் சட்டத்தின்படி, தேர்தலில் செலவழிக்க எந்தக் கட்டுப்பாடும் இல்லாததும் கணக்குகளைச் சமர்ப்பிக்க வேண்டியில்லாததும் சில வேட்பாளர்கள் பெருமளவில் பணத்தைச் செலவழிக்க வழிவகுத்திருப்பதாக தேர்தல் கண்காணிப்பார்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். கட்சிகள் தேர்தல் பிரசாரத்திற்குப் பணம் கொடுப்பதில்லை என்பதால், அதிகம் செலவழிக்கக்கூடிய திறன்கொண்ட வேட்பாளர்களால் மட்டும் பெரியளவில் பிரசாரங்களைச் செய்ய முடிவதாக இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. வாக்கெடுப்பைப் பொறுத்தவரை மிக அமைதியாகவும் சிறப்பாகவும் நடைபெற்றதாக இந்த அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கிறது. அதேபோல வாக்கு எண்ணிக்கையும் மிக அமைதியான முறையிலேயே நடைபெற்றது என இந்த அறிக்கை கூறியிருக்கிறது. (ற–சி)

## மரண அறிவித்தல்கள்



### மாரிமுத்து இராசையா

(ஓய்வு பெற்ற தபால் அதிபர்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் 116, வேம் படிவீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து இராசையா நேற்று (23.08.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

116, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:- மனைவி, பிள்ளைகள்
077 2487493



### சுப்பர் மார்க்கண்டு

இணுவில் கந்தசுவாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பர் மார்க்கண்டு நேற்று (23.08.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் கந்தசுவாமி கோயிலடி,
இணுவில் மேற்கு.

தகவல்:- மகன்மார்
மா. சிவஞானம் (RDD நல்லூர்)
மா. சிவப்பிரமம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் இரத்தினம்



சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் இரத்தினம் நேற்று (23.08.2015) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னம்மா தம்பதியின் அன்பு மகனும் பூரணத்தின் அன்புக் கணவரும் ராஜலட்சுமி, நாகராசா காலஞ்சென்ற புனிதராசா மற்றும் விஜயலட்சுமி (சுவீடன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற ஜெயராசா மற்றும் சிவபாக்கியம், யோகநாதன் (சுவீடன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2015) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சரசாலை கொம்பிக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சரசாலை வடக்கு, சாவகச்சேரி.
0774836809

தகவல் :-
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## சரவணமுத்து கற்பகநாதன்

### (உரிமையாளர் - சிறிமாதவன்)

மணற்பிட்டி, காரைநகரைப்பிறப்பிடமாகவும் இல.60, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து கற்பகநாதன் நேற்று (23.08.2015) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் சிவப்பிரியா, இராதிகா, சுதாகர், சுகந்தன், சயந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சிவானந்தன் (சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் - தியத்தலாவை), தவக்குமரன் (ஆசிரியர் - யா/திருக்குடும்ப கன்னியர் மடம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஹரிணி, ஜலக்ஷனா, பர்வதன் ஆகியோரின் பாசமிகு பேரனும் கருணாநிதி, சிவசோதி, பாக்கியவதி, காலஞ்சென்ற பரஞ்சோதி, தவமணி, கோகிலாவதி, கணேசன், சிவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் யோகேஸ்வரி, பரமேஸ்வரி காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், தேவகுஞ்சரி மற்றும் சிவானந்தன், இராஜேந்திரன், இராஜேஸ்வரி, சிவபாலன், புஸ்பராணி, லோகநாதன், காலஞ்சென்ற சோதிநாதன் ஆகியோரின் மைத்துனரும் பத்மநாதன், சரஸ்வதி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.08.2015) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.60, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

தகவல் -
குடும்பத்தினர்.
0212228729

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாக உடைகின்றதா சிறிலங்கா சுதந்திரக் கட்சி?

## மஹிந்த ஆதரவுத் தரப்பு தனி அணி அமைக்க முயற்சி

கொழும்பு, ஓக.25
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய தலைவர்கள் பலரும், தேசிய அரசில் அமைச்சர் பதவிகளை ஏற்றுக்கொள்ளத் தயாராகியுள்ள நிலையில், மகிந்த ராஜபக்ச ஆதரவாளர்கள், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஏனைய தரப்பினருடன் இணைந்து தனியான அணியொன்றை உருவாக்கவுள்ளனர். அதனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாக உடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ச எதிர்க்கட்சி வரிசையில் அமரத் திட்டமிட்டுள்ளார். அவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகளுடன் இணைந்து தனியான அணியொன்றை உருவாக்குவது தொடர்பாக இன்று முடிவெடுக்கவுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 20 உறுப்பினர்கள் அமைச்சர் பதவிகளை ஏற்கவுள்ளதுடன், மேலும் அதற்குச் சமமான எண்ணிக்கையிலானவர்கள், தேசிய அரசுக்கு ஆதரவு அளிக்கவுள்ளனர்.

அவர்களில், நிமால் சிறிபால டி சில்வா, சுசில் பிரேமஜயந்த, அனுர பிரியதர்சன யாப்பா, சரத் அமுனுகம, ரஞ்சித் சியம்பலாபிட் டிய, ஏ.எச்.எம்.பௌசி, சுதர்சினி பெர்னான்டோ புள்ளே, டிலான் பெரேரா ஆகியோரும் அடங்கியுள் ளனர்.

அதேவேளை மகிந்த ராஜபக்ச அணியினர் கடந்த புதன்கிழமை நடத்திய கூட்டத்தில் டலஸ் அழகப்பெரும, குமார வெல்கம, பவித்ரா வன்னியாராச்சி, ரி.பி.எக்கநாயக்க உள்ளிட்ட 50இற்கும் அதிகமானோர் கலந்து கொண்டிருந்தனர்.

அதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையின் முடிவுகளுக்குக் கட்டுப்படாத உறுப்பினர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரித்துள்ளார்.

இந்தநிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகள், நாடாளுமன்றத்தில் தனியாக இயங்குவது தொடர்பாகவும், கூட்டணிக்குள் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்தும் இன்று முடிவெடுக்கும் என்று தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்துக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ள 14 கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அல்லாத ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள இந்தக் கூட்டத் தில், மகிந்த ராஜபக்ச ஆதரவாளர்களான சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் கலந்து கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நியமனத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகள் மற்றும் மகிந்த ராஜபக்ச ஆதரவாளர்கள் புறக்கணிக் கப்பட்டுள்ளதும் அந்த அணிக்குள் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக, மஹிந்த ஆதரவாளரான ஜி.எல்.பீரிஸ், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டியூ.குணசேகர, லங்கா சமசமாஜ கட்சின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண போன்றோருக்கும் தேசியப் பட்டியல் ஆசனம் அளிக்கப்படவில்லை. (ற)

## நெடுஞ்சாலை பொலிசாரின் விசேட விடுமுறை ரத்து



கொழும்பு, ஓக.24
அதிவேக நெடுஞ்சாலைகளில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிசாரின் விசேட விடுமுறைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

தென்னிலங்கை அதிவேக நெடுஞ்சாலை மற்றும் கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை என்பவற்றில் சுமார் 600 போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இதுவரை காலமும் ஒன்பது கடமை நாள்களின் பின்னர் ஒரு விசேட விடுமுறை நாள் வழங்கப்பட்டிருந்தது.

இந்த விசேட விடுமுறையை ஒன்பது நாள்களுக்கு ஒரு தடவையோ, மாதத்தில் ஒரு மூன்று நாள்களையும் ஒன்றாகவோ விடுமுறையை அனுபவிக்கும் சலுகை வழங்கப்பட்டிருந்தது.

எனினும் கடந்த 15ஆம் திகதி முதல் இந்த விசேட விடுமுறை திட்டத்தை ரத்துச் செய்வதாக நெடுஞ்சாலை போக்குவரத்துப் பொலிஸ் பிரிவின் பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சகர் தனஞ்செய அறிவித்துள்ளார்.

நெடுஞ்சாலைகளில் கடமையாற்றும் பொலிஸாரும் இனி வரும் காலங்களில் சாதாரண பொலிசாருக்குள்ள வரப்பிரசாதங்களை மட்டுமே அனுபவிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது நெடுஞ்சாலைப் போக்குவரத்துப் பொலிசார் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## இத்தாலிக்கான தொழில் விசா இடைநிறுத்தம்

கொழும்பு, ஓக.24
இலங்கையர்களுக்கான தொழில் நுழைவிசைவுகளை (விசா) இத்தாலிய அரசு இடைநிறுத்தியுள்ளது.

மகிந்த ராஜபக்சவின் அரசில் இத்தாலி தொழில நுழைவிசை வுகளில் மேற்கொள்ளப்பட்ட பெரும் முறைகேடு காரணமாகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.


70 நுழைவிசைவுகள் வழங்கப்பட்ட நிலையில் அதில் 40 நுழைவிசைவுகளுக்கு உரிய நடை முறைகள் பின்பற்றப்படவில்லை. அவை கறுப்புச்சந்தையில் அதிகமான விலைகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன

நுழைவிசைவுகள் வழங்கப்பட்ட பின்னர் இத்தாலிய தூதரகத்தில் மேற்கொள்ளப்பட்ட நேர்முக தேர்வின் போது பலருக்கு உரிய கல்வித் தகமைகள் உட்பட்ட விடயங்கள் இருக்கவில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

நேர்முகத் தேர்வின்போது சிலர், தம்மிடம் தொழிலுக்கு செல்லும் முன்னர் ஆயிரத்து 500 யூரோக்கள் வழங்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டதாக தெரிவித்திருந்தனர்

என்னும் இந்த நுழைவிசைவுகள் அனைத்தும் பணக்கொடுப்பனவு இல்லாமலேயே இலங்கைக்கு வழங்கப்பட்டவை என்பதை இத்தாலிய தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ற–சி)

## நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கிறார் மஹிந்த



நடைபெற்று முடிந்துள்ள நாடாளுமன்றத் தேர்தல் நீதியான முறையில் நடத்தி முடிக்க ஒத்துழைப்பு வழங்கிய நாட்டு மக்கள் அனைவருக்கும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நன்றி தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு நன்றி தெரிவித்துள்ளார். இதன்போது கருத்து தெரிவித்துள்ள அவர்–

நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தல் குறுகிய நாட்களில் ஒரு பெரும் சவாலாக எதிர்கொள்ளப்பட்டது. பொதுமக்களும் ஊடகங்களும் எங்களுடன் இணைந்து செயற்பட்டதன் காரணமாக அந்த சவாலை எளிதாக வெற்றி கொள்ள முடிந்தது.

அத்துடன் இந்த தேர்தலின்போது அரசியல்வாதிகளும் அவர்களுடைய ஆதரவாளர்களும் சட்டத்தை மதித்து, அமைதியான முறையில் பரப்புரைகளை முன்னெடுத்து ஒத்துழைப்பு வழங்கினர். அந்த வகையில் தேர்தலை அமைதியான முறையில், நீதியாக நடத்தி முடிக்க ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார். (ற)

## ஐந்து லட்சம் வாக்குகள் தேர்தலில் நிராகரிப்பு

கொழும்பு, ஓக.24
நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் சுமார் 5 இலட்சம் வாக்காளர்களின் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. வேட்பாளர்கள் தொடர்பான நீண்ட வாக்காளர் அட்டை தொடர்பில் தெளிவின்மையே இந்த நிராகரிப்புக்காக காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளில் 4.42 வீதம் அதாவது 517,123 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன

தேர்தலில் வாக்களிக்க 15மில்லியன் வாக்களார்கள் பதிவுப்பெற்றிருந்தபோதும் 3.3மில்லியின் வாக்காளர்கள் வாக்களிக்க வில்லை.

அத்துடன் வேட்பாளர்களின் விருப்புத் தெரிவு தொடர்பில் ஏற்பட்டிருந்த முரண்பாடுகளும் வாக்காளர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தன

கம்பஹாவில் மாத்திரம் 56 ஆயிரத்து 246 வாக்குகள் நிராகரிக் கப்பட்டன. இதற்கு சுமார் 2மீற்றர் நீண்ட வாக்காளர் பட்டியலே காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பலர் கட்சிக்கான வாக்குகளை உரிய முறையில் செலுத்தியபோதும் விருப்புத்தெரிவின்போதே பிழையான அடையாளங்களை இட்டுள்ளனர். பலர் வேண்டுமென்றே வாக்குகளை நிராகரித்துள்ளனர்.

கொழும்பில் மாத்திரம் 43ஆயிரத்து 372 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அங்கும் விருப்பு வாக்குகளே பிரதான காரணமாக அமைந்திருந்தன. (ற)

## தீ விபத்தில் வீடு நாசம் புத்தளத்தில் சம்பவம்

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மணல்குன்றுப் பகுதியில் நேற்று வீடொன்று தீக்கிரையாகியுள்ளதாக புத்தளம் பொலிசார் தெரிவித்தனர்.

மணல்குன்று, செம்மண்திடல் வீதியில் புத்தளம் பெரிய பள்ளியினால் ஏழ்மை நிலையில் வாழும் மக்களுக்காக வழங்கப்பட்டுள்ள 20 வீடுகளைக் கொண்ட பைதுஸ்ஸகாத் வீடமைப்புத் திட்டத்தின் 05 ஆம் இலக்க வீடொன்றே இவ்வாறு தீக்கிரையாகியுள்ளது.

குறித்த வீட்டில் தனது இரு பிள்ளைகளும் வீட்டினுள் விளையாடிக் கொண்டிருந்த போது கட்டிலின் கீழ் இருந்து புகை வெளிவந்ததாக தனது பிள்ளைகள் கூறியதாக குறிப்பிடும் வீட்டின் உரிமை யாளரான பெண், தீ எவ்வாறு ஏற்பட்டது என தெரியவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த தீ அனர்த்தத்தால் எவருக்கும் எவ்வித காயங்களோ அல்லது உயிராபத்துக்களோ ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

பரவிய தீயைப் பொது மக்கள் இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாலும் கூட சுய தொழில் வேலை வாய்ப்பில் ஈடுபடும் குறித்த வீட்டின் உரிமையாளரின் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த புதிய ஆடைகள், தையல் இயந்திரம் மற்றும் பெட்டிக்கடை உள்ளிட்டவைகள் தீயில் எரிந்து சேதமாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குறித்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிசார் மேற் கொண்டு வருகின்றனர். (ற)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

**வீடு வாடகைக்கு**
யாழ் நகரில் பிரபல பாடசாலைகளுக்கு அருகில் பெரிய வீடு ஒன்று வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 0774468463,0716790050

**தேவை**
பொதியிடல், பில்கிளார்க், உதவியாளர், மாவறுத்தல் என்பவற்றிற்கு பெண்கள், அரைக்கும் ஆலைக்கு ஆண்கள் தேவை.
தொடர்பு : 0771746101

**தவறவிட்டுள்ளேன்** வவுனியாவைச் சேர்ந்த கிருபைராஜா சசிதரன் ஆகிய எனது IC (910243012V), Bike documents, Licence, ATM card, University IC அடங்கிய எனது Burs இணுவில் பகுதியில் 18.08.2015 அன்று தவறவிட்டுள்ளேன் கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவிக்கவும் அல்லது யாழ் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
தொடர்பு : 0757446505, 0752705017

**தவறிவிட்டது**
நேற்று முன் தினம் (22.08.2015) இரவு 7.00 மணியளவில் இலத்திரனியல் கமரா யாழ் மத்திய பேருந்து நிலையத்தில் தவறிவிட்டது.
மேற்படி கமராவில் எமது பிள்ளையின் கலை நிகழ்வுகள் சேமிக்கப்பட்டுள்ளதால் கமராவை கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்து உதவும் படி கேட்டுக் கொள்கின்றோம்.
கண்டெடுத்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
ரகு ஸ்ருடியோ மானிப்பாய்.
0779033666, 0775408981
0212225980


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி மோசடி தடுப்புப் பிரிவினரால் இவ்வாரம் பலர் அழைக்கப்படுவர்

கொழும்பு, ஓக. 24

நிதி மோசடி தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், எதிர்வரும் நாட்களில் பல அரசியல்வாதிகள் கைதுசெய்யப்படலாமென கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிதி மோசடி தொடர்பில் மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, முன்னாள் அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா உள்ளிட்ட பலர் மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தற்போது நிறைவுக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. இந்நிலையில், எதிர்வரும் நாள்களில் இவர்கள் தொடர்பில் நீதிமன்ற விசாரணைக்கு கொண்டு வந்து கைதுசெய்யப்படலாமென கூறப்படுகிறது.

மேலும், கடந்த நாடாளுமன்ற தேர்தல் காலத்தில் விசாரணைக்கு அழைக்கப்பட்டு பின்னர் ஒத்தி வைக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களது விசாரணைகளும் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளன. அவர்களுள் விமல் வீரவன்ச கடந்த வாரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

இந்நிலையில், கடந்த காலத்தில் இடம்பெற்ற நிதி மோசடிக்கள் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கவுள்ளதாக நிதி மோசடி தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. ஊழல் மோசடியை இல்லாமல் ஒழிப்பது, தேசிய அரசின் முக்கிய கொள்கைகளுள் ஒன்றாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

# தேர்தலின் பின்னர் 25 பேர் கைது

கொழும்பு, ஓக. 24

நாடாளுமன்ற தேர்தலுக்கு பின்னர் இடம்பெற்ற சட்ட மீறல்கள் தொடர்பில் நேற்று வரையில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது.

தேர்தல் சட்ட மீறல்கள் குறித்து தேர்தலுக்கு பின்னர் 24 முறைப்பாடுகள் தமக்கு கிடைக்க பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகளுக்கு அமைவாகவே 25 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தலுக்கு பின்னரான காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போது இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ற–ரி)

# முல்லையில் சிறுமி மீது வன்புணர்வு முயற்சி

## மடக்கிப் பிடித்தனர் பொதுமக்கள்

கிளிநொச்சி, ஓக. 24

முல்லைத்தீவு மாங்குளம் எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கும் இலங்கை வங்கிக்கும் இடைப்பட்ட பகுதியில் இனந்தெரியாத இருவரால் சிறுமி மீது மேற்கொள்ளப்படவிருந்த பாலியல் வன்புணர்வு முயற்சி மக்களால் முறியடிக்கப்பட்டுள்ளது.

குறித்த இருவரில் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார் என்றும், மற்றைய நபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பிற்பகல் 2 மணியளவில் வந்துகொண்டிருந்த 14 வயது நிரம்பிய குறித்த சிறுமியை இருவர் கையை பிடித்து பற்றைக்குள் இழுத்துச்சென்று பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்றுள்ளனர். இதனை கண்ட பொது மகன் மாங்குளம் சந்திப்பகுதியில் நின்றவர்களிடம் சம்பவத்தை தெரிவித்த நிலையில் பொது மக்களின் உதவியுடன் சிறுமி மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்போது குறித்த இருவரில் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார் என்றும் மற்றையவர் பொதுமக்களால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற–ரி, 101)

# தேசியப்பட்டியல் ஆசனத்துக்கு நால்வரை பரிந்துரைத்தது ரெலோ

வவுனியா, ஓக. 24

தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு கிடைத்துள்ள இரண்டு தேசியப்பட்டியல் ஆசனங்களில் ஒன்றை தமக்கு வழங்குமாறு கோரி 4 பேரின் பெயர்களை தமிழீழ விடுதலை இயக்கமான ரெலோ தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைமைப் பீடத்திற்கும் அதன் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் பரிந்துரைத்துள்ளதாக கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தேசி யப்பட்டியலில் ஒன்றை கூட்டுக்கட்சிகளுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்து வரும் நிலையில் ரெலோ மற்றும் ஈ.பி.ஆர்.எல். எவ் என்பன தமது கட்சிகளின் பிரமுகர்களுக்கு அவ் ஆசனத்தை வழங்க வேண்டும் என கோரியுள்ளது.

இந்த நிலையில் வவுனியாவில் நேற்று ரெலோ, அக்கட்சியில் போட்டியிட்டு தோல்வியடைந்த வினோ நோகராதலிங்கம், என். சிறிகாந்தா, கென்றி மகேந்திரன், கருணாகரன் ஆகியோரில் ஒருவருக்கு தேசியப்பட்டியல் ஆசனம் வழங்க வேண்டும் என கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு கடிதம் அனுப்பியுள்ளது. (ற)

# நாடாளுமன்று செல்ல வேண்டுமென விசேட பூசை

தென்மராட்சி, ஓக.24

இலங்கைத் தமிழ. அரசுக் கட்சியின் சாவகச்சேரி தொகுதி வேட்பாளர் க.அருந்தவபாலனுக்கு தேசியப் பட்டியலில் இடம் கிடைத்து நாடாளுமன்றுக்குச் செல்ல வேண்டுமென தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான ஆலயங்களில் நேற்றுமுன்தினம் விசேட அபிசேகங்களும் பஜனைகளும் இடம் பெற்றன.

அந்தந்தக் கிராம மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டு ஆலயங்களில் இடம்பெற்ற வழிபாடுகளில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர். (ற–9)

# கல்வி முறைமையை மாற்றியமைக்க முடிவு

## மனோநிலைக்கு ஏற்ப மாணவர் கல்வி கற்கலாம்

கொழும்பு, ஓக. 24

இலங்கையில் தற்போது காணப்படும் கல்வி முறைமையை மாற்றி மாணவர்களின் மனோநிலைக்கு ஏற்ற வகையில் மாற்றி அமைப்பதற்கு தேசிய கல்வி நிறுவகம் தீர்மானித்துள்ளது.

வயது மட்டத்துக்கு ஏற்ற வகையில் கல்வி முறைமை காணப்படாததன் காரணமாக மாணவர்கள் தேவையற்ற மன உளைச்சலுக்கு உள்ளாவதாக தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் குணபால நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கல்விமான்கள் மற்றும் உளவியல் நிபுணர்களிடம் ஆய்வறிக்கை பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதற்கமைய தரம் ஒன்று முதல் ஐந்தாம் தரம் வரையும் ஆறாம் தரம் முதல் 11 ஆம் தரம் வரையும் 12 மற்றும் 13ஆம் தரங்கள் என வகைப்படுத்தப்பட்ட கல்வி மறுசீரமைப்பு முறை மேற்கொள்ளப்படவுள்ளது. அதற்கான மாதிரி வடிவமைப்பினை மேற்கொள்வதற்கு குழு ஒன்று நியமிக்கப்படும் என தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

### ஐ.நா. விசாரணை

தெரிவிக்கின்றன.

இந்த அறிக்கை பகிரங்கமாக வெளியிடப்படுவதற்கு 48 மணித்தியாலங்கள் முன்னதாக, இலங்கை அரசிடம் கையளிக்கப்படும். அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர் அது வெளியே கசிவதற்கு வாய்ப்புகள் இல்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக, கடந்த வார இறுதியில், அல்லது இந்த வாரத்தின் பிற்பகுதியில் ஜனாதிபதியிடம் கையளிக்கப் படவிருந்தது. இந்த அறிக்கை வரும் செப்ரெம்பர் 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனித உரிமைகள் சபையின் 30ஆவது கூட்டத்தொடருக்கு முன்னதாக, ஐ.நா இணையத் தளத்தில் வெளியிடப்படும்.

இந்த அறிக்கை போருடன் தொடர்புபட்டிருந்த சாட்சிகள் மற்றும் ஏனைய தரப்புகளின் சாட்சியங்கள் மற்றும் வாக்குமூலங்களின் அடிப்படையில், தயாரிக்கப்பட்டுள்ளது. போரின் போது மனித உரிமைகளுக்குப் பொறுப்பானவர்கள் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான பரிந்துரைகளும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வெளிப்படைத்தன்மை குறித்த கரிசனைகள் இருந்தாலும், சாட்சியம் அளித்தவர்கள் பற்றிய அடையாளர்கள் வெளியிடப்படாமல் பாதுகாக்கப்படும். இந்த அறிக்கை தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் சபையின் கூட்டத்தில் வரும் செப்ரெம்பர் 30 திகதி கலந்துரையாடப்படவுள்ளது– என அந்த வார இதழ் குறிப்பிட்டுள்ளது. (ற–ரி)

### கூட்டமைப்பின்

அனுப்பியுள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும் இன்னமும் தமது தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் விவரங்களை வெளியிடாமல் உள்ளது.

கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் ஆசனங்களைப் பிடிக்க தோல்வியுற்ற வேட்பாளர்கள் பலரும் முயற்சிக்கின்றனர். அத்துடன் , பல்வேறு தரப்பில் இருந்தும், தேசியப் பட்டியல் ஆசனங்களுக்கு நியமிக்கப்பட வேண்டியவர்கள் தொடர்பான பரிந்துரைகள், கோரிக்கைகள், கூட்டமைப்புத் தலைமைக்கு விடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் விவரம் இன்று தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது என்றும் அதன் பின்னர், ஊடகங்களுக்கு அறிவிக்கப் படும் என்றும் அதன் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினர்களாக திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியுற்ற ஒருவரும், வன்னி மாவட்டத்தில் சில நூறு வாக்குகளால் வெற்றி வாய்ப்பை இழந்த பெண் வேட்பாளர் ஒருவரும் நியமிக்கப்பட வாய்ப்புண்டு என்று கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற–ரி)

### மீனவரின்

பருத்தித்துறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

குறித்த நபர் வடமராட்சி கிழக்கு, வத்திராயன் பகுதியைச் சேர்ந்தவர் என்றும், திருமணமாகி கற்கோவளத்தில் வசிப்பர் என்றும் கூறப்படுகின்றது.

சம்பவ இடத்திற்கு சென்ற பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதிவான் திருமதி.விஜயராணி உருத்திரேஸ்வரன் மீட்கப்பட்ட சடலத்தை உடற்கூற்று பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார். (ற–109,ரி)

### கோத்தாவிடம்

மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆகியன விசாரணை நடத்தியிருந்தன. இதனையடுத்து அவரைக் கைதுசெய்யக் கூடிய சாத்தியங்கள் பல காணப் பட்டபோதும், அதனைத் தடுக்கும் வகையில் அவர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தார். இதனையடுத்து கோத்தபாயவைக் கைதுசெய்ய இடைக்கால தடை விதிக்கப்பட்டது. எனினும், அவன்காட் மிதக்கும் ஆயுதக் களஞ்சியம், மிஹின் லங்கா நிறுவனத்துக்கு விமானங்களைப் பெற்றுக்கொடுத்தமை, லங்கா ஹொஸ்பிட்டல் பங்கு கொடுக்கல் வாங்கல், மிக் விமானக் கொள்வனவு ஆகிய குற்றச்சாட்டுகள் தவிர்ந்த வேறு குற்றச்சாட்டுகளுக்காக கோத்தபாயவைக் கைதுசெய்யலாமென நீதிமன்றம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தேர்தல் நிறைவடைந்ததும் உதய கம்மன்பில, மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் அஜித் நிமல் கப்ரால், சசி வீரவன்ச மற்றும் பலர் நிதி மோசடிப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டிருந்தனர். (ற–சி)

### கொழும்பு

முன்னரே திட்டமிடப்பட்டிருந்ததாயினும் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றதால் அது பிற்போடப்பட்டிருந்தது.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணை அறிக்கை வெளியிடப்படவுள்ள நிலையில், நிஷா பிஸ்வாலின் இந்தப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக கருதப்படுகிறது. அதேவேளை, நிஷா பிஸ்வாலின் இந்தப் பயணம், அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியின் பயணத்தின் தொடர்ச்சியான ஒன்று என கொழும்பு அரச உயர்மட்டத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஜோன் கெரி தனது பயணத்தின் போது, இரு நாடுகளுக்கும் இடையில், அரசியல், வர்த்தகம், பாதுகாப்பு கூட்டுறவு விவகாரங்களில், பங்காளர் கலந்துரையாடலை மேற்கொள்வது தொடர்பாக குறிப்பிட்டிருந்தார். கடந்த மே மாதம், ஜோன் கெரியுடன் நிஷா பிஸ்வாலும் கொழும்பு வந்திருந்தார்.

அதேவேளை,கடந்தபுதன்கிழமையே தனது பணியைப் பொறுப்பேற்பதற்காக கொழும்பு வந்திருந்த அமெரிக்காவின் புதிய தூதுவர் அதுல் கெசாப், கடந்த வெள்ளிக்கிழமை, தனது நியமனப் பத்திரங்களை ஜனாதிபதியிடம் கையளித்திருந்தார். வழக்கத்துக்கு மாறாக, அமெரிக்கத் தூதுவரின் நியமனப் பத்திரங்கள் மிக விரைவாக ஜனாதிபதியால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

நிஷா பிஸ்வாலின் பயணத்துக்கு முன்னதாக, புதிய அமெரிக்கத் தூதுவர் பதவியேற்க வேண்டும் என்று அமெரிக்கா விரும்பியதாலேயே விரைவாக இந்த நகர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கொழும்பு அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். (ற–ரி)

### கூட்டமைப்பையும்

யாடுவதற்காகவே, நிஷா இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வதாகத் தெரியவருகின்றது.

இலங்கைக்கு வருகை தரும் நிஷா இரு நாள்கள் தங்கியிருக்கவுள்ளார். தமிழ் மக்களினால் ஏக பிரதிநிதிகளாக மீண்டும் அங்கீகரிக்கப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனும் அவர் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். இந்தச் சந்திப்பு புதன்கிழமை இடம்பெறவுள்ளது. (த–5)

### தேசிய

ஆதரவளிக்கவுள்ளனர் என்றும் அந்த தகவல்கள் மேலும் தெரிவித்தன.

ஊழலை ஒழித்தல், கல்வி, சுகாதாரம், பெண்கள் பாதுகாப்பு, கலாசார, பொருளாதார முன்னேற்றம் உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படும் தேசிய அரசானது, இரண்டு அல்லது 3 வருடங்களுக்கு நிலைக்குமென்று இரு பிரதான கட்சிகளும் ஏற்கனவே தெரிவித்திருந்தது.

புதிதாக அமைக்கப்படவுள்ள அரசின் முதலாவது நாடாளுமன்ற அமர்வானது, செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி கூடவுள்ளது. (ற–ரி)

### எதிர்க் கட்சித்

துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன தேசிய அரசு குறித்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள நிலையில், எதிர்க்கட்சி தலைவர் யார் என்பது குறித்த சர்ச்சை எழுந்துள்ள நிலையில் ஜனாதிபதி இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை எதிர்க்கட்சி தலைவர் பதவி தமது கட்சிக்கு கிடைக்கலாம் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார் என்று கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

புதிய நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவு எதிர்வரும் திங்கட்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர்களின் சத்தியப்பிரமாணம் இடம்பெற்ற பின்னர் முன்னெடுக்கப்படும் என்று கூறப்படுகின்றது. (ற–ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத் தேர்தலில் பௌத்தர்களுக்கு அநீதி: தேர்தல் முறைமையில் மாற்றம் வேண்டும்

## பொதுபலசேனா கோரிக்கை

கொழும்பு, ஓக.24

"நடந்துமுடிந்த பொதுத் தேர்த லில் சிங்கள பௌத்தர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவித்த பொதுபலசேனாவின் நிர்வாகப் பணிப்பாளர் டிலந்த விதானகே, சிங்கள பௌத்தர்களின் மக்கள் பிரதிநிதித்துவம் நாடாளு மன்றத்தில் குறைந்துள்ளதாகவும் அதனைப் பாதுகாக்க உடனடியாக தேர்தல் முறைமையில் மாற்றம் செய்யப்படவேண்டும்எனவும் கோரிக்கை முன்வைத்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது:-

"ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன – பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான தேசிய அரசு தொடர்பாக தற்போது உடனடி யாக கருத்துக் கூறமுடியாது. ஆனால், நாட்டில் ஸ்திரமான ஆட்சி ஏற்படுத்தப்படவேண்டும்.

மேலும் ஆட்சியில் சிங்கள பௌத்தர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். தற்போது நடந்து முடிந்த பொதுத் தேர்தலிலும் சிங்கள பௌத்தர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. சிங்கள பௌத்தர்களின் மக்கள் பிரதிநிதித்துவம் நாடாளு மன்றத்தில் குறைந்துள்ளது.

அத்தோடு, இத்தேர்தல் முறைமையிலும் சிங்கள பௌத்தர்களின் மக்கள் பிரதிநிதித் துவம் உறுதி செய்யப்படவில்லை.

எனவே, உடனடியாக தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். நாடாளுமன்றத்திற்குள் எமது மக்களுக் காக குரல் ஒலிக்கப் படாவிட்டாலும் வெளியே எமது உரிமைக்குரல் ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

தகவல் அறியும் சட்டமூலம் தொடர்பாக பேசப்படுகிறது. ஆனால், தற்போதைய தலைவர்கள் முஸ்லிம்களுடன் செய்துகொள்ளப்பட்ட உடன் படிக்கை என்ன என்பதை வெளியிட வேண்டும்.

முஸ்லிம்களுக்குத் தனியான நிர்வாக அலகு வழங்கப்படுமா, இல்லையா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். இவர்களோடு இரக சிய ஒப்பந்தங்கள் உள்ளனவா என்பது வெளிப்படுத்தப்படவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைப்பதில் எந்த விதமான தவறும் இல்லை. ஆனால், கூட்டமைப்பின் கோரிக் கைகளை நிறைவேற்றுவதில்தான் பிரச்சினைகள் உள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பெரும்பான்மை மக்கள் மத்தியில் இன்னும் செல்வாக்கு உள்ளது என்பதைப் பொதுத் தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. (ந–சி)

# வைத்தியசாலையில் இருந்தவாறே பரீட்சைக்குத் தோற்றிய மாணவன்

விறகு வெட்டச்சென்று கையில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த 10 வயது ரஞ்சன் ஹரீஸ் என்ற மாணவன் நேற்றைய தினம் இடம் பெற்ற ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்கு வைத்தியசாலையில் இருந்தவாறே தோற்றியுள்ளார்.

குறித்த மாணவன் கடந்த வியாழக்கிழமை (20ஆம் திகதி) விறகு வெட்டும்போது ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்து பேராதனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந் தார். நோர்வூட் பொலிஸ் பிரிவிற் குட்பட்ட எல்படை தோட்டத்தைச் சேர்ந்த மேற்படி மாணவன் விறகு வெட் டிக் கொண்டிருந்தபோது மாண வனின் வலக்கையில் இருந்த கத்தி நழுவி இடக்கையை வெட்டியுள்ளது.

சம்பவத்தை அடுத்து சிறுவன் உடனடியாக டிக்கோயா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கண்டி, பேராதனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

குறித்த சிறுவனின் இடது கை வெட்டப்பட்ட நிலையில் தொங்கிக் கொண்டிருந்ததாகத் தெரிவித்த டிக்கோயா வைத்தியசாலை வைத்தியர், சத்திரசிகிச்சையின் மூலம் கையைப் பொருத்தமுடியும் என்றும் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

எனினும், குறித்த மாணவன் நேற்று இடம்பெற்ற பரீட்சையில் தோற்றியிருந்தமை பாராட்டத்தக்க விடயம் என மாணவனின் வகுப்பு ஆசிரியர்கள் உட்படப் பலர் தெரிவித்திருந்தனர். (ந–சி)

# அமைச்சுப் பொறுப்புகளுக்கு உறுப்பினர்களிடையே போட்டி

கொழும்பு, ஓக.24

நல்லாட்சியின் புதிய தேசிய அரசின் அமைச்சரவை நியமனங்கள் இன்றையதினம் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில், முக்கிய அமைச்சுப் பதவிகளுக்கு உறுப்பினர்களிடேயே கடுமையான போட்டி நிலவுவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

ஆரம்பத்தில் வழங்கப்பட்ட அமைச்சுப் பதவிகளைத் தொடர்ந் தும் செயற்படுத்த வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்ற நிலை யில், நிதி மற்றும் விளையாட்டு அமைச்சுகளுக்குக் கடும் போட்டி நிலவுகின்றது. அந்தவகையில் விளையாட்டுத் துறை அமைச்சுக்காக பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் ஹரீன் பெர்னாண்டோ, நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திஸாநாயக்க மற்றும் குருநாகல் மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. நாவின்ன ஆகியோர் இந்த அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, தேசிய அரசின் நிதி அமைச்சராக ஹர்ஷ டி சில்வா நியமிக்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நல்லாட்சி அரசில் நிதி அமைச்சராக ஐ.தே.கவின் உபதலைவர் ரவி கருணாநாயக்க நியமிக்கப் பட்டிருந்தார். கடந்த தேர்தலில் அவர் பெற்றிருந்த விருப்பு வாக்கு கள் மற்றும் கொழும்பு மாவட்ட ஐ.தே.க. தலைவர் என்ற வகை யில் அவருக்குக் கௌரவமான அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது. எனினும், ஹர்ஷ டி சில்வா இம்முறை தேர்தலில் ரவியைப் பார்க்கிலும் அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தமையாலும், பொருளாதாரத்தில் சிறந்த புலமை கொண்டவர் என்பதாலும் அவரை நிதி அமைச்சராக நியமிப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதாக சிறிகொத்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ந–சி)

# நுவரெலியாவில் இருவர் போதைப்பொருளுடன் கைது

பாடசாலை மாணவர்களுக்குப் போதைப்பொருள் விற்பனை செய்து வந்த இரு சந்தேகநபர்களை நுவரெலியா பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தடைசெய்யப்பட்ட போதைப் பொருளான புகையிலைத்தூள் பக் கெட்டுகளை நுவரெலியா நகர கடையொன்றில் மறைத்து வைத்து விற்பனைசெய்வதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றுக்கு அமைய பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது 401 போதைப் பொருள் பக்கெட்களுடன் குறித்த இரு சந்தேகநபர்களையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்தே குறித்த புகையிலைத்தூள் போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாகவும் இது தொடர்பில் பொதுமக்கள் பொலிஸாருக்குத் தக வல் வழங்கியுள்ளனர். (ந–சி)

# கட்சி மாறியதாலேயே காலைவாரினர் மக்கள்

## மஹிந்தவை என்றும் மறக்கமாட்டார் என்கிறார் காதர்

கொழும்பு, ஓக.24

"கண்டி மாவட்ட மக்களுக்கு சேவையாற்றுவதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்துகொண்டேன். எனினும், மக்கள் இதை மறந்து, கட்சி தாவிய ஒரே காரணத்துக்காக என்னைப் புறக்கணித்துவிட்டனர்."

– இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் பிரதியமைச்சரான ஏ.ஆர். எம்.அப்துல் காதர்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"கடந்த 26 வருடங்களாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந் துள்ளேன். இக்காலப்பகுதியில் கண்டி வாழ் மக்களுக்காக பல சேவைகளைச் செய்துள்ளேன். அவற்றை நான் பட்டியலிட்டுக் காட்டவேண்டிய அவசியமில்லை. மக்களுக்கு நன்கு தெரியும்.

இந்த மக்களுக்குச் சேவையாற்றுவதற்காகத்தானே நான் கட்சி மாறினேன். இதை ஒரு காரணமாக வைத்துக்கொண்டு என்னைப் புறக்கணித்துவிட்டனர். தோல்வியைக் கண்டு நான் துவண்டுவிடவில்லை. நான் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகாமை மக்களுக்கே இழப்பாகும். 'பரசூட்' வேட்பாளர்களுக்கு கூட கண்டி வாழ் முஸ்லிம் மக்கள் வாக்களித் துள்ளனர். ஆனால், சேவைசெய்து வாக்குக் கேட்ட எனக்கு ஆணை வழங்கவில்லை.

கண்டி மாவட்டத்தில் பிறந்து, அங்கேயே வளர்ந்து, வாழ்ந்துவரும் நான், எனது மக்களுக்குச் சேவை யாற்றுவதற்காகவே இம்முறையும் தேர்தலில் போட்டியிட்டேன். ஆனால், நீதி, நியாயம், சத்தியம் என்பவற்றை மறந்து, இனவாதத்துக்கு அடிபணிந்து மக்கள் வாக்களித் துள்ளனர்.

என்னிடம் பல சேவைகளைப் பெற்றுக்கொண்ட சிலர் எனக்குத் துரோகமிழைத்துவிட்டனர். அரசு இத்துடன் முடியப்போவதில்லை. அத்துடன், மஹிந்தவை நான் என்றும் மறக்கப்போவதுமில்லை. எனக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி" – என்றார். (ந–சி)

# வயலில் வேலை செய்துகொண்டிருந்தவர் வலிப்பு ஏற்பட்டுச் சாவு

வவுனியா ஈரப்பெரியகுளம் அவுசுதுபிட்டிய பகுதியில் நேற்றுக் காலை வயலில் வேலை செய்துகொண்டிருந்த ஒருவர் வலிப்பு ஏற்பட்டு வயலில் விழுந்து உயிரிழந்துள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

வவுனியா ஈரப்பெரியகுளம் அவுசுதுபிட்டிய பகுதியைச்சேர்ந்த எச்.எம். கமல் பண்டார (வயது – 42) என்ற குடும்பஸ்தர் நேற்றுக் காலை தனது வயலில் வேலை செய்வதற்குச் சென்றுள்ளார். வயலில் வேலை செய்து கொண்டிருந்த சமயம் அவருக்கு வலிப்பு ஏற்பட்டு வயலில் விழுந்து இறந்துள்ளார்.

அவருக்கு தேநீர் கொடுப்பதற்கு அவரின் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது தொடர்பு ஏற்படுத்த முடியாததையடுத்து அங்கு சென்று பார்த்தபோது வயலில் விழுந்து இறந்த நிலையில் காணப்பட்டுள்ளார். இவரின் சடலம் வவுனியா பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இவருக்கு ஏற்கனவே வலிப்பு இருந்துள்ளது. அதற்கு கிளினிக் செல்லவில்லை என்பதையும் மரண விசாரணையில் தெரிவித் துள்ளனர். மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந–சி)

# நாடாளுமன்றில் குடும்பங்களின் ஆதிக்கம்

கொழும்பு, ஓக.24

நடந்துமுடிந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பல அங்கத்தவர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள னர். ரணதுங்க குடும்பம், பொன் சேகா குடும்பம் மற்றும் ராஜபக்ஷ குடும்பம் ஆகியவற்றின் மீதே தேர் தல் காலத்தில் மக்கள் கவனம் செலுத்தியிருந்தனர். எனினும், தேர்தலின் பின்னர், ராஜபக்ச குடும்பத்தில் குருநாகலையில் போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வெற்றிபெற்றிருந்தார். அம்பாந்தோட்டையில் போட்டியிட்டிருந்த சமல் ராஜபக்ச மற்றும் நாமல் ராஜபக்ச ஆகியோர் வெற்றி பெற்றி ருந்ததுடன் நிரூபமா ராஜபக்ச தோல்வியடைந்திருந்தார்.

இதேவேளை, கடந்த முறை கம்பஹா மாவட்டத்தைப் பிரதி நிதித் துவப்படுத்தி நாடாளுமன்றத் துக்குத் தெரிவாகியிருந்த பஸில் ராஜபக்ச இம்முறை தேர்தலில் போட்டியிட்டிருக்கவில்லை. எது எவ்வாறாயினும் ராஜபக்ச குடும்பத்தில் மூன்று பேர் 8ஆவது நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள் ளனர்.

இதனைத் தவிர, ஐக்கிய தேசிய முன்னணியில் களுத்துறையில் போட்டியிட்ட ராஜித்த சேனாரத்ன நாடாளுமன்றத்துக்குத் தெரிவான அதேவேளை, அவரது மகன் சதுர சேனாரத்ன கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டு தெரிவாகியுள்ளார்.

அத்துடன், முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவும் மேல் மாகாண சபை முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும் இம்முறை நாடாளுமன்றத்திற்கு கம்பஹா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தி எதிர்க்கட்சி களிலிருந்து தெரிவான சகோதரர் களாவர். அத்தோடு, ஐ.ம.சு.முவில் போட்டியிட்ட அவர்களது மற்று மொரு சகோதரர் ருவன் ரணதுங்க இம்முறை தோல்வியடைந்திருந்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க மற்றும் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டுத் தெரிவான மயந்த திஸாநாயக்க ஆகியோர் இம்முறை நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகோதரர்களாவர்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் தெரிவாகியுள்ள கரு ஜயசூரிய, நவீன் திஸாநாயக்கவின் மாமனார் (மனைவியின் தந்தை) என்பதும் குறிப்பிடத் தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசி யப் பட்டியலில் தெரிவான அனோமா கமகே, நாடாளுமன்றத்திற்குத் தெரி வான தயா கமகே ஆகியோர் கணவன், மனைவி என்பது குறிப் பிடத் தக்கது.

அத்தோடு, கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரி வாகியுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் தேசியப் பட்டியலில் தெரி வாகியுள்ள டாக்டர். ஹபீஸ் ஆகியோரும் சகோதரர்கள் என்பதுடன், மாத்தளை மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள வசந்த அலுவிகார மற்றும் ரஞ்சித் அலுவிகார ஆகியோரும் சகோதரர் களாவர்.

கண்டி மாவட்டத்திலிருந்து தெரிவாகியுள்ள மற்றுமொரு உறுப்பினர் திலும் அமுனுகம மற்றும் ஐ.ம.சு. மு. தேசியப் பட்டியல் உறுப்பினர் சரத் அமுனுகம ஆகியோர் மாமன் மருமகன் ஆவர். அத்தோடு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ருவன் விஜயவர்தன (கம்பஹா), வசந்த சேனாநாயக்க (பொலன்னறுவை) ஆகியோரும் துமிந்த திஸாநாயக்க மற்றும் கண்டி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் அநுராத ஜயரத்ன ஆகியோரும் உறவினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சரத் பொன்சேகா, அவரது மனைவி அனோமா பொன் சேகா மற்றும் மருமகன் ஆகியோர் தேர்தலில் போட்டியிட்டபோதும் மூவரும் தோல்வியடைந் திருந்தனர். (ந–சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நக்கீரன், அந்தோனியார்புரம் வி.கழகங்கள் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றன

கரணவாய், ஓக. 24

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெற்கெழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தி வரும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் நக்கீரன் விளை யாட்டுக் கழகம் மற்றும் மன்னார் அந்தோனியார்புரம் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

***ஒற்றுமை வி.கழகம் எதிர் நக்கீரன் வி.கழகம்***

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அல்வாய் வடக்கு நக்கீரன் விளையாட்டுக்கழகம் மோதியது. ஆட்டத்தின் பதின்ம நிமிடத்தில் ஒற்றுமை சார்பாக முதலாவது கோல் பதியப்பட்டது. மேலதிக கோல்களை ஒற்றுமை வீரர்களும், பழிதீர்க்க முடியாமல் நக்கீரன் வீரர்களும் நிற்க 1:0 என்ற ஒற்றுமையின் ஆதிக்கத்துடன் முதல்பாதி முடிவடைந்தது. ஆட்டத்தின் இரண்டாவது பாதியின் 9ஆவது நிமிடத்தில் நக்கீரன் அணி சார்பாக முதலாவது கோல் பதியப்பட்டு கோல்கணக்கு 1:1 என்று சமன் செய்யப்பட்டது. இதே நிலைமை இறுதிவரை நீடிக்க முடிவில் ஆட்டம் சமநிலையானது. சமநிலைத் தகர்ப்பு உதைகளில் 5:3 என்ற அடிப்படையில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது நக்கீரன் அணி.

***இளைஞர்கள் வி.கழகம் எதிர் அந்தோனியார்புரம் வி.கழகம்***

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் திக்கம் இளைஞர்கள் வி.கழகத்தை எதிர்த்து மன்னார் அந்தோனியார்புரம் வி.கழகம் மோதியது. ஆட்டத்தின் முதல்பாதி 1:0 என்ற அந்தோனியார் புரம் வி.கழகத்தின் ஆதிக்கத்துடன் முடிவடைந்தது. ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் திக்கம் பழிதீர்க்கும் என்ற எதிர்பார்ப்புக்கள் பரவலாக இருந்த போதிலும் எதிர்பார்ப்புக்களை ஒன்றுமில்லாமல் செய்து 10ஆவது, 12ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரண்டு கோல்களை விளாசி 3:0 என்ற கோல்கணக்கில் இலகு வெற்றிபெற்றது அந்தோனியார் புரம் வி.கழகம். (ம-108)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 24

வடமாகாண உடற்கல்வி டிப் ளோமா ஆசிரியர் சங்கம் வலி காமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மாதகல் சென்.தோமஸ் யுத் அணியை எதிர்த்து சக்கோட்டை சென்.சேவியர் அணி மோதவுள்ளது. தொடர்ந்து பிற்பகல் 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தெல்லிப்பழை நாமக்கல் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதவுள்ளது. (ம-23)

## கலாநிதியை வீழ்த்தியது சில்வேஸ்ரர்



யாழ்ப்பாணம், ஓக. 24

அராலி ஏ.எல். விளையாட்டுக்கழகமும் அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அராலி சில்வேஸ்ரர் அணியை எதிர்த்து காரைநகர் கலாநிதி அணி மோதிக் கொண்டது. இதில் அராலி சில்வேஸ்ரர் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## சென்.மேரிஸ் அரையிறுதிக்குத் தகுதி

கரணவாய், ஓக. 24

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொலிகண்டி பாரதி வி.கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரில் இளைஞர் வி.கழகத்தை வீழ்த்தி அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதிபெற்றது சென். மேரிஸ் வி.கழகம்.

பாரதி வி.கழக மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தின் முதல் பாதியின் 5 ஆவது நிமிடத்திலேயே திக்கம் அணியின் சார்பாக கோலொன்று பதிவாகியது. 15 ஆவது நிமிடத்தில் யக்சன் பதில் கோலைப் பதிவுசெய்து பழிதீர்க்க ஆட்டம் சமநிலையானது. சமநிலைத் தன்மையுடனேயே முதல் பாதி முடிவடைந்தது.

இரண்டாம் பாதியின் 4 ஆவது நிமிடத்தில் சென். மேரிஸ் சார்பாக சாள்ஸ் மேலும் ஒரு கோலைப் பதிவுசெய்ய சென்.மேரிஸின் ஆதிக்கம் ஆரம்பமானது. ஆட்டத்தின் விறுவிறுப்புத் தன்மைக்கு ஏற்ப அவ்வப்பொழுது விதிமீறல்களும் ஏற்படவே செய்தன. இரு அணியிலிருந்தும் ஒவ்வொரு வீரர் சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றப்பட்டனர். ஆனால் கோல் கணக்கில் மாற்றம் ஏற்படுவதாவில்லை. 2:1 என்ற சென்.மேரிஸின் ஆதிக்கத்துடன் ஆட்டம் இழுபட முடிவில் சென். மேரிஸ் வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதிபெற்றது. (ம-108)



*நேற்றுமுன்தினம் சனிக்கிழமை களுத்துறை மாவட்டத்தில் இடம்பெற்ற 41 ஆவது தேசிய மட்ட வேக நடைப் போட்டியில் வடமாகாண பெண்கள் அணி வெண்கலப்பதக்கத்தை கைப்பற்றியுள்ளது. (ம-23)*

## சம்பியனானது தெல்லிப்பழை இளைஞர் கழகம்

யாழ்ப்பாணம், ஓக். 24

யாழ். மாவட்ட இளைஞர் சம்மேளனத்தினால் பிரதேச இளைஞர் சம்மேளனங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் கபடித் தொடரின் ஆண்கள் பிரிவின் இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி சம்பியன் ஆனது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அரியாலை ஐக்கிய சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி மோதிக்கொண்டது. இதில் தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி 24:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. (ம-23)

## யூனியனை பந்தாடியது ரோயல்

யாழ்ப்பாணம், ஓக. 24

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதிக்கொண்டது. இதில் ஊரெழு றோயல் அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



நேற்று முன்தினம் சனிக்கிழமை களுத்துறை மாவட்டத்தில் இடம்பெற்ற 41ஆவது தேசிய மட்ட மரதன் ஓட்டப் போட்டியில் வடமாகாணத்தை பிரதிநிதித்துவப் படுத்தி பங்கு பற்றிய வவுனியா மாவட்டத்தைச் சேர்த்த நவநீதன் 9ஆவது இடத்தினைப் பெற்றுள்ளார். (ம-23)

## சேரீனா, இவானோவிச் காலிறுதியில் மோதல்

அமெரிக்காவின் சின்சினாட்டி நகரில் நடைபெற்றுவரும் சின்சினாட்டி ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டமொன்றில் செரீனா வில்லியம்ஸ் மற்றும் இவானோவிச் பலப்பரீட்சை நடத்தவுள்ளனர். காலிறுதிக்கு முன்னைய சுற்றான மூன்றாவது சுற்றில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் உலகின் முதல் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 6-0, 6-2 என்ற நேர் செட்களில் இத்தாலியின் கரீன் நேப்பை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். இவானோவிச் ஏற்கனவே காலிறுதிக்கு தகுதிபெற்றிருந்த நிலையில் இவ்விருவரும் இரண்டாவது காலிறுதியில் மோதவுள்ளனர். (ம)



## பெடரர், ஜோகோவிக் இருவரும் காலிறுதியில்



அமெரிக்காவின் சின்சினாட்டி நகரில் நடைபெற்றுவரும் சின்சினாட்டி ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஜோகோவிக், பெடரர் இருவரும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர். காலிறுதிக்கு முன்னைய சுற்றான மூன்றாவது சுற்றில் ரோஜர் பெடரர் 6-1, 6-1 என்ற நேர் செட்களில் தென்னாபிரிக்காவின் கெவின் அண்டர்சனை தோற்கடித்தார். பெடரர் தனது காலிறுதியில் ஸ்பெயினின் பெலிஸியானோ லோபஸை சந்திக்கிறார்.

மற்றொரு 3ஆவது சுற்றில் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே 3 மணி நேர போராட்டத்துக்குப் பிறகு 4-6, 7-6, 7-5 என்ற செற் கணக்கில் பல்கேரியாவின் கிரிகோர் டிமிட்ரோவை தோற்கடித்தார். ஜோகோவிச் 6-4, 2-6, 6-3 என்ற செட் கணக்கில் பெல்ஜியத்தின் டேவிட் கோபினை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். இவர் தனது காலிறுதியில் சுவிட்சர்லாந்தின் ஸ்டானிஸ்லஸ் வாவ்ரிங்காவை சந்திக்கிறார். வாவ்ரிங்கா தனது 3ஆவது சுற்றில் 6-7, 7-6, 7-6 என்ற செற் கணக்கில் குரேஷியாவின் கார்லோவிச்சை வீழ்த்தினார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடுப்பெடுத்தாடுவதுக்கு விடைகொடுத்தார் சங்கா

## வெற்றிபெற இன்னமும் 341 ஓட்டங்கள் இலங்கைக்குத் தேவை



இந்தியா – இலங்கை அணிகளுக்கிடையே நடைபெற்றுவரும் மூன்று ஆட்டங்களைக்கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டத்தின் நான்காம் நாளில் 413 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை 72–2 என்ற நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவர் கோக்லி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். ராகுலின் சதம் மற்றும் ரோகித் சர்மா, கோக்லி, சகா மூவரினதும் அரைச்சதம் கைகொடுக்க முதல் இன்னிங்ஸிற்காக இந்தியா 393. பந்துவீச்சில் இலங்கை சார்பில் ஹேரத் 4 இலக்குகளையும் சமீர,மத்தியூஸ்,பிரசாத்மூவரும்தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

394 ஓட்டங்களைப் பெற்றால் முன்னிலைபெற்றுவிடலாம் என்ற முனைப்பில் களமிறங்கிய இலங்கை 306 ஓட்டங்களில் சுருண்டது. பந்துவீச்சில் இந்திய சார்பாக மிர்ஷா 4 இலக்குகளையும் அஸ்வின், இசாந்த் தலா 2 இலக்குகளையும் யாதேவ், பின்னி தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினார்.

87 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்த நிலையில் மேற் கொண்டு அணியைப் பலப்படுத்தும் நோக்கில் களத்தில் ராகுல் மற்றும் முரளி விஜய். இரண்டே ஓட்டங்களுடன் போல்ட்டானார் ராகுல். மூன்றாவது வீரராக களமிறங்கினார் ரஹானே. மந்தமான வெளிச்சத்துக்கு ஏற்றால்போல் நிதானித்துக்கொண்டிருந்தனர். மேற்கொண்டு இலக்குகள் வீழ்த் தப்படவில்லை. மூன்றாம் நாள் முடிவில் இந்தியா 70–1. விஜய் 39 ஓட்டங்களுடனும் ரஹானே 28 ஓட்டங்களுடனும் நான்காவது நாளுக்காக களமிறங்கினர். இணைப் பாட்டம் நிலைத்து நின்றது. ஆட்டத்தை இடைநிறுத்தி இலங்கைக்கு வாய்ப்புக்களை வழங்கும் வியூகத்தில் ஓட்டங்களை வேகமாக குவிக்கத் தொடங்கினார் விஜய். ஆனால் ரஹானேயின் ஆட்டத்தில் மாற்றமில்லை. அதே நிதானம் தொடர்ந்தது. 82 ஓட்டங்களுடன் விஜய்யின் ஆட்டம் நிறைவுக்கு வந்தாலும் தொடர்ந்தும் நிலைத்து நின்று சதம் கடந்தார் ரஹானே. 126 ஓட்டங்களுடன் ரஹானே ஆட்டமிழந்தார். பின் வரிசை வீரர்களும் விஜய்யின் பாணியிலேயே ஓட்டங்களைக் குவிக்க தீவிரம் காட்டினர். இந்தியா 325–8 என்ற நிலையில் இருந்த பொழுது ஆட்டத்தை இடை நிறுத்தினார் கோக்லி. இலங்கைக்கு வெற்றியிலக்கு 413 ஓட்டங்கள். ஒரே ஓட்டத்துடன் ஏமாற்றினார் சில்வா. அதிரடிகாட்டி பாதியிலேயே ஆட்டமிழந்தார் சங்கா. இம்முறையும் அஸ்வினே சங்காவுக்கு வில்லனானார். இந்திய வீரர்கள், ரசிகர்கள், முன்னாள் வீரர்கள், பள்ளிப் பருவ கிரிக்கெட் வீரர்கள், குடும்பத்தவர்கள், நெருங்கிய நண்பரான மஹெல, ரசிகர்கள் என்று அத்தனை பேரும் சங்காவுக்கான மரியாதையை சிறிதும் தவறில்லாமல் அப்படியே தெரிவித்தனர். சச்சினின் கடைசி ஆட்டத்தின் பொழுது சச்சினின் பிடியெடுப்பை நிகழ்த்திவிட்டு மனம்வருந்திய டரன் சமி போல கோக்லி ஒருபடி மேலே சென்று ஆட்டமிழக்கச் செய்தமைக்கான அனுதாபத்தைத் தெரிவித்தார். நாள் முடிவில் இலங்கை 72–2. மத்தியூஸ் 23 ஓட்டங்களுடனும் கருணாரத்ன 25 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர். (ம)

## நியூஸி. தக்க பதிலடி

தென்னாபிரிக்கா நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று ஆட்டங்களைக்கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் 8 இலக்குகளால் வெற்றிபெற்று முதலாவது ஆட்டத்தில் அடைந்த தோல்விக்கு தக்க பதிலடி கொடுத்துள்ளது நியூஸிலாந்து.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க ஆரம்ப வீரர்களாக களத்தில் அம்லா மற்றும் வான் வைக். இருவருமே ஏமாற்றினர். அம்லா 8 ஓட்டங்களுடனும் வான்வைக் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க தென்னாபிரிக்கா 20 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் ஆரம்ப வீரர்கள் இருவரும் களத்தில் இல்லை. தற்பொழுது களத்தில் ரொஸ்சொவ் மற்றம் வில்லியர்ஸ். இருவரும் அதிரடி வீரர்களாக இருந்த போதிலும் இலக்குச்சரிவை உணர்ந்து நிதானிக்கவே செய்தனர். இருப்பினும் இணைப்பாட்டம் நீடிக்கவில்லை. 39 ஓட்டங்களுடன் விடைபெற்றார் ரொஸ்சொவ். 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் வில்லியர்ஸ். வந்த வேகத்தில் பவிலியன் திரும்பினார் மில்லர். தற்பொழுது தென்னாபிரிக்கா 107–5. நீண்ட இடைவெளியின் பின்னர் நிலைத்து நின்றார் பெக்கார்டின். பெக்கார்டினுக்கு உதவியாக பிளன்டர் தாக்குப்பிடிக்க தென்னாபிரிக்காபடிப்படியாககௌரவநிலையை அடைய ஆரம்பித்தது. அரைச்சதம் கடந்து 70 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பெக்கார் டின். பின்வரிசை வீரர்கள் நிலைக்க வில்லை. முடிவில் தென்னாபிரிக்கா 204 ஓட்டங்களில் சுருண்டது.

205 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற மிகமிக இலகுவான இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்துக்கு ஆரம்பம் அசத்தலாக அமைந்தது. இணைப்பாட்டத்தில் மிரட்டிக் கொண்டிருந்தனர் குப்திலும் லாதமும். இலக்கு மிக இலகுவானது என்ற காரணத்தினால் தேவையான பந்துகளையும் எடுத்துக்கொண்டனர். ஆளுக்கொரு அரைச்சதம் கடக்க இணைப்பாட்டம் நூறினை எட்டியது. கூடவே நியூஸிலாந்தின் வெற்றியும் கிட்டத்தட்ட உறுதியாகியது. அணியின் ஓட்ட எண்ணிக்கை 126ஆக இருந்தபொழுது 64 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் லாதம். குப்திலுடன் இணைந்தார் வில்லியம்சன். இணைப்பாட்டம் நிலைக்கவில்லை. ஏழே ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார் வில்லியம்சன். இருப்பினும் தொடர்ந்தும் களத்தில் நின்று இறுதிவரை நம்பிக்கை கொடுத்து சதம் விளாசி ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் குப்தில். (ம)



## இன்னிங்ஸ் வெற்றியுடன் விடைபெற்றார் கிளார்க்

## 3–2 என்று ஆஷஸைக் கைப்பற்றியது இங்கிலாந்து




இங்கிலாந்து ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான ஆஷஸ் தொடரின் ஐந்தாவதும் இறுதியுமான ஆட்டத்தில் இன்னிங்ஸாலும் 46 ஓட்டங்களாலும் வெற்றிபெற்று கிளார்க், றொயேர்ஸ் இருவரையும் வெற்றியுடன் வழியனுப்பியது ஆஸ்திரேலியா.


நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானிக்க சிமித்தின் சதம் மற்றும் வோர்ணர். வோக்ஸ், ஸ்ராக் மூவரினதும் அரைச்சதங்களின் உதவியுடன் ஆஸ்திரேலியா 481 ஓட்டங்களைக் குவித்தது. பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக மொயீன், பின், ஸ்ரோக்ஸ் மூவரும் தலா 3 இலக்குகளையும் வூட் ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

482 ஓட்டங்களைப் பெற்றால் முன்னிலை பெற்றுவிடலாம் என்ற நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து 149 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக மொயீன் 30 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக மார்ஷ், ஜோன்சன் இருவரும் தலா 3 இலக்குகளையும், சிடில், லியோன் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இங்கிலாந்தை இன்னிங்ஸ் தோல்வியடையச் செய்யக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக இருந்ததால் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸிலும் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார் கிளார்க். இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க வேண்டுமாயின் 332 ஓட்டங்களைப் பெற வேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்கிய இங்கிலாந்து மீண்டும் அடிக்குமேல் அடிவாங்கியது. 19 ஓட்டங்களிலேயே இணைப்பாட்டம் பிரிக்கப்பட்டது. 10 ஓட்டங்களுடன் விடைபெற்றார் லைத். குக் ஒருமுனையில் நிலைத்து நின்றாலும் மறுமுனை வலுவானதாக அமையவில்லை. பெல் 13 ஓட்டங்களுடனும், ரூட் 11 ஓட்டங்களுடனும், ஸ்ரோக்ஸ் ஓட்டங்கள் எதனையும் பெறாமலும் ஆட்டமிழக்க இன்னிங்ஸ் தோல்வியை நோக்கி நடைபோட ஆரம்பித்தது இங்கிலாந்து. குக்குடன் இணைந்தார் பரிஸ்ரெளவ். இணைப்பாட்டம் சிறிது நேரம் தாக்குப்பிடித்தது. தொடர்ந்தும் நிலைபெற முடியாமல் 26 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் பரிஸ்ரெளவ். டக்கில் வெளியேறினார் ஸ்ரோக்ஸ். பட்லர் நிலைத்தாலும் குக் 85 ஓட்டங்களுடன் (234 பந்துகள்) ஆட்டமிழந்தார். கிரிக்கெட்டின் தாயகத்துக்கு ஆதரவாக மழையும் அவ்வப்பொழுது வேடிக்கை காட்டிக்கொண்டிருந்தது. இருப்பினும் இங்கிலாந்தை விதி விடுவதாக வில்லை. இரண்டு மணிநேரம் தாமதமாக ஆட்டம் ஆரம்பமாகினாலும் ஆஸியின் வலையில் அப்படியே விழுந்து இன்னிங்ஸ் மற்றும் 46 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது இங்கிலாந்து. இறுதியாட்டத்தில் தோல்வியடைந்தாலும் தொடரை 3–2 என்று கைப்பற்றியதும் கிரிக்கெட்டின் தாயகம்தான்.(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலிறுதியை தவறவிட்டார் நடால்



அமெரிக்காவின் சின்சினாட்டி நகரில் நடைபெற்றுவரும் சின்சினாட்டி ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயினின் ரபேல் நடால் சக நாட்டவரான லோபஸிடம் தோல்வியடைந்து காலிறுதிக்கு தகுதி பெறாமல் வெளியேறினார்.
காலிறுதிக்கு முன்னைய சுற்றான மூன்றாவது சுற்றில் முதல் செற்றை 5–7 என்ற கணக்கில் நடால் கைப்பற்றி னாலும், இரண்டாவது, மூன்றாவது செற்களை 6–4, 7–6 என்ற கணக்கில் இழந்து போராடித் தோல்வியடைந்தார். சர்வதேச அந்தஸ்தைப் பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்கன் ரென்னிஸ்தொடர் ஆரம்பமாக இன்னும் சில தினங்களே உள்ள நிலையில் நடாலின் இந் தத் தோல்வி அவரது ரசிகர்களிடையே பெரும் அதிருப் தியை ஏற்படுத்தியுள்ளது. (ம)

# இடைவிலகினார் பென்சிக்




அமெரிக்காவின் சின்சினாட்டி நகரில் நடைபெற்றுவரும் சின்சினாட்டி ரென்னிஸ் தொடரிலிருந்து இடைவிலகியுள்ளார் பென்சிக்.
பெண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்கு தகுதிபெறும் ஆட்டத்தில் ஞாயிஸ் சபரோவாவை எதிர்த்து பென்சிக் மோதினார். இந்த ஆட்டத்தின் முதல் செற்றை சபரோவா 6–2 எனக் கைப்பற்றினார். இந்நிலையில் 2ஆவது செற் தொடங்கும் நேரத்தில் பென்சிக் ஆட்டத்தில் இருந்து விலகுவதாக அறிவித்தார். இதனால் சபரோவா காலிறுதிக்கு முன்னேறினார். விலகியதற்கான காரணத்தை பென்சிக் தெரிவிக்கவில்லை. (ம)

Ful fill your career Dreams @ IIS
where personal attention leads to professional achievement
PEARSON edexcel
HND in
Computing And Systems Development



BSc.IT
Bachelor of Science in Information Technology
Hotline
071 777 5666
Batch Begin
29.08.2015
IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Web: www.iis.edu.lk

## பார்சிலோனாவில் இருந்து செல்சியாக்கு

ஸ்பெயின் நாட்டு கால்பந்து அணியின் நட்சத்திர முன்கள வீரரான பெட்ரோ ரோட்ரிகஸ் அந்நாட்டின் தலைசிறந்த கழக அணியான பார்சிலோனா அணியில் விளையாடி வந்தார். இவர் தற்போது செல்சியா அணிக்காக விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். செல்சியா அணிக்காக விளையாடுவது தொடர்பாக ரொட்றிகஸ் தெரிவித்ததாவது:– நான் செல்சியாவில் இடம் பெற்றதற்காக மகிழ்ச்சி அடைகிறேன். அதேநேரம் பார்சிலோனா என்னை புறக்கணித்தமைக்காக கவலையடைகிறேன். எது எவ்வாறாயினும் இனி எனது அணி செல்சியா. எனவே செல்சியா கிண்ணங்களைக் கைப்பற்றப் போரிடுவேன். – என்றார். கடந்த 8 ஆண்டுகளாக பார்சிலோனாவின் முதன்மை அணிக்காக 58 கோல்கள் அடித்துள்ள ரொட்றிகஸ், 204 கோல்கள் அடிக்க உதவியாக இருந்துள்ளார்.


(09)

இலவச செயற்கைக் கால் வழங்கும் செயற்திட்டம்
Rotary
Be a gift to the world



றோட்டறி மாவட்டம் 2982 – சேலம் மற்றும் யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம் ஆகியன இணைந்து போரினால் கால்களை இழந்தவர்களுக்காக ஒரு தொகுதி செயற்கைக் கால்களை இலவசமாக வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.
மேற்படி உதவியினைப் பெறுவதற்க தேவையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
மேலதிக விபரங்களுக்கும், பதிவுகளுக்குமாகக் கீழ் வரும் முகவரியிலும், தொலைபேசி ஊடகவும் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம்.
றொட்டேரியன் எஸ். அனுராஜ்
தலைவர்
யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம்
359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
0215 67 57 47

## 75 கோடிக்கு ஒப்பந்தமான சாய்னா



பூப்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் இறுதியாட்டம் வரை முன்னேறி வெள்ளிப் பதக்கம் கைப்பற்றிய சாய்னா நேவால் பிரபலமான விளம்பர நிறுவனம் ஒன்றினால் 75 கோடி ரூபாவுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.
இந்த ஒப்பந்தம் இரண்டு ஆண்டுகள் வரை செல்லுபடியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்த விளையாட்டு நிறுவனம் ரெய்னா, குத்துச்சண்டை வீராங்கனை மேரிகோம், வீரர் விஜயேந்தர்சிங், மல்யுத்த வீரர் சுனில்குமார் ஆகியோர் ஏற்கனவே ஒப்பந்தம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# இந்தியா ஆயிரம் சிக்சர்கள்

இந்தியா – இலங்கை அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் ரோகித் சர்மா விளாசிய இரண்டாவது சிக்சர் டெஸ்ட் ஆட்டங்களில் இந்தியாவின் ஆயிரமாவது சிக்சராக அமைந்துள்ளது.
கடந்த 1932ஆம் ஆண்டு முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடி வரும் இந்தியா, தற்போது கொழும்பில் நடைபெறும் தனது 492ஆவது டெஸ்டில் விளையாடுகிறது. இந்த ஆட் டத்தில் இந்தியா ஆயிரம் சிக்சர்களைத் தாண்டி சிக்சர்களுக்கான தரப் படுத்தலில் 6ஆவது இடத்தில் உள்ளது.
[illegible] ஆஸ்திரேலியா 1490 சிக்கசர்களுடன் முதலாவது இடத்திலும் மேற்கிந்தியத் தீவுகள் 1435 சிக்சர்களுடன் இரண்டாவது இடத்திலும் இங்கிலாந்து 1425 சிக்சர்களுடன் மூன்றாவது இடத்திலும் நியூஸிலாந்து 1078 சிக்சர்களுடன் நான்காவது இடத்திலும் பாகிஸ்தான் 1010 சிக்சர்களுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளன.

(ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org